
கல்கி

KALKI 8.1.89 ரூ. 2.



இரும்புத்திரை இளகுகிறதா..?



வண்ண வண்ணத்
திருவிழாவிலே—மங்கை
எண்ணமதைக் கவர்ந்திடுவாள்!
திருவிழாக் காலங்களில் திருமகளெனக் காட்சி அளிப்பீர்,
எண்ணற்ற பட்டுப்புடவைகளின் வண்ண ஜாலத்திலே!
நிகரற்ற தரம். எண்ணிலடங்கா டிசைன்கள்.
இன்முகத்துடன் சேவை. இவை அனைத்திற்கும் சிறந்த
ஷோ-ரூம்... லக்ஷ்மி சில்க் ஹவுஸ்!
shmi Silk House
ஞாயிற்றுக்கிழமைகளில்
திறந்திருக்கும்.
லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
பனகல் பார்க் எதிரே, மாடியிலே தி-நகர், சென்னை 600 017.
Our Associate: லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
மாதுங்கா (மத்திய ரயில்வே), பம்பாய் 400 019.
நினைவிருக்கட்டும், எங்கள் ஷோ-ரூம் மாடியில் உள்ளது.

மாணவர் நலனுக்கு ஒரு மையம்



* மருத்துவச் சிகிச்சை தேவைப்படுகிறவர்களைப் பட்டியலிட்டு உதவ மதுரவாயல் கிராமத்தில் பரிசோதனை நடத்தும் மாணவர்கள்.

ராஜேஷ் பி. ஏ. முதல் வருட மாணவன். ஒருவித தாழ்வு மனப்பான்மையில் தவித்துக் கொண்டிருந்தான். மற்ற மாணவர்களுடன் கலகலவென்று பழக மாட்டான். ஆசிரியர் பாடம் நடத்தும் போது, ஏதாவது சந்தேகம் என்றால்கூட, எழுந்து தைரியமாய்க் கேட்க மாட்டான். தாழ்வு மனப்பான்மையை எப்படிப் போக்கிக் கொள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. கல்லூரி வளாகத்தினுள் ஓர் அறைக்கு வெளியே "மாணவர்கள் ஆலோசனை மையம்" என்கிற போர்டு இருப்பதை ஒருநாள் கவனித்தான். எப்படியோ துணிச்சலைத் திரட்டிக் கொண்டு உள்ளே சென்று, பேராசிரியர் சடகோபனைச் சந்தித்தான். அவர் மிக்க அனுதாபத்துடன், இவன் பிரச்னையைக் கேட்டு அறிந்தார். சில அறிவுரைகளை வழங்கினார். ராஜேஷ் அடியோடு மாறிப் போனான்.

சுகுமார் மாலைக் கல்லூரி மாணவன். பகல் முழுவதும் வீட்டில் சும்மா இருக்க வேண்டும். இது அவனுக்கு 'போர'டித்தது. மாணவர் ஆலோசனை மையத்தின் பேராசிரியர் சடகோபனின் உதவியை நாடினான். அவர், அவனுக்கு ஒரு தனியார் நிறுவனத்தில், வேலை வாங்கித் தந்தார்.

ரவிகுமார் எம். எஸ்ஸி. மாணவன். முதுகலைப்பட்டப் படிப்பு முடித்தவுடன் அமெரிக்காவில் ஏதாவது பல்கலைக் கழகமொன்றில் சேர்ந்து, மேற்கொண்டு படிப்பைத் தொடர ஆர்வம் அவனுக்கு. போதிய பணவசதியும் இருந்தது. ஆனால், எந்தப் பல்கலைக் கழகத்தில் எப்படிச் சேர்வது? என்றெல்லாம் தெரியவில்லை. அவன் மாணவர்கள் ஆலோசனை மையத்திற்கு வந்தான். அவனுக்குத் தேவையான தகவல்கள் கிடைத்தன.

* மாண்வர்களுக்கு ஆலோசனை வழங்க வந்தவர்கள்......



சென்னை அரும்பாக்கம் வைணவக் கல்லூரியில்தான். இந்த மையம் மாணவர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, இயங்கி வருகிறது. இம்மையத்தில் உள்ள ஆலோசகர் பேராசிரியர் சடகோபன் (எழுத்தாளர் சாண்டில்யனின் மகன்). அவரைச் சந்தித்தோம். "மாணவர்களுக்கு எந்தத் தகவல் தேவையானாலும், கிடைக்கச் செய்கிறோம். இங்கே தேவையான விவரம் இல்லையெனில் விசாரித்து அறிவோம். மாணவனுக்கு ஏமாற்றமளிப்பதில்லை" என்றார்.

"எந்த அம்சத்தில் உங்களுக்குச் சிரமம் அதிகம்?"

"பகுதிநேர வேலை வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. சனி, ஞாயிறுகளிலும், மற்றும் கல்லூரி விடுமுறையின் போதும்

வேலை செய்து சம்பாதிப்பதில் நிறைய மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். வீடு வீடாய்ச் சென்று மார்க்கெட்டிங் ரிசர்ச் நிறுவங்களுக்குத் தேவையான விவரங்களைச் சேகரித்து வருவது, கம்பெனிகளின் தயாரிப்புக்களை — குறிப்பாக கன்ஸ்யூமர் பொருட்களை — வீடு வீடாய்ச் சென்றும், கடைத் தெரு, ரயில் நிலையங்களிலும், விற்பனை செய்வது போன்ற பணிகளை மாணவர்கள் ஆர்வமுடன் செய்கிறார்கள்.''

''படிப்பு முடிந்த பிறகு நிரந்தர வேலைக்கு உதவுவீர்களா?''

''வேலையை நாங்கள் உறுதி செய்ய முடியாது. ஆனால் இயன்றவரை உதவுகிறோம். உதாரணமாக 'Career talks'-க்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். விற்பனைப் பிரதிநிதிகளாகப் பணிபுரிய ஏராளமான, திறமையான இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே அந்தத் துறையில் பணியாற்ற என்னென்ன தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன? அவற்றை எப்படி வளர்த்துக் கொள்வது? அத்துறையில் உள்ள வாய்ப்புக்கள் என்ன என்பது பற்றியெல்லாம் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லும் விதமாய், 'லெக்சர்'களுக்கு ஏற்பாடு செய்வோம். அதேபோல, இன்று பெருகி வரும் கம்ப்யூட்டர் துறை, அதில் கணக்குகளைப் பதிவு செய்வது போன்றவை குறித்து தக்கவரைக் கொண்டு லெக்சர்களுக்கு ஏற்பாடு செய்கிறோம்.

''சென்ற வருடம், எங்கள் மாணவர்கள் பலர் ஐ. ஏ. எஸ். தேர்வு எழுத விருப்பம் கொண்டு, எங்களை அணுகினார்கள். இதற்குப் பயிற்சியளிக்கும் நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் ஒரு குறுகிய காலப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தோம்.

''அரசாங்க வேலைகளை மட்டுமே நம்பிக் கொண்டிருக்காமல், சுயமாய்த் தொழில் தொடங்கவும் ஊக்குவிக்கிறோம். இதற்கு வழிகாட்டி உதவிய காரணத்தால் ஒரு மாணவர் மாட்டுப் பண்ணை நடத்துகிறார். இன்னொருவர் ஸ்கிரீன் பிரிண்டிங் ஆரம்பித்தார். இதுபோல இன்னும் சிலர்...''

'இப்படிப்பட்ட தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கத்தான் வேண்டும்' என்ற எண்ணத்துடன் விடைபெற்றோம்.

— எஸ். சந்திரமௌலி.



''எங்க ஆபீஸ்ல லஞ்சக் கண்காணிப்புப் பிரிவுன்னே ஒரு பிரிவு இயங்குது...''

''ஓஹோ...! லஞ்சத்தைத் தடுக்க நல்ல ஏற்பாடா இருக்கே!''

''நீங்க ஒண்ணு... வாங்கற லஞ்சம் எல்லாருக்கும் சரியாப் பிரிச்சுக் கொடுக்கப்படுதான்னு கண்காணிக்கத்தான்...''


— திருக்குவளை பவித்ரமரியா.

போலீஸ்: உங்க வீட்டிலே திருட்டுப் போகும் போது, நீங்க வீட்டில் இருந்தும் ஏன் சத்தம் போடவில்லை...?

வீட்டுக்காரர்: என் மனைவி வீட்டில் இருந்தா நான் வாயே திறக்க மாட்டேன் சார்!

— தேனி. எஸ். மாரியப்பன்.






''சேகர்... நாம் காதலிக்கிறது எங்கப் பாவுக்குத் தெரிஞ்சு போச்சு...!''

''ஐயய்யோ... என்ன சொன்னார்?''

''யார் அந்த அசடுன்னு கேட்டார்!''

— கோனேரி பப்லு.

வலிமை இதன் பொலிவு



"முரட்டு உடம்பில் முரட்டு இதயம்"

தவறாகச் சொன்னதற்கு மன்னிக்கவும். ஆனால், கெல்வினேட்டர் ரெஃப்ரிஜெரேட்டருக்கு இதுதான் பொருத்தமான வர்ணனை.

இதற்கு வலுவூட்டுவது இதன் முரட்டு இதயம்தான்-அதாவது 'மின்சாரத்தை மிச்சப்படுத்தும்' கம்ப்ரெஸ்ஸர். வெளிப்புறத் தட்ப வெப்பம் எப்படி இருந்தாலும், இது விரைந்து குளிரச் செய்கிறது. வெகு விரைவில் ஐஸ் உண்டாக்குகிறது. குறைந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்தி தன் பெயரையும் புகழையும் நிலைநாட்டுகிறது. மேலும், வோல்ட்டேஜ் வேறுபாடு எவ்வளவாக இருந்தாலும், இதன் அமைதியான இயக்கம் தடைப்படுவதில்லை.


வலிமை மிக்க பாடி, கோல்டு ரோல்டு ஸ்டீல் மற்றும் ஏபிஎஸ் லைனர் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே இதன் உட்புறத்திற்கும் வெளிப்புறத்திற்கும் கூடுதல் வலு கிடைத்து, நீண்ட காலம் உழைக்கிறது.

உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். இதில் எவ்வளவோ பொருட்களை வைக்கலாம். ஏனெனில், அதிக அளவு இடவசதிக்காக, மூலைமுடுக்குகள் இன்றி மிகவும் கவனமாக இதன் உட்புறம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக பற்பல மாடல்கள், கண்ணைக் கவரும் வண்ணங்களில்.

ஆக, உங்களுக்குக் கிடைப்பதோ ஒரு முரட்டு ரெஃப்ரிஜெரேட்டர் அமைதியாக இயங்க உருவாக்கப்பட்டது.

விற்பனை மற்றும் சர்வீஸ் செய்வோர் :
எக்ஸ்போ மெஷினரி லிமிடெட்
பிரகதி டவர் 26, ராஜேந்திர பிளேஸ்
புதுதில்லி-110008





கெல்விணேட்டர்

ரெஃப்ரிஜெரேட்டர்

"மிகவும் விரைவாக குளிர்பதனப்படுத்துவதில் ஈடு இணையற்றது."

'தேர்தல் சானல்'

தேர்தல் நேரம். டீ. வி. நிகழ்ச்சிகள் சிலவற்றை நம் அரசியல்வாதிகள் அளிக்கிறார்கள்:

மணைமாட்சி:

'ஆட்சி அல்வா' தயாரிப்பது பற்றிச் செல்வி ஜெயலலிதா விளக்குகிறார்:

செல்வி ஜெயலலிதா: முதலில் இரட்டை இலை பிராண்ட் மாவில் ஒரு கிலோவை எடுத்துக் கொள்ளவும். புழு, பூச்சி, எறும்பு, ஈ மற்றும் உதிர்ந்த ரோமங்கள் என்று நமக்குத் தொந்தரவு தரும் சமாசாரங்களைத் தூக்கி எறியவும். பிறகு புழு வந்து, உங்களுடன் ஒட்டிக் கொள்ளும் பட்சத்தில், சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. எடுத்த மாவோடு 'அரை வேக்காடு பேச்சு' அரை ஆழாக்கு கலந்து, நன்றாய்ப் பிசைய வேண்டும். 'எம். ஜி. ஆர். கனவு' மார்க் நெய்யை வேண்டிய மட்டும் ஊற்றி, கொதிக்க விடவும். கொதிக்கும்போது 'வாக்குறுதிச் சர்க்கரை'யைச் சற்று அளவுக்கு அதிகமாகச் சேர்க்கவும்.

முடிந்தால் கூட்டணி வாசனைப் பொடி சேர்க்கலாம். 'ஜானகி' அல்லது 'டில்லி' டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்தான் அதை விற்பனை செய்கிறது. இரண்டும் சில சமயம் நாற்றமடிக்கலாம். சேர்க்காமல் விட்டு விடவும்.

பிறகு தெருநாய் மார்க் பச்சைக் கல்பூரம் ஒரு சிட்டிகை சேர்த்து, ஆத்திர அவசரமாய்க் கிளறினால் 'ஆட்சி அல்வா' ரெடி!

பின்பு கருணாநிதி கண்ணில் காட்டாமல் பரிமாறவும்.

வயலும் வாழ்வும்:

தமிழ்நாடு வயலில் காங்கிரஸ் நெல் சாகுபடி செய்யும் முறைகள் பற்றி மூங்கில்பட்டி மூப்பனாருடன் ஒரு பேட்டி:

நிருபர்: தமிழ்நாடு நிலத்தில் ஏன் காங்கிரஸ் நெல்லை விதைக்கிறீர்கள்?

மூப்பனார்: கடந்த இருபது ஆண்டுகளாகச் சாகுபடி செய்த திராவிட நெல்லில் அரிசியே இல்லை.

நிரு: இந்த நிலத்தில் காங்கிரஸ் நெல் விளையுமா?

மூ: அதற்கென்று பிரத்தியேகமாக முயன்றால் பயனடையலாம்!

நிரு: எந்த வகையில் முயற்சி செய்கிறீர்கள்?

மூ: முதலில் பக்கத்திலுள்ள விளைச்சல் நிலங்களை வரப்புக் கட்டிப் பிரித்து, நம் நிலத்தோடு சேர்த்துக் கொள்கிறோம். வாரம் ஒரு முறை டில்லியிலிருந்து ராஜீவ் கம்பெனி டிராக்டர் கொண்டு வந்து புரட்சித் தலைவர் பாணியில் உழுகிறோம். கூடவே, 'ஜா' அல்லது 'ஜெ' கூட்டணி பாஸ்பேட் மூன்று மடங்குடன், வன்னியர் சல்பேட் ஒரு மடங்கு கலக்கலாம். மேற்கண்ட உரங்கள் பயிரையே சாப்பிட்டுவிடும் பட்சத்தில் தவிர்த்து விடுவோம். பின்பு கலவையைக் 'காமராஜர் ஆட்சி'த் தெளிப்பானால் தெளித்து வருகிறோம். பகமையாகக் காங்கிரஸ் நெல் அறுவடை எதிர்பார்க்கலாம்.



முன்னோட்டம்:

(சொல்பவர் கலைஞர்)

திங்கள் மாலை ஆறு மணிக்குக் கண் மணிப்பூங்காவில் ''காத்திருந்தேன்! காத்திருந்தேன்'' நாட்டிய நாடகம். வழங்குவது கோபாலபுரம் கோமாதா பள்ளி மாணவர்கள்.

அன்று நலவாழ்வு நிகழ்ச்சியில் கட்சிக் குழந்தையைப் பாதிக்கும் வீக், மற்றும் வன்னிய நோய்களைப் பற்றி டாக்டர் கருணா அவர்கள் விளக்கக் கேட்கலாம்.

செவ்வாய் இரவு 7.30-க்கு உடன் பிறப்புக் கலா மன்றம் வழங்கும் 'இன்பக் கனவுகள்' நாடகம்.

புதன் இரவு நமது விருந்தினர் நிகழ்ச்சியில் 'வி. பி. சிங்'குடன் பேட்டி.

வியாழன் அன்று 8.00 மணிக்கு இளம் தென்றல் நிகழ்ச்சியில் 'வாரிசா — சிபாரிசா' தலைப்பில் கவியரங்கம். இதில் ஸ்டாலின்ராஜா, மாங்கனி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

சனியன்று காலை 9.30-க்கு நீங்கள் காணவிருக்கும் தெலுங்குப் படம் 'உதவிக்கு ஒஸ்தாரு!' இதில் என். டி. ஆர். மற்றும் பலர் நடித்துள்ளனர்.

ஞாயிறு மாலை 5.30-க்கு கலைஞர் எழுதித் தயாரித்த 'வோட்டைப் போட்டா, கோட்டையைக் கட்டா' தமிழ்ப்படம் ஒளிபரப்பாகும். இதில் ராதாரவி, ராதிகா, எஸ். எஸ். சந்திரன் முதலானோர் நடித்துள்ளனர்.



அறிவிப்புகள்:

நாளை நடக்கவிருக்கும் ஒரு 'தேர்தல் ஆபரேஷனுக்கு'ப் பப்ளிசிடி குரூப் இரத்தம் பல பாட்டில்கள் தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இரா. செழியன், சென்னை.

'ஜனதாஜி' என்ற ஐம்பது வயதுக் கிழவரைச் சென்ற பத்து ஆண்டு காலமாகக் காணவில்லை. காணாமற் போன அன்று கதர்ச் சட்டை அணிந்திருந்தார்.

இவரைப் பற்றித் தகவல் அறிந்தால் அவரை நீங்களே வைத்துக் காப்பாற்றுங்கள், புண்ணியம் உண்டு!

அகிலா கார்த்திகேயன்

நிதர்சன லாபம்


''தேர்தல்
வந்திடுச்சு...
ஜெயிச்சா... ஒரு
வாரு வாரிடுவோம்''
என்றார்கள், தலைவர்கள்.


''ஜெயிச்சா...
அண்ணன் மவனுக்கு ஒருவேலை''
என்றார் தொண்டர்.

யோசித்து....
யோசித்து....
''தேர்தல் வந்ததால்
ஜனநாயகம்
தழைத்தது'' என்றது
பத்திரிகை.


மார்கழிக் குளிரில்
விடைத்துக்
கிடந்த...
பிச்சைக்காரக் கிழவியிடம்
கிழவன்
கேட்டான்...
''தேர்தல் வந்ததால்
உனக்கென்ன
கிடைத்தது...?''
''குளிருக்குத் தோதாய்
இரண்டு
பெரிய போஸ்டர்கள்!''
என்றாள் கிழவி.

— எஸ்ஜிஆர்.







தடையற்ற தண்ணீர் கிடைக்க



மோனோபிளாக் பம்பு



ஜெட் பம்பு



போர்ட்பிள் பம்பு

A Product of
DLF UNIVERSAL LIMITED
American Universal Division

6, அவென்யூ ரோடு, நுங்கம்பாக்கம்,
சென்னை-600034, போன் : 477942,
தந்தி : குட் மோட்டார்ஸ்.

ஷா இஞ்சினியரிங் கோ. 153, தம்பு செட்டி தெரு, சென்னை-600001. போன்: 584850, 589936, சக்தி முருகன் டிரேடிங் கார்ப்பரேஷன் 160, ஜவஹர்லால் நேரு ரோடு, பாண்டிச்சேரி-605001. போன்: 24608, என்.எஸ்.கே. எலக்ட்ரிக் மோட்டார் கோ. 52, அருணாச்சல ஆச்சாரி தெரு, சேலம்-636001. போன்: 62037, தேவி & கோ. 180, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641018. போன்:26734, ஸ்ரீ லட்சுமி & கோ. 226, நேதாஜி சாலை, ஈரோடு-638001, ஆர்.எம்.எச். கார்ப்பரேஷன் (ஷோரூம்) அருணாச்சல மன்றம், கோட்டை, கிலேயம் சாலை, திருச்சி-620002. போன்: 26092, சந்திரா எலக்ட்ரோ மெகானிக்கல் கார்ப்பரேஷன் 290, மேல மாசி வீதி, மதுரை-625001. போன்: 25332, ராஜ் எண்டர்பிரைஸஸ் 7/1, பெரி பக்காளி தெரு, வேலூர்-632004. போன்: 21646, 23928, பி.ஆர். மணி வாட்ச் & ரேடியோ கோ. 142, ரத வீதி, திருவண்ணாமலை-606601. போன்: 2887, மீனாட்சி பாத்திரக் கடை 55/எ, தெற்கு ரத வீதி, சிதம்பரம்-608001. போன்: 2625, வி.கே.எம். எண்டர்பிரைஸஸ் 46 ரயில்வே ஸ்டேஷன் ரோடு, திருவாரூர்-610001. போன்: 2828, கவிமா எலெக்ட்ரிக் கோ. 206/1, திருநள்ளாறு ரோடு, காரைக்கால்-609602. வலம்புரி எலக்ட்ரிகல்ஸ் 9, தம்பயார் தெரு, பட்டுக்கோட்டை-614601, மணி மில் ஸ்டோர்ஸ் 722, தென்காசி ரோடு, ராஜபாளையம்-626117, ஆனந்த் குமார் டிவி சென்டர் பிருந்தாவன் பில்டிங்ஸ், பாரதி சாலை, கடலூர்-607001. போன்: 1061, ஆரிஞ்சி எலக்ட்ரிகல்ஸ் 2925, காந்தி ரோடு, ரயிலடி, தஞ்சாவூர்.

மதுரைக்காரத் தம்பி



தன்னை அவமானப்படுத்திய கல்லூரி மாணவியைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டு வருவதாய்ச் சூளுரைத்துப் புறப்பட்ட சின்னத்தம்பி ஒரு பக்கம். தன் குடும்பத்தை நிர்மூலமாக்கிய அரசியல்வாதியைப் பழி தீர்த்துக் கொள்ளக் கலவரம் புரியும் நக்சலைட் (போன்ற) தலைவர் பெரிய தம்பி ஒரு பக்கம். இப்படி ஒட்டாத இரண்டு தம்பிகளும் உண்மையில் அண்ணன் தம்பிகள் தான்; அந்த அரசியல்வாதிதான் அவர்கள் அப்பாவாக்கும் என்று 'கதை பண்ணி' இருக்கிறார்கள். சர்க்கரைப் பொங்கலில் பிரியாணியைக் கலந்து படைத்த மாதிரி இருக்கிறது.

மதுரைக்காரத் தம்பி ராம்கி (இவர் பூர்வாசிரமத்தில் அசல் மதுரைக்காரத் தம்பி தானாமே?) படம் முழுக்க நிறைந்திருக்கிறார். பெண்ணில்லாத குறையைத் தீர்த்துக் கொள்ளப் பாட்டி சண்முகசுந்தரி இவரைப் பெண் பிள்ளை போலவே வளர்த்தாராம். அதற்காக அலித்தனமாய் இடுப்பில் குடமேந்தி நடப்பதும் அதே பாணியில் பேசுவதுமாய் அறிமுகமாகிறார். அப்போது கதாநாயக அந்தஸ்தை இழந்தாலும் அநியாயத்தைக் கண்டு போராடும் ஆண் பிள்ளைச் சிங்கமாய் உயரும்போது வாக்குப் பெறுகிறார். இருந்தாலும் அலி ஜாதி புலி ஜாதியாய் மாறும் என்றால் என்னமோ உதைக்கிறதே.

கதாநாயகி ராதா கதாநாயகனுக்கு மேலே உசரம். ஸ்டண்ட் காட்சிகளில் படுபாந்தம். ஆனால் தன் காதலை நிரூபிக்க இப்படியொரு கொடுமை செய்யணுமா? நீச்சல் குளத்து மூலை விளிம்பிலே ராம்கியின் மேலே கவிழ்ந்து நெற்றியிலே, கன்னத்திலே, வாயிலே(!) என்று முத்தி, ஒவ்வொரு முறையும் 'இப்ப என்னைக் காதலிக்கிறியா இல்லையா?' என்று கேட்பதும் வேறே வழியின்றிக் கடைசியாய் ராம்கி ஒப்புக் கொள்வதும் கிளுகிளுப்புக்கு அப்பால் போயாச்சு.

ராம்கிக்கு நாலைந்து வருடங்களே மூத்த அண்ணன் விஜயகுமார் என்பதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் சண்டைக் காட்சிகளில் ஈடுகொடுக்கிறார். திறந்தவெளி நாலு சுவருக்கு நடுவே காதல் மனைவி பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருக்க, வெளியே எதிரிகளின் ஓயாத வெடியோசை கேட்டுக் கொண்டிருக்க, நடுவிலே இவர் ஏதும் செய்ய மாட்டாமல் மனைவியின் கால்மாட்டில் நின்று தவிப்பதிலிருந்து, பிறந்த குழந்தையுடன் வெளி வந்து எதிரிகளின் துப்பாக்கிக்கு இரையாகி மூச்சடங்கும் காட்சி வரை, உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறார்.

கலகலப்புக்குச் சின்னி ஜெயந்த் ஆஞ்சநேயர் வேடத்தில் வந்து, பக்தன் ராம்கியை அவர் நம்ப வைக்கப் படும்பாடு..... மெட்ராஸ் வார்த்தை ஒன்று இடையில் விழ— பின்னர் சமாளிப்பது... ஆஞ்சநேய பக்தர்கள் மனம் புண்ணாகாமல் இருக்க வேண்டுமே.

அந்த 'ரயிலு' சுதாகரா இந்த ஆள்? அரசியல்வாதி சீனிவாசனின் புத்திரசிகாமணியாம் இவர்! ரெண்டு பேரும் வரும் போதெல்லாம் ஒன்று பயங்காட்டி முழிக்கிறார்கள்; அல்லது பயந்து போய் முழிக்கிறார்கள்.

வில்லனுக்கு வில்லனாய் வரும் நட்ராஜ் தேவலாம். காதில் சுட்டு விரலால் கியர் போட்டால்தான் இவருக்குக் குயுக்தி ஸ்டார்ட் ஆகுமாம்.

பாவம் மணிமாலா! படம் முழுக்கப் பைத்தியமாகவே தரிசனம் தந்து, பைத்தியம் விலகும் கடைசிக் கட்டத்தில் பரமபதம் அடைகிறார்.

புதுக்கவிதையரசு மேத்தா சினிமாப் பாடல்களுக்கு இறங்கி விட்டாரே என்ற வருத்தம் எழுந்தாலும் சந்திரபோஸின் இசைக்கு வாகாய் வந்து விழும் நயமான சொற்ஜாலங்களை அனுபவிக்கும்போது கவிஞரை வாழ்த்தத் தோன்றுகிறது.

தியேட்டரில் எப்படியோ, படத்திலே நிறைவில்லை.


— பி. எஸ். எஸ்.

இந்தக் குழந்தைகளுக்காகக் கொஞ்சம் அழுங்கள்!

• விமான நிலையத்துக்கு அருகில் குடியிருக்கும் மக்கள், விமானங்கள் போடும் சத்தத்தால் தங்களுக்கு மிகுந்த உடல் — மன வேதனைகள் ஏற்படுகின்றன என்று வழக்குத் தொடுத்து, அதற்கு நஷ்டஈடாகப் பதினாறு லட்சம் டாலர் பெற்றிருக்கிறார்கள். நடந்தது ஜப்பானில். இந்த நஷ்டஈட்டைப் பெற அவர்கள் பன்னிரண்டு வருஷங்கள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திப் போராடியிருக்கிறார்கள்!

• பம்பாயில் உள்ள ஒரு நிறுவனம் வரி ஏய்ப்பு செய்கிறது என்று மத்திய அரசுக்குத் தகவல் தந்தார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. குருதாஸ் குப்தா. மத்திய அரசு உடனே நடவடிக்கை எடுத்து குப்தா கூறியது உண்மை என்பதற்குச் சான்றுகளைக் கைப்பற்றியது. முதற்கட்டமாக 43 லட்சம் வசூலித்தது. அதிலிருந்து பரிசுப் பணமாக குப்தா ஏழரை லட்சம் ரூபாய் பெற்றார். அவ்வளவையும் நற்பணிகள் பலவற்றுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார் குப்தா.

வேதனை என்னவெனில் ஒரு கட்டத்துக்குப் பிறகு ஓர் அமைச்சரே வரி ஏய்ப்பு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவர, விசாரணை மந்த கதியை அடைந்து விட்டதுமல்லாமல் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் கம்பெனியை விற்று விட்டு அயல் நாட்டுக்கு நழுவிவிட அனுமதிக்கப்பட்டிருப்பதுதான்!



• லால்குடியின் சீடர் ரவி இருபத்துமூன்று வயது இளைஞர். ஒரு கச்சேரிக்காக பம்பாய்க்குப் பயணமான இவரிடம் ஒரு டிக்கெட் பரிசோதகர் வயலினுக்கு லக்கேஜ் கட்டணமாக ரூ. 72 வசூலித்து விட்டிருக்கிறார்! தம்மிடம் வயலின் தவிர ஒரே ஒரு பைதான் இருக்கிறது என்றும் அதிக எடை இல்லை என்றும் ரவி எவ்வளவோ வாதாடியும் டிக்கெட் பரிசோதகர் கேட்கவில்லை. பம்பாயிலிருந்து திரும்பும் போது ரவி முன் அனுபவம் காரணமாக ஸ்டேஷனிலேயே வயலினை எடை போடுமாறு கேட்டுக் கொண்டார். வயலினுக்கெல்லாம் லக்கேஜ் கட்டணம் கிடையாது, எடை போட முடியாது என்று அதிகாரிகள் மறுத்து விட்டனர்! யாரிடம் சொல்லி அழ?

• பம்பாயில் நவம்பர் மத்தியில் குழந்தைகள் ஊர்வலமாகப் போனார்கள்! கல்லுடைக்கும் சிறுவர்கள், குப்பை பொறுக்கும் சிறார்கள், செய்தித்தாள் விற்கும் பையன்கள், ஹோட்டல்களில் பணிபுரியும் சோட்டாக்கள், பிச்சை எடுக்கும் பாலகர்கள் முதலியோர் ஊர்வலத்தில் இருந்தனர். பள்ளியில் படித்து ஓடியாடி விளையாட ஆசைதான். ஆனால் வீட்டுப் பாரம் ஏற்று அவற்றை மறந்து விட்டவர்கள் இவர்கள். ஊர்வலத்தை நடத்தியவர்கள் சைல்ட் ரிலீஃப்— அண்ட் யூ (CRY) என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இந்நாட்டின் எதிர்கால மன்னர்கள் பற்றிச் சில திடுக்கிடச் செய்யும் விவரங்களைத் தருகிறார்கள். சாம்பிள்: 1. இந்தியாவில் தினமும் சுமார் 9500 குழந்தைகள் நோயினாலும் சத்துணவு இல்லாமையாலும் இறக்கின்றனர். 2. துவக்கப் பள்ளியில் படிக்கும் ஏழு கோடி குழந்தைகளில் நாலு கோடி குழந்தைகள் நான்காம் வகுப்பை அடையு முன்னரே படிப்பை விட்டு விடுகின்றனர். 3. உலகிலேயே இந்தியாவில்தான் வேலை செய்யும் குழந்தைகள் அதிகம்.

• ராஜீவ் சீனாவுக்குச் செல்லத் தயார் நிலையில் வைக்கப்பட்ட ஒரு வி.வி.ஐ.பி. விமானம் வேண்டாம் என ஒதுக்கப்பட்டது. காரணம், முக்கியமான பல ஒயர்களை எலி கடித்துப் பாழாக்கி விட்டதாம்! ஓர் ஏர்-இந்தியா விமானம் அண்மையில் ஒரே ஒரு பயணியுடன் லண்டன் சென்றது! நஷ்டம் வராதோ என்றால், 'திரும்பி வரும் ஃப்ளைட்டில் பல டிக்கெட்டுகள் 'புக்' ஆகியிருக்கிறதே' என்று பதில் கிடைத்தது!

— நமது நிருபர்கள்





வாக்குறுதிகள்
செமை அடி..
ஆஸ்பத்திரி எங்கேய்யா?
விஜயவாடா கலவரம்
என்.டி.ஆர்
வாக்குறுதிகள்
நான் ஒண்ணும் 22 லட்சம் வாங்கல்லே! - வாங்கல்லே!
வாக்குறுதிகள்
பிரசாரம்
தேர்தல் அறிக்கை



கல்கி

1989 ஜனவரி 8
மலர் 47 இதழ் 23
விபவ மார்கழி 24.



கடமையில் தவறினார் என். டி. ஆர்.

வி. எம். ரங்கராவ் படுகொலை செய்யப்பட்டது என். டி. ராமராவுக்கும் அவரது தெலுங்குதேச ஆட்சிக்கும் மிகப் பெரிய தலைகுனிவு; துடைத்தெறிய முடியாத அபகீர்த்தி என்பதில் சந்தேகமே இல்லை.

ரங்கராவ் சில காலமாகவே தமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்றும் தாம் கொலை செய்யப்படலாம் என்றும் கூறி வந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இந்த இ. காங்கிரஸ் எம். எல். ஏ. தமக்குப் போதிய பாதுகாப்பு தரப்படவில்லை என்பதை, அரசின் கவனத்தைக் கவர்ந்து உணர்த்துவதற்காகவே உண்ணாவிரதமும் மேற்கொண்டார். ஆன போதிலும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றால் ஆந்திர அரசு தனது கடமையில் கண்டிக்கத்தக்க விதமாகத் தவறிவிட்டது என்றுதானே அர்த்தம்? அவர் கொலை செய்யப்பட்டுள்ள விதமோ பயங்கரமானது. கொலைகாரர்கள் இரண்டு பஸ்களில் வந்து கண்ணில் தென்பட்டவர்களையெல்லாம் தாக்கி இருக்கிறார்கள். ரங்கராவைத் தவிர உடனிருந்த வேறு இருவரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது என்பது கொலையை மேலும் பயங்கரமானதாக ஆக்குகிறது.

ரங்கராவ் அப்படியொன்றும் உன்னதத் தலைவர் அல்ல என்று கூறப்படுகிறது. ஜாதிச் சண்டைகளை வளர்த்தார் என்றும், ஏற்கெனவே நடந்த ஒரு படுகொலையில் ஆறு பேர் மரணமடைந்தார்கள் என்றும், அவர்கள் அத்தனை பேரும் தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், அந்தப் படுகொலையில் பிரதம குற்றவாளியாகக் கருதப்படுகிறவர் இதே ரங்கராவ்தான் என்றும் பேசப்படுகிறது. இந்த உண்மைகள் எல்லாம் இப்போது நடந்துள்ள படுகொலையை நியாயப்படுத்துவதாகாது. அப்படி நியாயப்படுத்த நினைப்பவர்கள் சமுதாயத்தில் சட்டத்தின் ஆட்சியை மதிக்கவில்லை என்றும் தனி நபர்களும் கோஷ்டிகளும் பழிக்குப் பழி வாங்கும் முறையில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவதை ஆதரிக்கிறார்கள் என்றும் அர்த்தமாகும். அப்புறம் சட்டம் எதற்கு? போலீஸ் எதற்கு? நீதிமன்றங்கள் எதற்கு?

தலைவர்களுக்குத் தீர்க்க தரிசனம் வேண்டும் என்று சொல்வது இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்காகத்தான். ரங்கராவ் எப்படிப்பட்டவர் என்பதும், இ. காங்கிரஸ் எம். எல். ஏ. என்பதும் ஆந்திர அரசுக்குத் தெரியும். தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்த்தவே உண்ணாவிரதம் இருந்தார் என்பதை என்.டி.ஆர். அறியாதிருந்திருக்க முடியாது. ரங்கராவுக்கு ஏதாவது நேர்ந்தால் பின் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதை உணர்ந்திருக்க வேண்டாமா? உணர்ந்து, முன் எச்சரிக்கையுடன் போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டாமா? இரண்டே இரண்டு போலீஸ்காரர்களை உண்ணாவிரத மேடையருகே நிறுத்தியதுடன் திருப்தி அடைந்திருக்கலாமா? தொலை நோக்கு இன்றி, அலட்சியமாக இருந்து விட்டதால் ஆந்திர மாநிலமே கொந்தளித்தது. பொதுச் சொத்துக்கள் நாசமாயின. கோப வெறியில் ஏராளமான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். என். டி. ஆர். பெரிய அபக்கியாதியைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறார்.

'காங்கிரஸ் ஆளும் இதர மாநிலங்களில் வன்முறை இல்லையா, என்ன?' என்று சமாதானம் சொல்வதும் சரியில்லை. 'லஞ்ச ஊழல் உலகம் முழுவதும்தான் வியாபித்திருக்கிறது' என்று முன்பு இந்திரா காந்தி சமாதானம் சொன்னதற்கும் இதற்கும் அதிக வித்தியாசமில்லை.

இதுபோன்ற படுகொலைகளுக்கும் பழிவாங்கும் படலங்களுக்கும் மூல காரணம், ஜாதி மத அடிப்படையில் அரசியல் கட்சிகள் அமைவது, அல்லது, அரசியல் கட்சிகள் ஜாதி மத அடிப்படையில் அரசியல் ஆதாயங்களைத் தேடுவது என்ற வருந்தத்தக்க நிலைதான்.

இதிலுள்ள ஆபத்தைத் தேசத் தந்தை எத்தனையோ முறை எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசியலில் இறையுணர்வை வலியுறுத்தியவர், ஜாதி மத பேதங்களைத் தவிர்க்கக் கோரினார். நாற்பதாண்டுகளாக அவர் சொன்னதை எந்த அரசியல் கட்சியும் கேட்கவில்லை. இனிமேலா திருந்தப் போகிறார்கள்?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வாழ்ந்து காட்ட வேண்டும்

ஏது காரணம் என்று தெரியவில்லை, காப்பி தம்ளர் நழுவி மேஜையில் சிதறியது. திட்டாக வெள்ளைச் சட்டையில், கறை படிய, உட்கார்ந்திருந்தவன் எழுந்து சந்துருவைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

''என்ன சர்வர்டா நீ? நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். இலை போடப் பத்து நிமிஷம், தண்ணீர் வைக்கப் பத்து நிமிஷம். போதாதுன்னு காப்பி அபிஷேகம். தொலைச்சுடுவேன், படுவா!''

சந்துருவுக்குச் சகலமும் கலங்கி விட்டது.

தப்பு அவன் பேரில் இல்லை. இரண்டாவது ஷிஃப்ட்டு அவனுக்குப் பழகி வரவில்லை. பண்டிகை என்று மூன்று சர்வர்களுக்கு மேல் லீவில் போய் விட்டார்கள். இரண்டு மேஜைகள் பார்க்க வேண்டிய இடத்தில் ஆறு மேஜைகள். பதற்றத்தில் நடந்த தவறு.

ரங்ககிருஷ்ணன் ஓடி வந்தான்.

''என்ன சந்துரு?'' என்றான்.

சந்துரு ஒன்றும் பேசாமல் நடுங்கிக் கொண்டிருந்தான்.

''ஏன்யா அடிச்சே அவனை...?''

''இங்கே பாரு! வெள்ளைச் சட்டை பூராக் காப்பிக் கறை.''

''வேணுமின்னா பண்ணினான்? பதறிட்டான்!''

''பதர்றவனையெல்லாம் ஏன்யா வேலைக்குச் சேர்த்துக்கறீங்க?''

''அதுக்காக அடிச்சிடறதா? ஆறு மணிக்கு டிஃபன் தட்டையும், சாம்பார் வாளியையும் தூக்க ஆரம்பிச்சா பத்து மணி வரைக்கும் ரெண்டு செகண்ட் நிதானமா மூச்சு விட முடியாதுய்யா. சமையலறைக்கும் மேஜைக்கும் கிலோமீட்டர், கிலோ மீட்டரா ஓடறோம்யா. உட்கார்ந்து தின்னா அதிகாரம் பண்றது ஈஸி!''

''என்னடா சொன்னே?''

''அப்படித்தாண்டா சொல்வேன்.''

சந்துருவுக்குப் பதறியது.

''ரங்கா வேணாம் விட்டுடு.''

''நீ சும்மா இரு சந்துரு.''

பாதிக்கப்பட்டவன் அடிக்கக் கிளம்பப் பதிலுக்கு ரங்ககிருஷ்ணன் கைஓங்க, நிலைமை மோசமானது. வாடிக்கையாளர்கள் எல்லாம் கட்சி சேர்ந்து கொண்டார்கள். சர்வர்களுக்குத் தன்மானம் கூடாது என்றார்கள். ரங்ககிருஷ்ணனால் ஒண்டியாகச் சமாளிக்க முடியவில்லை.

''காப்பி கொட்டியவனை மன்னிப்புக் கேட்கச் சொல்லு. விட்டுடறேன். இல்லேன்னா இந்த ஹோட்டலை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவேன்.''

சந்துரு உள்ளே ஓடிவிட்டான். சமையல் இடத்தை ஒட்டி ஒரு சின்ன அறை உண்டு. எல்லா சர்வர்களும் கொண்டு வந்த உடையைக் கழற்றி வைத்துவிட்டு யூனிஃபார்ம் மாற்றிக் கொள்ளும் இடம். மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

படிப்பு சரியாக வரவில்லை சந்துருவுக்கு. போதிய சாமர்த்தியம் கிடையாது. கூட்டல் கணக்கை நாலு முறை போட்டாலும் நாலு விடை வருமே தவிர, புத்தகத்தின் பின் பகுதியில் இருக்கும் விடை வராது. எஸ். எஸ். எல். சி. யில் இரண்டு முறையும் ஃபெயில். அம்மா வீடு வீடாக ஏறி, தெரிந்தவர்களிடம் 'என் புள்ளைக்கு ஒரு வேலை கொடுங்கோ' என்றாள். மளிகைக் கடையில் உட்கார்ந்தான். ஸ்டாக் எடுக்கத் தெரியவில்லை, கூட்ட நேரத்தில் சமாளிக்கத் தெரியவில்லை என்று முதலாளி நிறுத்தி விட்டார். ஒரு ப்ரிண்டிங் ப்ரஸ்ஸில் வேலைக்குச் சேர்ந்தான். தலைகீழாகத் தெரியும் மெட்டல் எழுத்துக்களை மனத்தில் நிறுத்தி அவனால் அச்சுக் கோக்க முடியாமல் போனது. இரும்புக் கடை, பெயின்ட் கடை என்று தூக்கி எறியப்பட்டு இந்த ஹோட்டலில் வந்து சேர்ந்திருக்கிறான்.

''உள்ளாற போப்பா. தேடறாங்க. ஒரே பதற்றமா பதறுது'' எவனோ ஒரு ஸர்வர் தோள் தொட்டுச் சொன்னான்.

சந்துரு முடியாது என்று தலையாட்டினான்.

'எல்லார் முன்னாலும் என்னால் மன்னிப்புக் கேட்க முடியாது. எனக்கு ஏன் இப்படி ஓர் அவமானம்? எல்லாரிடமும் குட்டு வாங்கி, குட்டு வாங்கிக் குழிந்து போன தலையுடன்... ஸ்வாமி! என்னைக் கூட்டிண்டுடேன்.'

''முதலாளி வந்தா இன்னும் சிக்கலாயிடும் சந்துரு...''

'மிஞ்சிப் போனால் என்ன ஆகும்? வேலை போகும். ஒரு வாரம்... அடுத்த வேலை கிடைக்கும் வரை, நிம்மதியாக இருக்கலாம். ஏன் எனக்கு மட்டும் அடுத்தவர்களை எதிர்த்துப் பேச முடியாமல் போகிறது?'

''அப்புறம் உன் பாடு!'' சொன்ன சர்வர் திரும்பவும் உள்ளே போய்விட்டான்.

இதுவரை முதலாளி நேரில் வந்து திட்டியதில்லை. வேலைக்குச் சேர்ந்து நாலு மாசம் கழித்து இன்னிக்கு நேரப் போகிறது. பழைய முதலாளி வாடிக்கையாளர்கள் முன்னாலேயே விட்டு எகிறியிருக்கிறார். 'கல்லு உடைக்கப் போயேண்டா நாயே' என்று ஏசி

யிருக்கிறார். பெயின்ட் கடை முதலாளி டேபிள் வெயிட்டை ஓங்கி எறிந்திருக்கிறார்.

''முதலாளி வர்றார் சந்துரு'' — இன்னொரு சர்வர் வந்து சொன்னான்.

சந்துருவுக்கு இலேசாக உதற ஆரம்பித்தது. பின் பக்கம் வழி இருந்தால் ஓடி விடலாம். பின்னால் ஒரு நாள் வந்து தலை சொறிந்து பாக்கிச் சம்பளம் கேட்கலாம். வழி இல்லை.

''ஒரே இருட்டா இருக்கே'' என்று சொன்னபடி வந்த முதலாளி விளக்கைப் போட்டார்.

சந்துரு பதற்றமாக எழுந்து கொண்டான். முதலாளியை இவ்வளவு அண்மையில் பார்த்ததில்லை. கதர் வேஷ்டி, கதர் சட்டை எளிமையில் ஒரு கண்டிப்பு இருந்தது.

''என்ன நடந்தது சந்துரு?''

டேய் போட்டுக் கூப்பிடவில்லை. 'சந்துரு' — பெயர் சொல்லிக் கூப்பிடும் முதலாளி.

முதலாளி அவன் கண்களை விடாமல் பார்த்தார். இவனால் அப்படிப் பார்க்க முடியவில்லை. அலைந்தான்.

''எல்லார் முன்னாடியும் மன்னிப்புக் கேட்கச் சொல்றான் சார்.''

''கேட்டுட்டுப் போயேன்.''

''நான் வேணும்னுட்டுச் செய்யலை.''

''வேணும்னுட்டுச் செய்யலைன்னு சொல்லிடு.''

சந்துரு பேசவில்லை.

''உட்கார்.'' அவனுக்கு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவரும் உட்கார்ந்து கொண்டார்.

சந்துரு உட்காரவில்லை. மரியாதை காத்தான்.

''பேசணும், சந்துரு. உட்கார்.''

உட்கார்ந்தான்.





அவர்: 'குறுந்தொகை' வேண்டுமென்று கேட்கிறாரே, அவருக்கு எதற்கு?

இவர்: 'கொஞ்சம் பணம் வேண்டும்' என்பதைத்தான் அப்படி மறைமுகமாகக் கேட்கிறார்...!

— இராம. செந்தில்குமார்.

கோவை காந்திபுரத்தில் உள்ள ஒரு வீட்டுச் சுவரில் காணப்படும் அறிவிப்பு:

''எங்கள் வோட்டு உங்களுக்கே! தேர்தல் விளம்பரங்கள் எழுதாதீர்கள்!''


— சுந்தர் சுந்தரி.

''வேகமா குனியும்போது கழுத்து பயங்கரமா வலிக்குது டாக்டர்.''

''வேகமா ஏன் குனியறீங்க? மெதுவா குனியுங்களேன்.''

''மெதுவா குனிஞ்சா என் மனைவி வீசுகிற கரண்டி வர்ற வேகத்துக்குத் தலையில காயம் பட்டுடுமே டாக்டர்!''

— இரா. மணி.



''என்ன வயசு உனக்கு?''
''இருபத்திநாலு.''
''பிச்சை எடுத்திருக்கியா?''
''இல்லை.''

''நான் எடுத்திருக்கேன்!'' மாசம் மூந்நூறு ரூபாய் சம்பளத்து வேலைக்காரனிடம் முதலாளி தாம் பிச்சை எடுத்த கதையைச் சொல்கிறார்!

''நாலு நாள் பட்டினி பொறுக்க முடியாமல் பிச்சை எடுத்தேன். மூகத்துக்கு நேராத் திட்டுவான். கையும், காலும் சுரணை, சுரணையா இருக்கறச்சே ஏண்டா பிச்சை எடுக்க வந்தேன்னு கேப்பான்..... பஸ்ஸை விட்டு இறங்கறவன் பின்னாடி எல்லாம் தலையைச் சொறிஞ்சிண்டு, அசட்டுச் சிரிப்பு, சிரிச்சிண்டு, ஹோம்லி டைப் சார் ரூம் வேணுமான்னு கேட்டிருக்கேன். வாழணும்கறது வெறி. நாலு காசு சேராதா, சொந்தக் கடை வைக்க மாட்டோமான்னு வேட்டை நாய் மாதிரி அலைஞ்சிண்டிருந்தேன். ஒரு ஹோட்டல்ல வேகற அடுப்புல கறிகாய் நறுக்கற தொழில்தான் கிடைச்சது. பத்து கிலோ வெங்காயம் பிழியப் பிழிய அழுதுண்டே நறுக்கணும்...

''சொய்ங், சொய்ங்னு பரோட்டா போடக் கத்துண்டேன். 'சோலா பூரி பண்ணினா வெங்கடேசன் பண்ணணும்'னு பெயர் வாங்கினேன். தனியா ரோடு கடை போட்டேன். போட்டி, பொறாமை, போலீஸ்னு லோல்பட்டேன். ஒரு தடவை கூடத் தற்கொலை பண்ணிக்கணுங்கற நினைப்பு எனக்கு வந்ததில்லை. வாழணுங்கற வெறிதான் என்னை ஹோட்டல் முதலாளியா ஆக்கி இருக்கு.''

சந்துருவுக்கு லேசாக பயம் தெளிந்தது. நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''வலிய நீயா தப்பு செய்யாத வரையில் உன் தொழிலை அவமானமா நினைக்காதே. சுவத்தில ஆணி அடிச்சிருக்கு. உன் குறி ஆணியை எளக்கறதுன்னா 'புஜம் வலிக்கறது, விரல் காய்ச்சுப் போறது'ன்னு வருத்தப்பட்டா முடியுமா? நகச் சுத்திக்குப் பயந்துண்டு விரலை வெட்டிடுவியா? மனசைத் தெளிவா வெச்சுக்கோ. உள்ளே பெரிய ஆளா வரணுங்கற வெறியை வளர்த்துக்கோ. தப்புப் பண்ணினா மருகி நிக்காதே. தப்பும் ஒரு இயல்புன்னு எடுத்துக்கோ. அப்போதான் அடுத்த தடவை தப்புப் பண்ண மாட்டே.''

சந்துரு மனசால் முதலாளிக்குக் கரங்குவித்தான். முகம் துடைத்துக் கொண்டான். வெளியில் வந்தான். காப்பி ஊற்றியவர் முன்னால் போனான்.

''தெரியாம நடந்துடுத்து சார். மன்னிச்சுக்குங்க'' என்றான்.

அவனுக்கு இதனால் ஏனோ துளி வருத்தமுமில்லை!


பற்களைப் பற்றிய ஒரு பெரிய உண்மை
வாய் துர்நாற்றம் என்பது பற்களைவிட அதிகம்,
ஈறுகள் சம்பந்தப்பட்டதாகும்.
மற்றுமொரு பெரிய உண்மை
போர்ஹென்ஸ்* டூத்பேஸ்ட்டில்
உள்ள ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் மட்டுமே ஈறுகளை
வலுவாக்கி அவற்றை ஆரோக்கியமாக வைக்கிறது.
அதனால் வாய் துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பே இல்லை.
Forhan's
TOOTHPASTE
Forhan's
Forhan's
* விலங்குகளின்
எலும்புகள்
அடிப்படையிலான
எந்த பொருளும்
இதில் இல்லை.
போர்ஹென்ஸ்
32 என்றும் பத்திரம்
ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.

GM. 68/88. Tm

அனுமானங்களுக்கு அப்பாற்பட்ட புதிர்

* உண்மையான மோதல் தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் இடையில்தான் — என்ற உங்கள் தலையங்கக் கருத்து ஏற்புடையதல்ல. ஏனெனில்... தி.மு.க.வின் வீராண ஊழலையும் மக்கள் மறந்து விடவில்லை. அ.தி.மு.க.வின் லஞ்ச அதிகரிப்பையும், காங்கிரஸின் மைய அரசு ஊழலையும் மக்கள் மறக்கவில்லை. ஆகையால் தேர்தல் முடிவு நம் அனுமானங்களுக்கு அப்பாற்பட்ட புதிர் என்பதே என் கணிப்பு!

திருத்துறைப்பூண்டி. ஜெயந்திப்ரியன்.

* நீங்கள் சொல்லியிருந்தது போல் 'கல்கி' கையில் கிடைத்த போது பிரேமதாசா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெற்று விட்டது! சிறு சிறு நிகழ்ச்சிகளைச் சொல்லி நீங்கள் தொகுத்திருந்த வரிசைப்படியே ஓட்டும் பெற்று, பிரேமதாசா ஜெயித்து விட்டார்!

மயிலாடுதுறை. கிருட்டிண. எழில்.

* 'இந்திய ரோபோ' என்ற ஜி. நடராஜனின் கதை கற்பனை நயம் வாய்ந்தது. இருந்தாலும், 'காண்ட்ராக்ட் — ஊழல் — லஞ்சம்' என்றெல்லாம் வர்ணிக்கப் பட்டதால் அந்த ரோபோ உங்கள் மேல் மான நஷ்ட வழக்குப் போட வரப் போவதை நினைத்தால்தான் பரிதாபமாக இருக்கிறது!

சென்னை — 14. அவ்வாறு. எஸ். வாசுதேவன்.

* மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மறைந்த பதினைந்தாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி ராஜாஜி அவர்களின் அறிவாற்றலையும், நீதி, நேர்மை உணர்வு, எளிமையையும் வெளிப்படுத்தும் வகையில் ''கோஸ்வாமிஜியை மடக்கிய ராஜாஜி'' என்ற கட்டுரையை வெளியிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர். எஸ். ஆர். சந்துரு.

* அந்த முரடனும், சில மச்சர்களும்' சிறுகதை அருமை. 'என் மகனாவது நன்றாகப் படிக்க வேண்டும் என்பதே என் விருப்பம்' எனக் காளி கூறிய போது எங்கள் மனமும் உருகியது. ஆசிரியர் கா. க. வேலாயுதன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

ஆற்காடு. கும்படம். வி. குமார்.

* 'அணுக்கதிரியக்க ஆபத்து' பற்றி வந்த கட்டுரை ஆக்கபூர்வமாகவும் அதே சமயத்தில் அறிவுபூர்வமாகவும் இருந்தது. ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அரிய செய்திகளைத் தாங்கியிருந்தது.

புதுவை. என். கே. வேலு.

* ஜெயலலிதாவை மட்டம் தட்ட வேண்டும் என்பதுதான் சௌகார் ஜானகியின் குறிக்கோள் என்பதை அவர் பல இதழ்களில் வழங்கிய பேட்டிக் கட்டுரையின் வாயிலாக நாங்கள் அறிந்திருக்கிறோம். அதே சமயம் த.மு.மு. சார்பாக அவர் அளித்த பேட்டி கட்டுரைகளையும் பல இதழ்களில் நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால் த.மு.மு.வில் நாம் உறுப்பினர் இல்லை என்று அவர் கூறியுள்ளதைப் படித்த போது இவருக்குத் திமிர் என்று என்னவாயிற்று என்றுதான் நினைக்கத் தோன்றியது.

கும்பகோணம். பிரசன்னா ராஜன்.

* ''காங்கிரஸ் தனித்து நின்று தோற்றாலும் பரவாயில்லை; குறைந்த பட்சம் மரியாதையாவது மிஞ்சும்'' என்ற சௌகார் ஜானகியின் வைர வரிகள் என் நெஞ்சில் இன்னமும் குடியிருக்கின்றன.

சங்கராபுரம். கே. எஸ். முருகன்.

* உமது தலையங்கத்தில் எம்.ஜி.ஆரின் ஓட்டு இரு சக்களத்திகளில் ஒருவருக்கு என்று குறிப்பிட்டுள்ளீர். தரமான மனிதர்களின் கைகளில் தவழும் தரமான ஏடான கல்கியிலா இந்த வார்த்தை வெளியாகியுள்ளது! கல்கி மூன்றாந்தர பத்திரிகை அல்ல என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திருச்சி — 2. ஆற்காடு எழிலன்.

* கேள்வி — பதில் பகுதியில் அரசுப் பேருந்துகளை விடத் தனியார் பேருந்துகளில் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுவது ஏன் என்ற கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

அரசு பேருந்து, தனியார் பேருந்து இரண்டுமே 1 கிலோ மீட்டர் தூரத்துக்கு 9.5 பைசாதான் கட்டணம் வாங்கலாம் என்று அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதற்கு மேல் வசூல் செய்வது சட்டப்படி குற்றம். பொது மக்கள் புகார் செய்தால், அவ்வாறு வசூலிப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

சீர்காழி. ஆர். பாலவேலாயுதம்,
யோகமங்களம் டிரான்ஸ்போர்ட்.

* அணுமின் நிலையம் ஆபத்தானதே என்ற தலைப்பில் என்னைப் பேட்டி கண்டு எழுதப்பட்டுள்ள கட்டுரையில் சில தவறுகள் உள்ளன. சுற்றுப்புறக் கதிரியக்கம் என்பது வேறு கதிரியக்கத் தாக்கம் என்பது வேறு. இந்தியாவில் சுற்றுப்புறக் கதிரியக்கம் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 100-லிருந்து 200 மில்லி ரெம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட அளவாகும். பன்னாட்டுக் கதிரியக்கத் தடுப்புக் குழுமம் (ICRP) செய்துள்ள பரிந்துரை, நபர் ஒருவருக்கு வாழ்நாள் முழுமையும் ஐயாயிரம் மில்லி ரெம் கதிரியக்கத் தாக்கம்தான் அனுமதிக்கிறது. இதை ஏன் நமது அணுமின் நிலையங்கள் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு நிலையளவாகக் கொள்ளக் கூடாது என்பதுதான் எங்கள் கேள்வி.

உலக நாடுகள் பலவற்றில் மக்கள் எதிர்ப்பு காரணமாக அரசாங்கமே அணுமின் உலை வேண்டாம் என முடிவெடுத்துள்ளது. வேறு பலவற்றில் அரசு அவ்வாறு முடிவெடுக்கா விட்டாலும் மக்கள் எதிர்ப்பு காரணமாக அணு உலைகள் அமைப்பது குறைந்து வருகிறது.

சென்னை — 17. வி. என். தெய்வநாயகம்.





அடுத்த இதழ் :: அதிக பக்கங்கள் !

"நடிப்பு என் தொழில் ஆன்மீகம் என் வாழ்க்கை"

—ரஜினிகாந்த் மனந்திறந்த பேட்டி

பாலகுமாரனின்

—குறுநாவல்

- மடமையைக் கொளுத்துவோம்!
  — முன்னணி சிந்தனையாளர் பலரது அலசல்.
- புதிய முதல்வருக்கு யோசனைகள்
  — வாசகர்களின் தேர்ந்தெடுத்த கருத்துக்கள்.
- தேர்தல் களம்
  — நமது நிருபர்கள் பல்வேறு திசைகளுக்கும் நேரில் சென்று சேகரித்த தகவல்கள்.

நேரத்தை பொன்னாகக் கருதும் புத்திசாலி பெண்மணிக்காக...

நேரத்தையும்,
எரிபொருளையும் மிச்சப்படுத்தி,
உங்கள் சமையல் திறனின்
தனிச்சிறப்பை மேன்மைப்படுத்தும்
இணையில்லா செம்பு (காப்பர்)
அடிப்பாகம் கொண்ட
சமையல் பாத்திரம்.



kali

காப்பர் - பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சமையல் பாத்திரம்.

விரைவாகவும், சமமாகவும் சூடு பரவுகிறது. உணவுப் பொருட்கள் தீய்ந்து போகாது.

தரமான பொருட்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதினை முதலில் பெற்றது.


ஸாஸ்பான், ஸ்டூபான், வாணலிகள், தோசைக்கல், அடுக்குகள், ஸ்கில்லெட்ஸ், ஸ்டீம் குக்கர்கள், இட்லி குக்கர்கள் என பலவித ரகங்கள். இல்லத்தரசிகளின் நம்பிக்கையைப் பெற்ற சிறந்த சமையல் பாத்திரங்கள்.

காளி

kali kali ISI

காளி-சிறந்த சமையல் பாத்திரங்கள்,
அன்றும் இன்றும் என்றுமே உங்களுக்காக.

சில்லறை விற்பனை நிலையம்: ஸ்ரீ எம்.வி.எம்.ஸ்டோர்ஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. விற்பனை ஏஜெண்ட்: ஸ்ரீ வித்யா ஏஜென்சீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. வட்டார ஏஜெண்ட்: சம்மு & Co. த. பெ. எண் 3622, எம்.ஜி. ரோட், எர்ணாகுளம், கொச்சின் 682035. போன்: 361139. • விக்டரி மெட்டல்ஸ், 101, கேட்வாடி மெயின் ரோட், பம்பாய் 400 004. போன்: 354507/380075. • தினேஷ் எண்டர்பிரைசஸ், 41/1942, நைவாலா, கரோல்பாக், புது டெல்லி 110005. போன்: 5716923.



இரும்புத்திரை இளகுகிறதா...?

ஆர்மீனியாவின் சில பகுதிகளைத் தரைமட்டமாக்கிய சமீபத்திய பூகம்பம், உலகத்தின் பார்வையை ரஷ்யா பக்கம் திருப்பியுள்ளது. இந்தியா உள்படப் பெரிதும் சிறிதுமாகப் பல நாடுகள் ரஷ்ய மக்களுக்குப் பொருளுதவியும் பண உதவியும் அனுப்பியுள்ளன. இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஆனால், ஆர்மீனிய பூகம்பத்தின் பயங்கர விளைவுகளையும் சோகத்தையும் ரஷ்யப் பத்திரிகைகளும், ரேடியோ மற்றும் டி. வி. யும் பகிரங்கமாகப் பறைசாற்றின என்பது ஆச்சர்யமே!

பூகம்பம் நேரக் கூடிய பகுதிகள் என்று தெரிந்திருந்தும் கட்டடங்கள் அதற்கேற்ப வடிவமைக்கப்படவில்லை என்றும், ரஷ்ய அரசாங்கம்பூகம்பத்தைச்சமாளிக்கத்தேவையான அடிப்படை வசதிகளையும் பாதுகாப்பையும் கூடத் தயார் நிலையில் வைத்திருக்கவில்லை என்றும் ரஷ்ய வட்டாரங்களிலேயே விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.—

கோர்பச்சேவின் 'பெரிஸ்த்ரோய்க்கா' (மறுசீரமைப்புக் கொள்கை) மற்றும் 'கிளாஸ்நாஸ்த்' (ஒளிவு மறைவற்ற திறந்த மனப்பான்மை)—இவற்றின் விளைவாகவே இத்தகைய கருத்துக்கள் வெளியிடப்பட்டு, உண்மைகள் ரஷ்ய எல்லைகளைக் கடந்து உலகப் பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளன. செர்னோபைல் விபத்தின் போது ரஷ்ய அரசாங்கம் அந்தப் பயங்கரத்தை மூடி மறைக்க முயன்றதற்கும் இப்போது ஆர்மீனிய பூகம்பத்தை அடுத்து ஒளிவுமறைவின்றிச் செய்திகள் வெளியாவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் காணும் போது ரஷ்யாவின் இரும்புத் திரை இளகிக் கொண்டிருப்பதாகவே கருதலாம்.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு முதல் முறையாக இப்போதுதான் ஆர்மீனியா விபத்துக்காக அமெரிக்கப் பொருளுதவியை ஏற்றுள்ளது ரஷ்யா. இது குறிப்பிடத்தக்க, வரவேற்கத்தக்க மாற்றம்.

ஆர்மீனிய பூகம்பத்துக்குச் சில தினங்களுக்கு முன்புதான் கோர்பச்சேவ் ஐ. நா. சபையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உரையை நிகழ்த்தியிருந்தார். 'அணுயுகத்தின் ஆபத்தான போக்கைத் தவிர்க்கும் நோக்கில் முதல் படியாக ரஷ்யா தனது பாதுகாப்புத் துறையில் மாற்றங்களைச் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார். உலகெங்கிலும் உள்ள ரஷ்யத் துருப்புக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்குக் கொண்டு வரப்படும் என்றும் ரஷ்யப்படையில் ஐம்பதாயிரம் துருப்புக்களும் பத்தாயிரம் டாங்குகளும் உடனடியாகக் குறைக்கப்படும் என்றும் கூறினார். மேலும், ரசாயன ஆயுதங்கள் உற்பத்தி நிறுத்தப்படும்; விண்வெளி ஆராய்ச்சி ஆக்கபூர்வமான அமைதிப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்; உலக விஞ்ஞானிகள் ரஷ்ய விஞ்ஞான அகாடெமியுடன் இணைந்து அமைதிப் பணிகளுக்கு விண்வெளி விஞ்ஞானத்தைத் திசை திருப்பும் ஆராய்ச்சிகளில் ஈடுபடலாம்; ரஷ்யா கொள்கைப் பரப்புக்கு முக்கியத்துவம் அளிப்பதை நிறுத்திக் கொண்டு, இனி அயல் நாட்டு உறவுகளைத் தன் செயல்கள் மூலம் வலுப்படுத்திக் கொள்ளும் — என்றெல்லாம் அறிவித்தார். இவை யாவுமே நிபந்தனையின்றி — எதிராளியும் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பாராமல் — அவர் தாமே முன் வந்து செய்த அறிவிப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையெல்லாம் பார்க்கும்போது ரஷ்யா ஜன

* "நேசம் மிக்க மனிதர்."




நாயகத்துக்கு ஜன்னல்களைத் திறந்து விட்டிருக்கிறது என்று தோன்றும். ஆனால், சோஷலிஸ சித்தாந்தங்களிலிருந்து ரஷ்யா விலகிவிடவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார் கோர்பச்சேவ். ''**More democracy more socialism**'' என்று அமெரிக்க நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருக்கிறார். தொடர்ந்து அவர் தந்த விளக்கம்; ''எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே, அக்டோபர் புரட்சியின் போதே ரஷ்ய மக்களுக்குத் தகுந்த சரியான பாதை வகுக்கப்பட்டு விட்டது. அந்தப் பாதையின் அடிப்படைக் கொள்கைகள் வலுவானவை, சரியானவை. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சில தவறுகள் நேர்ந்ததால், பொருளாதார சமூக, அரசியல், கலாசார, நிலைகளில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. பெரிஸ்த்ரோய்க்காவின் நோக்கம், ரஷ்ய மக்களையே ஈடுபடுத்தி இத்தேக்கத்தை முறியடிப்பதுதான். இம்முயற்சி யாரோ சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக எடுக்கப்படவில்லை, சோவியத் மக்களின் விருப்பத்தின் பேரிலேயே எடுக்கப்படுகிறது. பிரச்னைகள் புதிய கண்ணோட்டத்தில் பார்வையிடப்படும். அவற்றுக்கான தீர்வுகளை மக்களே யோசனைகளாக வெளியிடுவார்கள். மக்களே திட்டங்கள் வகுத்து அதில் ஈடுபடுவார்கள் ஆனால் அடிப்படை சோஷலிஸக் கொள்கைகள் மாறமாட்டா.''

சோவியத் நாளிதழ்கள் ரஷ்ய அரசியல் தலைமையில் பிளவு ஏற்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளதை ஓர் அமெரிக்க நிருபர் சுட்டிக் காட்ட, கோர்பச்சேவ் பதில் அளித்தார்;


''நாடு முழுவதுமே இப்போது, ஒரு மாபெரும் பட்டிமன்றமாகியிருக்கிறது. அதனால் அரசியல் தலைமை வட்டாரங்களிலும் விவாதங்கள் இருப்பது சகஜம்தானே.... எங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள எங்களிடம் 'ரெடிமேட்' தீர்வுகள் கிடையாது. எங்கள் சமூகத்துடன் சேர்ந்து நாங்கள் பல கேள்விகளுக்கு விடை தேடிக் கொண்டிருக்கிறோம். அதனால் விவாதங்களும் கருத்து மாறுபாடுகளும் எழுவது சகஜம்தான். பலப்பல வருஷங்களாக எங்கள் சமூகத்திலும், கட்சியிலும், அரசாங்கத்திலும், இதுபோன்ற விவாதங்கள் நிகழவே இல்லை என்பதுதான் எங்கள் பிரச்னையே. இதனால் பல தவறுகள் நேர்ந்துள்ளன, பல இழப்புகள் நேர்ந்துள்ளன. ஆனால் விவாதங்களை அரசியல் தலைமையில் பிளவு ஏற்பட்டுள்ளதற்கான அடையாளங்களாகக்

* தாஜிகிஸ்தான் நீர் நிலையம்.



சொன்னது பெரிய தவறு...''


மற்றோர் அமெரிக்க நிருபர், 'கோர்பச்சேவ் பதவியிலிருந்து வெளியேற்றப்படலாம் என்றே செய்தி வெளியானதைச் சுட்டிக் காட்டியபோது,' அதுவும் ''மக்கள் அரசியல் நிகழ்வுகளில் ஆர்வம் காட்டுவதையே குறிக்கிறது... பெரிஸ்த்ரோய்க்காவின் மிக முக்கியமான குறிக்கோளே இதுதான்'' என்று பதில் அளித்தார்.



சராசரி மக்களுக்காகத்தான் பெரிஸ்த்ரோய்க்கா...

ஆரோக்கியமான கருத்துச் சுதந்திரம், உடை விஷயத்திலான ரஷ்யக் கட்டுப்பாடுகள் வெகுவாகத் தளர்த்தப்பட்டுள்ளது குறித்தும் விவாதங்களுக்கு இடமளித்துள்ளது. கோர்பச்சேவின் மனைவி ரெய்ஸா நமது அமெரிக்க விஜயத்தின் போது ஃபாஷன் வட்டாரங்களை மிகவும் கவர்ந்தார். 'அட! கம்யூனிஸ்ட் பெண்கள் கூட அழகாக அலங்கரித்துக் கொள்கிறார்களே!' என்பது போன்ற விமர்சனங்கள் எழுந்தன.

ஆனால் இந்த ஃபாஷனை வெறும் பரபரப்புச் செய்தியாக மட்டுமின்றி வியாபார தந்திரமாகவும் மாற்றி வருகிறது ரஷ்ய ஆற்றல். ரெய்ஸா கோர்பச்சேவாவின் உடைகளை வடிவமைப்பவர் இன்று உலகப் புகழ் பெற்றுச் சில ஐரோப்பிய நாடுகளுடன் தொழிலுறவு கொள்ள முயன்று வருகிறார்.



இதைவிட ஆச்சரியமளிக்கும் விஷயம் — சில தீவிர கம்யூனிஸ்டுகளுக்கு ஏமாற்றம் அளிக்கும் விஷயமும் கூட — சோவியத் யூனியன் முதல் முறையாக அழகிகள் போட்டி ஒன்றை நடத்தி, 'மிஸ் மாஸ்கோ'வைத் தேர்ந்தெடுத்தது! போட்டியின் இறுதிச் சுற்றில் கலந்து கொண்ட சில பெண்கள் கவர்ச்சியான நீச்சல் உடைகளுடன் **'Some like it wet'** என்ற ஆங்கில வாசகத்தையும் அணிந்திருந்தார்கள்! இதன் மறுபுறமாக பியரி கார்டின் என்ற உலகப் புகழ் ஆடை வடிவமைக்கும் நிறுவனத்துடன் முப்பத்திரண்டு சோவியத் தொழிற்சாலைகள் ஒப்பந்தம் செய்து கொண்டு விதவிதமான ஃபாஷன்களைப் புகுத்திக் கொண்டிருக்கின்றன! இது ரஷ்யப் பொருளாதாரம் வளம் பெறத்தானே உதவப் போகிறது! இவ்வாறே பல்வேறு துறைகளிலும் நாடு முன்னேற பெரிஸ்த்ரோய்க்கா — கிளாஸ்நாஸ்த் கொள்கைகள் உதவி வருகின்றன. ''எங்களுடைய கிளாஸ்நாஸ்த் உங்களுடைய பேச்சுச் சுதந்திரத்தை விட உயர்வானது'' என்று வலியுறுத்தி விளக்குகிறார் கோர்பச்சேவ்: ''பேச்சு சுதந்திரத்தில் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதோடு சரி. ஆட்சியில் உள்ளவர்கள் அதை அலட்சியம் செய்யலாம்; மூடப்பிடிவாதம், கர்வம்காரணமாக நல்ல யோசனைகளைக் கூட ஏற்காமல் ஒதுக்கலாம். ஆனால் கிளாஸ்நாஸ்த் என்ற எங்கள் கொள்கை, ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் விமர்சனங்களை வரவேற்றுப் பரிசீலிப்பதையும் நல்ல கருத்துக்களை ஏற்பதையும் கட்டாயமாக்குகிறது. ஆட்சியில் இருப்பவர்கள் தங்கள் செயல்களுக்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவர்களாகிறார்கள். தங்கள் முடிவுகளைப் பகிரங்கப்படுத்துகிறார்கள்.

கோர்பச்சேவின் மறுசீரமைப்புக் கொள்கையை உலகின் இதர பல கம்யூனிஸ்ட் நாடுகள் வரவேற்றுள்ளன. ஆனால் ரஷ்யாவுக்குள்ளேயே இருவித கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருபுறம் பெரிஸ்த்ரோய்க்காவுக்கு ஆதரவு இருந்தாலும் இன்னொரு பகுதியினர் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதை வன்மையாக எதிர்த்து வருகின்றனர். இதுவரை ரஷ்யா அடைந்த வளர்ச்சிக்குக் காரணமே கட்டுப்பாடுகள் மூலம் விளைந்த கட்டுக்கோப்பும், உழைப்பும்தான். அதனால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால் மறுசீரமைப்பு நிகழாது. சீரழிவுதான் நிகழும் என்பது அவர்களது வாதம்!

அமெரிக்கர்கள் என்ன கூறுகிறார்கள்...? கோர்பச்சேவின் ஐ. நா. சபை அறிக்கை உலகத்தின் பார்வையில் அவர் மதிப்பை உயர்த்தியிருக்கலாம். ஆனால் அதை அவரது பலவீனமாகத்தான் கருத முடியுமே



* மனைவியுடன் அதிபர்— அழகான, அளவான அலங்காரம்.

யொழியப் பலமாகக் கொள்ள முடியாது. ரஷ்யாவின் பொருளாதாரக் கொள்கை தோல்வியுற்று விட்டது. மக்களின் அடிப் படைத் தேவைகள் கூட பூர்த்தியாகவில்லை. இதற்கிடையே 'கிளாஸ்நாஸ்த்' கொள்கை மக்களின் அதிருப்தியைப் பகிரங்கமாக உலகுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது; இப்போது கிடைத்துள்ள கருத்துச் சுதந் திரம் காரணமாக இதுநாள் வரை அடங்கிக் கிடந்த ஏராளமான பிரச்னைகள் எல்லாம் இன்று மேல் மட்டத்துக்கு வந்திருப்பதுடன் அவற்றுக்குத் தீர்வு காண மக்கள் தீவிரமா கப் போராடத் தொடங்கி விட்டனர். எனவே கோர்பச்சேவின் தலைவலிகள் திருகுவலியா கப்போகின்றன. அவர் அறிவித்துள்ள ஆயுதக் குறைப்பினால் சோவியத் அரசாங்கத்துக் குக் கணிசமான செலவு மிச்சமாகும். அந்தத் தொகையை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய ஆக்கப் பணிகளுக்குப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற உள்நோக்கத் துடன் அவர் செயல்பட்டிருக்கக்கூடும் என் றெல்லாம் அமெரிக்க அரசியல் வட்டாரங் களில் பேச்சு அடிபடுகிறது.

''கோர்பச்சேவ் தமக்கு முந்தைய ரஷ்ய அதிபர்களிலிருந்து வேறுபட்டு, தனித்து நிற் கிறார். அவர் ஒரு நேசம் மிக்க மனிதர். அதை எல்லோருமே உணர்கிறார்கள்'' என்று கருத்துக் கூறியுள்ளார் புதிய அமெ ரிக்க ஜனாதிபதி புஷ்.

கோர்பச்சேவின் 'பெரிஸ்த்ரோய்க்கா' ராஜீவ் காந்தியின் 'இருபத்தோராம் நூற் றாண்டு' கோஷம் போல் வெறும் வாய்ப் பந்தலாகவே முடிந்து விடுமா? அப்படி நேராது என்பதுதான் அரசியல் பார்வையா ளர்களின் கணிப்பு. இதற்கு முக்கிய காரணம் மக்களுக்கு ஒரு புதிய ஊக்கம் பிறந்திருக்கிறது என்பதும் அந்த உற்சாகத் தைப் பயன்படுத்திக் கொள்ளும் விதமா கவே புதிய திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதும்தான். மக்களுடைய ஒத்துழைப் பைப் பெறுகிற எந்த ஒரு வளர்ச்சித் திட்டம் தான் வீண் போகும்?

தொகுப்பு: **சீதா ரவி**

● ***நீங்கள் எந்தப் பதவியில் இருக்கிறீர் கள் என்பது முக்கியமல்ல; இருக்கிற பதவியில் என்ன செய்து கொண்டிருக் கிறீர்கள் என்பதுதான் முக்கியம். பதவி உங்களுக்குப் பெருமை தருவதைவிட, நீங் கள்தான் அதைப் பெருமைப்படுத்த வேண்டும்.***

— பெட்னார்க்.

— புத்தனாம்பட்டி மணி.

● ***நான் சந்திக்கும் ஒவ்வொரு மனித னும் என்னைவிட, ஏதாவது ஒரு வகை யில் சிறந்தவனாக உள்ளான்.***

— எமர்சன்.

— ச. பரமசிவம்.

● ***ஒரு கேள்வியைக் கேட்பவன் ஒரு நிமிடத்துக்கு வேண்டுமானால் முட்டா ளாய்த் தோன்றுவான்; கேள்வியே கேட் காதவன் வாழ்நாள் முழுவதும் முட்டா ளாகவே இருப்பான்.***

— சீனப் பழமொழி.

— ஏ. கே. நாசர்.

கேள்வியே? கேட்காதவன்



"**அ**வசரம்" என்று சிவப்பு மையில் எழுதப்பட்டிருந்த பேப்பரை நிஜமான அவசரத்துடன் எடுத்துப் படித்து, மேற்கொண்டு செய்ய வேண்டியதை யோசித்த போது என் மேஜை எதிரே யாரோ நிற்பது தெரியவே, நிமிர்ந்து பார்த்தேன்.

மனத்துக்கு இதமான பளீரென்ற சிரிப்புடன் முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

பின்புறம் தூக்கி வாரிய கிராப். மீசை மழிக்கப்பட்டிருந்தது. வெள்ளை நிற பேண்ட், சட்டையில் இருந்தார்.

"என் பெயர் சித்தார்த்தன். இங்கே புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் செக்ஷன் ஆபீஸர்" என்று சொல்லிக் கைகூப்பினார்.


"இனாட் டு மீட் யூ சார். என் பெயர் வித்யா. எப்ப சார் நீங்க புத்தராக மாறப் போறீங்க?"

படபடவென்று வார்த்தையைக் கொட்டிய பிறகுதான் நாக்கைக் கடித்துக் கொண்டேன். முதல் அறிமுகத்திலேயே என் கிண்டலைக் காண்பித்து விட்டேனே...!

என் குறும்பையும், தயக்கத்தையும் புரிந்து கொண்டவராய், "இந்த சித்தார்த்தனும் கூடிய சீக்கிரம் புத்தனா மாறுவான்" என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு அடுத்த மேஜைக்கு நகர்ந்தார்.

பரவாயில்லை, நல்லவராகத்தான் இருப்பார் போலிருக்கிறது. முன்பு இருந்த அதிகாரி கொஞ்சம் முசுடு. 'உர்' மூஞ்சி. சிரிப்பதற்கே காசு கேட்பார். அவருக்கு மாற்றல் உத்தரவு வந்த செய்தி கேட்டவுடன் எங்கள் ஆபீஸில் உள்ள அனைவரும் ஸ்வீட் வாங்கிச் சாப்பிடும் அளவுக்குப் 'பிரியத்தை'ச் சம்பாதித்துக் கொண்டார்.

நினைவுகளை ஓரங்கட்டி 'அவசரத்தை'ப் புரட்ட ஆரம்பித்தேன்.



இல்லை புத்தன்

கிருஷ்ணா

"**ஹ**லோ வித்யா!"

'இந்த இடத்தில் என்னை யார் கூப்பிடுறார்கள்?' என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

அடேடே, சித்தார்த்தன்!

"என்ன வித்யா, எங்க பேட்டைப் பக்கம் வந்திருக்கீங்க?"

சாலையில் ஜனசந்தடி அதிகமாயிருந்ததால் சித்தார்த்தன் சற்று இரைந்து பேச வேண்டியிருந்தது.

"என்னோட தோழி ஒருத்தி வீட்டுக்கு வந்தேன், சார். பார்த்தாச்சு. வீட்டுக்குத் திரும்பிக்கிட்டு இருக்கேன்."

"அப்படியா? அவசர வேலை எதுவும் இல்லைன்னா, எங்க வீட்டுக்கும் நீங்க இப்ப வரலாமே. பக்கத்துலே தான் இருக்கு..." என்று அவர் சொன்னவுடன் மறுக்க முடியாமல் தலையாட்டினேன்.

வாசலில் இரண்டு தென்னை மரங்கள் துவாரபாலகராய் நின்று கொண்டிருந்தன. வாசற்கதவில் விவேகானந்தரின் படம் வரையப்பட்ட திரைச்சீலை காற்றில் படபடத்து வரவேற்றது.

ஹாலில் சாமான்கள் ஓர் ஒழுங்கில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது.

"இவங்கதான் என் அம்மா."

சமையலறையிலிருந்து சித்தார்த்தனின் ஜாடையில் ஐம்பது வயதுப் பெண்மணி வரவும், கைகூப்பினேன்.

"சார், நீங்க அதிர்ஷ்டசாலி."

நான் சொல்லவும் புரியாமல் இருவரும் என்னைப் பார்த்தனர்.

"அம்மா ஜாடையில பையனும், அப்பா ஜாடையில பொண்ணும் இருந்தா அதிர்ஷ்டம்னு சொல்லுவாங்க" என்று நான் சொன்னவுடன் அவருடைய அம்மா மலர்ச்சியுடன் மகனை நோக்கினாள்.

"அம்மா இவங்க வித்யா. என் ஆபீஸ்ல வேலை பார்க்கிறாங்க. ஜோவியலாப் பேசுவாங்க. வேலையிலேயும்பர்ஃபெக்ட்" என்று சித்தார்த்தன் அறிமுகப்படுத்தியவுடன் 'ஹச்,' 'ஹச்' என்று தும்மினேன்.

"என்னம்மா?" என்று அவர் அம்மா பதறவும்,

"உங்க மகன் வைக்கிற ஐஸ்னாலே ஜலதோஷம் பிடிச்சிருச்சு," என்று சொன்னவுடன் சிரிப்பலை பரவியது.

"இரண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்க. சாப்பிட ஏதாவது கொண்டு வர்றேன்" என்று சொன்னபடியே அம்மா உள்ளே சென்றார்.

என்ன பேசுவது என்று புரியாமல் மௌனமாக இருந்தோம், இருவரும்.

"என்ன வித்யா, திடீர்னு ஊமையாயிட்டீங்க?"

— சித்தார்த்தன் கேட்டவுடன் நீண்ட நாட்களாய் அவரிடம் கேட்க நினைத்ததைக் கேட்க ஆரம்பித்தேன்.

"ஏன் சார், நாம ஆபீஸ்ல முதல் நாள் பேசியது ஞாபகம் இருக்கா?"

"ஓ. எஸ். புத்தன்தானே?" — சிரிப்புடன் அவர் சொல்ல, நானும் புன்னகை செய்தேன்.

"இந்தச் சித்தார்த்தன் புத்தனா கூடிய சீக்கிரம் மாறுவான்னு ஏன் சார் சொன்னீங்க அன்னிக்கு?"

என் திடீர்க் கேள்வியால் மௌனமாகி, தலைகுனிந்து ஏதோ யோசித்தார்.

"...சொல்றேன். சின்ன வயசிலிருந்தே புத்தரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆசைகளே துன்பத்திற்குக் காரணம்னு அவர் சொன்ன தத்துவம் என் மனசுல அப்படியே பதிஞ்சு போச்சு."

"புத்தர் பெரிய ஞானிதான் சார். ஆனால் அவரை ஒரு பெண்ணான எனக்குப் பிடிக்காது சார்."

என் பேச்சால் நூல் அறுபட்ட திடுசில் விழித்தார்.

"அப்புறம் என்ன சார், கல்யாணம் பண்ணிக்கிட்ட மனைவியையும், பெத்த குழந்தையையும் அம்போன்னு விட்டுட்டு அவர் பாட்டுக்குத் துறவியாயிட்டாரே, ஞானம் தேடித் தடால்னு அவர் காட்டுக்குப் போயிட்டாரே, அந்தம்மா மனசும், அவர் குழந்தை மனசும் அவரோட பிரிவினாலே எவ்வளவு ஏங்கியிருக்கும். அப்பாவோட அரவணைப்பும், புருஷனோட அன்பும் அவ்வளவு சீக்கிரமே இழந்து எவ்வளவு தவிச்சிருப்பாங்க ரெண்டு பேரும்?"

"நோ, நோ, நீங்க மனைவி, குழந்தைகள்னு சின்ன வட்டத்துக்குள்ளேயே சுற்றி வந்து இதைப் பார்க்காதீங்க வித்யா. உலகம்னு சொல்ற பெரிய வட்டத்துலே இருந்து பாருங்க. புத்தரின் போதனைகள் மூலமா எவ்வளவு அருட்செல்வங்கள் நமக்குக் கிடைச்சிருக்கு."

சித்தார்த்தன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு கையில் டிபன் தட்டும், மறு கையில் தம்ளருமாக அவர் அம்மா ஹாலில் நுழைந்தார்.

"ஆரம்பிச்சுட்டியாடா உன் பிரசங்கத்தை...!"

"இல்லைம்மா... இது... நான்தான் இதைப் பற்றிய பேச்சை எடுத்தேன்" — நான் இடையில் புகுந்தேன்.

"யார் ஆரம்பிச்சாலும்சரி முதல்ல இதைச் சாப்பிடு!" என்று போலியான கண்டிப்புடன் அம்மா கூறவும் சிரித்தபடி பூரி, மசாலை வெட்ட ஆரம்பித்தேன்.

"என்னடி வித்யா, புத்தரோட மூஞ்சி இன்னிக்கு 'டல்'லா இருக்கு?"

பக்கத்து சீட் கல்பனா என் காதில் கிசுகிசுத்ததும் சித்தார்த்தனைக் கவனித்தேன். முதல் நாள் நான், சித்தார்த்தனோடு பேசியதைச் சொன்னதிலிருந்து அவருக்குப் 'புத்தர்' பட்டப் பெயர் சூட்டிவிட்டாள் கல்பனா.

'லஞ்ச்' டைமில்தான் சித்தார்த்தனுடன் பேச நேரம் கிடைத்தது.

நாற்காலியை அவர் மேஜைக்கு முன் இழுத்துப் போட்டு அமர்ந்தேன்.

"என்ன சார். மூடியா இருக்கீங்க?"

அன்று அவர் வீட்டுக்குப் போய் வந்த பிறகு இருவரும் ஃப்ரீயாகப் பழக ஆரம்பித்திருந்தோம்.

பேப்பர் வெயிட்டைக் கையினால் சுற்றியவாறே என்னைப் பார்த்தார்.

"நேற்று மாலையில் அம்மாவோட ஒரு



தயாரிப்பாளர்: என்னது. நம்ம பட பட்ஜெட்ல சோடா செலவு ஐந்நூறு ரூபாய்னு போட்டிருக்கே?

உதவியாளர்: நம்ம படத்துல கதாநாயகன் நடிக்கிறது அரசியல்வாதி கதாபாத்திரத்தில் ஆச்சே!
— எஸ். முகம்மது யூசுப்.



சின்ன வாக்குவாதம். அதான்...''

''அம்மாவோடா? என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''உங்ககிட்டே சொல்றதுக்கு என்ன? கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நச்சரிக்கிறாங்க. நேற்று கொஞ்சம் அதிகமாகவே பேசிட்டோம் ரெண்டு பேருமே, இதைப் பற்றி'' என்றார் வருத்தமான குரலில்.

''அவங்க சொல்றது சரிதானே சார். காலாகாலத்துல பேரனையோ, பேத்தியையோ கொஞ்சணும்னு ஆசை இருக்காதா, அவங்களுக்கு?''

''அதுக்காக நான் கல்யாணம் பண்ணிக்கணுமா?'' என்று அவர் சொல்லவும் புரியாமல் அவரைப் பார்த்தேன்.

இந்த வயதில் இவருக்கு ஏன் இப்படி ஒரு வெறுப்பு திருமணத்தின் மீது...?

''ஏன் சார், அப்படிச் சொல்றீங்க?''

''கல்யாணம் பண்ணிக்கிட்டா பொருள் சேர்க்கணும்கிற ஆசை சாத்தானா உள்ளே புகுந்துடும். அப்புறம் மனுஷன் படற பாட்டையும், ஓடற ஓட்டத்தையும்தான் பார்க்கிறேனே!

''உங்க புத்தர் கூட கல்யாணம் பண்ணி, குழந்தையைக் கொஞ்சினப்புறம்தான் சார் துறவியானார். ஆசைங்கறது மனசு சம்பந்தப்பட்ட விஷயம். காந்திஜி குடும்ப வாழ்க்கையிலே இருந்துக்கிட்டே 'புத்தரா' வாழலையா? நம்ம மனசை கண்ட்ரோல் பண்ண முடியுங்கற நம்பிக்கை இல்லாதவங்கதான் இப்படித் தப்பிச்சு ஓடப் பார்ப்பாங்க.

நீங்க கோழையா ஓடி ஒளியப் போறீங்களா இல்லை ஒரு மகனா இருந்து அம்மாவோட ஆசையை நிறைவேற்றப் போறீங்களான்னு முடிவு பண்ணிக்குங்க. உங்க மேலே உங்களுக்கு நம்பிக்கை இருந்தா அம்மா சொல்றபடி கேளுங்க'' என்று சொல்லி அவரை யோசிக்கவிட்டு என் சீட்டுக்குத் திரும்பினேன்.

டியர் வித்யா,

நான் 'இல்லறபுத்தனா'க மாற உன் உதவி தேவை. உதவிக்கரம் நீட்டுவாயா நான் பற்றிக் கொள்ள?

அன்புடன்,
சித்தார்த்தன்.

கடிதத்தைப் படித்த படபடப்புடன் எதிரில் புன்னகையுடன் அமர்ந்திருந்த சித்தார்த்தனைப் பார்த்தேன்.

இன்று அலுவலகம் முடிந்தபின் இங்கு அழைத்து வந்து, இந்த ரெஸ்டாரெண்டில் அமர்ந்தவுடன், 'மறுபடியும் அம்மாவோடு மனஸ்தாபம்போலிருக்கிறது' என்று நினைத்தால், இப்படி ஓர் இரத்தினச் சுருக்கமான கடிதத்தை நீட்டி விட்டாரே...!

''இது நான் உடனே எடுத்த முடிவில்லை வித்யா. உன்னை முதன் முதலில் பார்த்து, பேசியவுடனேயே என்னுள் ஒரு சலனத்தை நீ ஏற்படுத்தினாய். பின்வந்த நாட்களில் உன் குணம் தெரிந்து போய் என் நேசிப்பு இன்னும் அதிகமானது. இருந்தாலும் நான் வறட்டுப் பிடிவாதமாக இருந்தேன். ஆனால் அம்மாவின் நச்சரிப்பும், அன்னிக்கு லஞ்ச் நேரத்துல நீ பேசினதும் என் பிடிவாதத்தைத் தளர வைச்சிடுச்சு. இதுலே உனக்குச் சம்மதமில்லேன்னா பளிச்சுனு சொல்லிடு. நான் வற்புறுத்த மாட்டேன்'' என்று அவர் சொல்லவும் தலைகுனிந்து சிந்தித்தேன்.

யோசித்துப் பார்த்ததில் என் மனமும் அவர்பால் ஈர்க்கப்பட்டிருந்ததை, நடந்த சம்பவங்கள் உணர்த்தின. இல்லாவிட்டால், சித்தார்த்தன் இப்படிச் சொன்னவுடன் என் மனத்தில் ஒரு திடுக்கிடலோ, கோபமோ ஏற்படவில்லையே, ஏன்...? ஓர் இனம் புரியா சந்தோஷம் இதயத்துள் புகுந்ததை என்னால் மறுக்க முடியவில்லை.

''என்ன வித்யா, பதிலே காணோம்?'' — தவிப்புடன் கேட்டவரை ஏறிட்டேன்.

''இல்லை... உங்க அம்மா என்ன சொல்லுவாங்களோ... நான்...'' என்று நான் இழுக்கவும்.

''அம்மாவா...? அவங்கதானே என் ஆசைக்குத் தூபம் போட்டதே. நீ அனாதைன்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும். அதுமட்டுமில்லே. நீ ஆசிரமத்திலே வளர்ந்ததும் மற்றும் உன்னைப் பற்றிய எல்லாத்தையும் அவங்ககிட்டே முன்னாடியே சொல்லிட்டேன்.''

''நான் அனாதைன்னு தெரிஞ்சப்புறமும் கூடவா...?''

''ப்ச், என்ன இப்படிச் சந்தேகப்படறே... எங்களுக்குத் தேவை ஒரு நல்ல பொண்ணு தான். வேறே எதைப் பற்றியும் அக்கறையில்லை. அம்மாவுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு. எனக்கும் ரொம்...ம்...பப் பிடிச்சுப் போச்சு. வேறு என்ன வேணும்?'' — இடையில் புகுந்து சித்தார்த்தன் சொன்னதும் என் இதயம் இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்தது.

''அப்ப ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு நீங்க சொன்னதெல்லாம் . என்னாகறது?''

''உன் மேலே உள்ள ஆசையே இன்பத்துக்குக் காரணம்னு இப்ப சொல்றேன்.''

''நல்ல ஆளுப்பா நீங்க. நினைச்சா தத்துவத்தையே மாத்திக்கறீங்களே!'' என்று நான் கூற, இருவரும் பலமாகச் சிரித்து அந்த ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மற்றவர்கள் கவனத்தை ஈர்த்தோம்.


இப்பிரதேசத்தின் ஆயிரக் கணக்கான
கிலோ மீட்டர் களை டன் கணக்கில் சுமை
ஏற்றிய டிரக்கில் எளிதாக வென்றிடுங்கள்



காலம் கடந்த கடும் மழைகள், சாலைகளில் எதிர்பாராத வெள்ளங்கள், மண்சரிவுகள், பல காத தூரம் குண்டு குழிகள் — ஆம் இந்தியச் சாலைகளில் எதிர்பாராதவற்றை எதிர்பார்க்கலாம். இத்தகைய எதிர்பாராத சவால்களை நேரிடுவதற்கென்றே, ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களை டன் கணக்கான சுமை ஏற்றிய டிரக்கில் எளிதாகக் கடப்பதற்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள டயர் விக்ராந்த். இந்தியச் சாலைகளில் ஓட்டுவதற்காகவே நவீன தொழில் நுட்பத்தால் வலுப் படுத்தப்பட்டு வரும் நம்பகமான டயர்.

உலகின் முதன்மையான வேக ஓட்ட டயரின் தொழில் நுட்பம்

ஒவ்வொரு விக்ராந்த் டயரின் பின்னிலும் இங்கிலாந்தின் ஏவான் நிறுவனத்தின் மேம்பட்ட தொழில் நுட்பம் உள்ளது. இந்நிறுவனம் மோட்டார் வண்டிகளின் ராஜாவான, உலகின் முதன்மையான ஓட்டப் பந்தய டயர்கள் பொருத்தப்பட்ட ரோல்ஸ்-ராய்ஸின் தேவைகளைச் சந்திக்கும் பெரிய நிறுவனமாகும். விக்ராந்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலாகா ஏவான் தொழில் நுட்பத்தைப் பின்பற்றி இந்தியச் சாலைகளுக்கு ஏற்றபடி செயல்திறன் வாய்ந்ததாக டயர்களைத் தயாரிக்கிறது.

இந்தியாவின் முதல் டிரக் ரேடியலைத் தயாரித்த தொழில் நுட்பம்

விக்ராந்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலாகா டிரக் ரேடியல்களைப் பற்றி ஆய்ந்ததின் விளைவு இங்கிலாந்தின் மார்க்கெட்டினை வென்ற மிகமிக வலிமை வாய்ந்த ஒரு டயராகும். இதன் காரணமாக இங்கிலாந்துக்கு டிரக் ரேடியல்களை ஏற்றுமதி செய்த முதல் கம்பெனி விக்ராந்த் எனப் பெயர் பெற்றது.

விக்ராந்த் — புதிய வண்டியில் பொருத்தப்படும் ஒரிஜினல் பாகம்

விக்ராந்தின் செயல்திறன் நாடு முழுதும் போக்குவரத்துத் துறையில் நம்பகரமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்னணி நிறுவனங்களான டெல்கோ, மற்றும் அசோக் லேலண்டு வண்டிகளில் இது ஒரிஜினல் பாகமாக பொருத்தப்படுகிறது. பெரும்பான்மையான மாநில போக்குவரத்து நிர்வாகங்களின் பஸ்களில் பல்லாயிரக்கணக்கான மக்களை நாடு முழுவதும் ஏற்றிச் செல்கிறது.

எனவே, செயல்திறன் நிரூபிக்கப்பட்டு, நவீன தொழில் நுட்பத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டு, எதிர்பாராத சவால்களை நேரிட வரும்போது நீங்கள் நம்பக் கூடியதாக இருக்க வேண்டிய டயர் உங்களுக்கு வேண்டும் எனின், எந்த டயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை இப்போது அறிவீர்கள்!

VIKRANT

நம்பகமான டயர்

பொறுப்பான கம்பெனி

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 12

வேல் முறிந்தது!

கந்தமாறன் அவனுடைய அருமை நண்பனாயிருந்த வந்தியத்தேவன் மீது கூறிய குற்றச்சாட்டைக் கேட்டு ஆதித்த கரிகாலன் இடி இடி என்று உடல் குலுங்கச் சிரித்தான்.

"கந்தமாறா! வந்தியத் தேவன் உன் முதுகில் குத்தி விட்டான் என்றா சொல்லுகிறாய்? நீ என்னத்திற்காக அவனுக்கு முதுகு காட்டினாய்?" என்று கேட்டு விட்டு மறுபடியும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கத் தொடங்கினான்.

கந்தமாறனுடைய கரிய முகம் சிவந்தது. கண்கள் கோவைப் பழம் போலாயின. உதடுகள் துடித்தன.

"ஐயா! தாங்கள் இதைச் சிரிக்கக் கூடிய விஷயமாகக் கருதுகிறீர்களா?" என்று கேட்டான்.

"கந்தமாறா! நான் சிரிக்கக் கூடாது என்று சொல்லுகிறாயா? சிரிப்பு என்பது மனிதர்களுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் ஒரு வரப்பிரஸாதம். மாடு சிரிக்காது; ஆடு சிரிக்காது; குதிரை சிரிக்காது; சிங்கம் சிரிக்காது; வேடிக்கை விளையாட்டுகளில் மிக்க பிரியம் உள்ள குரங்குகள் கூடச் சிரிப்பதில்லை. மனித ஜன்மம் எடுத்தவர்கள் மட்டுந்தான் சிரிக்க முடியும். அப்படியிருக்க, நீ என்னைச் சிரிக்கக் கூடாது என்கிறாயே? நான் கூடச் சிரித்து ரொம்ப காலமாயிற்று, நண்பா! இப்போது நான் சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. நீ என்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது என்கிறாயே?" என்றான் ஆதித்தகரிகாலன்.

"ஐயா! தாங்கள் சிரித்து மகிழ்வது பற்றி எனக்கும் சந்தோஷந்தான்! ஆனால் நான் இந்தச் சூராதி சூரனுக்கு முதுகு காட்டியதாக எண்ணிக் கொண்டு சிரிக்க வேண்டாம். நான் எதிர்பாராத சமயத்தில் பின்னால் மறைந்திருந்து இவன் என்னைக் குத்தினான். துர்க்கா தேவியின் அருளாலும் நந்தினி தேவியின் அன்பான சிகிச்சையினாலுமே நான் பிழைத்து எழுந்து வந்தேன். இவன் செய்த அந்தத் துரோகச் செயலைக் குறித்துத் தாங்கள் விசாரித்து நியாயம் செய்யுங்கள். அல்லது நானே இவனைத் தண்டிப்பதற்கு எனக்கு உடனே அதிகாரம் கொடுங்கள்!" என்றான் கந்த

அமரர் கல்கி

மாறன்.

"நண்பனே! நானே அவசியம் விசாரித்து நியாயம் வழங்குகிறேன். செம்பியன் குலத்து மன்னர்களிடம் ஒருவன் நியாயம் கேட்டு, அவனுக்கு நியாயம் கிட்டவில்லை என்ற பேச்சு இதுவரையிலே கிடையாது. எங்கள் பரம்பரையின் ஆதி மன்னனாகிய சிபி புறாவுக்கு நியாயம் வழங்குவதற்காகத் தன் சதையைத் துண்டு துண்டாக வெட்டிக் கொடுக்கவில்லையா? எங்கள் குலத்தைச் சேர்ந்த மனுநீதிச் சோழன் பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காகத் தன் குமாரனையே பலி கொடுக்கவில்லையா? நீ புறாவை விட பசுவை விட, மட்டமானவன் அல்ல. உனக்கு நான் நியாயம் வழங்க மறுக்க மாட்டேன். இவனை நான் விசாரிக்கும் வரையில் பொறுமையாயிரு! வல்லவரையா! உன் பிரயாணத்தைப் பற்றிய மற்ற விவரங்களைச் சொல்வதற்கு முன்னால், கந்தமாறனுடைய குற்றச் சாட்டுக்கு நீ மறுமொழி சொல்லி விடுவது நல்லது. என்ன சொல்லுகிறாய்? இவனை நீ பின்னாலிருந்து முதுகில் குத்தியது உண்மையா? அப்படியானால், அத்தகைய வீரலட்சணமில்லாத நீசத்தனமான காரியத்தை ஏன் செய்தாய்? எதற்காகச் செய்தாய்?" என்று கேட்டான்.

"இளவரசே! நான் இந்த வீராதி வீரனைக் குத்தவும் இல்லை; முதுகில் குத்தவும் இல்லை; அதுவும் பின்னால் நின்று முதுகில் குத்தவும் இல்லை. முதுகில் குத்தப்பட்டு நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைத் தோளில் தூக்கிக் கொண்டு போய்ச் சேந்தன் அமுதன் வீட்டில் போட்டுக் காப்பாற்றினேன். ஆனால் அப்படி இவன் உயிரைக் காப்பாற்றியதற்காக நான் இப்போது வருத்தப்படுகிறேன். இவனை மார்பிலே குத்திக் கொல்லாமற் போனோமே என்று பச்சாத்தாபப்படுகிறேன். சிநேக தர்மத்தை முன்னிட்டு என் அரசருக்குச் செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணித்து விட்டேன். ஐயா! இவன் என்னைச் சிநேகத் துரோகி என்று சொன்னான். ஆனால் இவன் சிநேகத் துரோகி மட்டுமல்ல; எஜமானத் துரோகி. இவன் முதுகில் குத்தப்பட்டது எங்கே, எந்த சந்தர்ப்பத்தில் என்று கேளுங்கள்! தஞ்சாவூர்க் கோட்டையின் இரகசிய சுரங்க வழியாக இவன் யாரைப் பழுவேட்டரையர் அரண்மனையில் கொண்டு போய் விட்டுத் திரும்பினான் என்று கேளுங்கள். பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் இவன் அன்றிரவு யாரைப் பார்த்தான் என்று கேளுங்கள். ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு தினத்தில் இவனுடைய கடம்பூர் மாளிகையில் என்ன நடந்தது என்று கேளுங்கள். அன்றைக்கு அங்கே மூடு பல்லக்கிலே மறைந்து கொண்டு வந்தது யார் என்று கேளுங்கள்!"

இந்தச் சமயத்தில் கந்தமாறன், உடல் நடுங்க, நாக்குழற, "அடே! அற்பப் பயலே! நிறுத்து உன் அபத்தப் பேச்சை! இல்லாவிட்டால் இதோ இந்த வேலுக்கு இரையாவாய்!" என்று கூறி வேலைக் கையில் எடுத்தான்.

ஆதித்த கரிகாலன் அவனுடைய படபடப்பைக் கண்டு சிறிது வியப்படைந்தான். கந்தமாறனுடைய கையிலிருந்த வேலைப் பிடுங்கித் தனது இரும்பையொத்த கரங்களினால் அதன் அடிக் காம்பை வளைத்தான். வேல் படார் என்று முறிந்தது. அதன் இரு பகுதிகளையும் ஆதித்த கரிகாலன் வீசித் தூர எறிந்து விட்டு, "ஜாக்கிரதை! என் சிநேகிதர்கள் என் முன்னாலேயே சண்டையிடுவதை நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது... பார்த்திபேந்திரா! இவர்களில் யாராவது இனி வேலையோ, வாளையோ, கையில் எடுத்தால் உடனே அவனைச் சிறைப்படுத்துவது உன் பொறுப்பு!" என்றான்.

உடனே வந்தியத்தேவன் தன்னிடமிருந்த வாளை எடுத்துப் பார்த்திபேந்திரனிடம் கொடுத்தான். பார்த்திபேந்திரனும் வேண்டா வெறுப்பாக அந்த வாளைப் பெற்றுக் கொண்டான்.

"கந்தமாறா! உன்னுடைய குற்றச் சாட்டுக்கு வல்லவரையன் மறுமொழி கூறினான். அதன் உண்மையைக் குறித்து நானே சாவகாசமாக விசா

ரித்துத் தீர்ப்புக் கூறுகிறேன். அவன் கேட்ட கேள்விகளுக்கு நீ விடை சொல்லப் போகிறாயா?'' என்று கரிகாலன் கேட்டான்.

கந்தமாறன் தட்டுத் தடுமாறி மென்று விழுங்கிக் கொண்டு, ''ஐயா! அந்த விஷயங்களைப் பற்றி நான் யாரிடமும் சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறேன்'' என்றான்.

பார்த்திபேந்திரன் இப்போது தலையிட்டு, ''அரசே! இவர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவது ஏதோ பெண்ணைப் பற்றிய விஷயமாகக் காண்கிறது. ஆகையால் இவர்களைத் தனித் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது நலம்!'' என்றான்.

''ஆம், பார்த்திபா! நானும் அப்படித்தான் கருதுகிறேன். நீங்கள் மூன்று பேரும் தனித்தனியாகப் பழுவூர் இளைய ராணியைப் பார்த்து அவளுடைய மோக வலையில் விழுந்திருக்கிறீர்கள். ஆகையினால்தான் ஒருவரை ஒருவர் விழுங்கி விடப் பார்க்கிறீர்கள்!'' என்று கரிகாலர் கூறிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

பார்த்திபேந்திரனுடைய முகம் சிணுங்கியது. அவன், ''பிரபு! தாங்கள் இன்றைக்கு எந்த முக்கிய விஷயத்தையும் இலேசாகக் கருதிச் சிரிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. நல்லது; நானும் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். இந்த வந்தியத் தேவன் பேரில் எனக்கும் பல சந்தேகங்கள் இருக்கின்றன. முக்கியமானதை மட்டும் இப்போது சொல்லுகிறேன். இவனைத் தீப் பிடித்த கப்பலிலிருந்து காப்பாற்றுவதற்காகவே தங்கள் அருமைச் சகோதரர் நடுக்கடலில் கடும் புயலில் குதித்தார். பிறகு பொன்னியின் செல்வரைக் காணவே இல்லை. இவன் மட்டும் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் கொட்டாப் புளியைப் போல் இங்கே வந்து முளைத்திருக்கிறான். தங்கள் சகோதரர் என்ன ஆனார் என்று இவனைக் கேளுங்கள். அவரைக் கடல் கொண்டிருந்தால் அதற்கு இந்தப் பாதகனே காரணமாவான்!'' என்றான்.

கரிகாலர் வந்தியத்தேவனைப் பார்த்து, ''இதற்கு என்ன மறுமொழி சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

''ஐயா! நான் இவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லுவதற்கு முன்னால், இவர் ஒரு கேள்விக்கு விடை சொல்லட்டும். பொன்னியின் செல்வரை இலங்கையிலிருந்து இவர் தான் தம்முடைய கப்பலில் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். முதன் மந்திரி அநிருத்தரும் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியும் இலங்கையிலேயே இருக்கும்படி பொன்னியின் செல்வரைக் கேட்டுக் கொண்டார்கள். ஆயினும் தமையன் கட்டளையைப் பெரிதாய் மதித்து இளவரசர் இவருடைய கப்பலில் ஏறிக் கிளம்பினார். அவரை ஏன் இவர் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு வந்து சேர்க்கவில்லை? நடுக் கடலில் பொன்னியின் செல்வர் குதித்த போது இவர் ஏன் பார்த்துக் கொண்டு நின்றார்? ஏன் இளவரசரைத் தடுக்கவில்லை? ஏழையும் அநாதையுமான என்னைக் காப்பாற்றுவதற்காகப் பொன்னியின் செல்வர் தம் உயிருக்குத் துணிந்து இறங்கினாரே! வீர பல்லவ குலத்தின் தோன்றலாகிய இவரும் இவருடைய ஆட்களும் இளவரசரைப் பாதுகாப்பதற்காக ஏன் கடலில் குதிக்கவில்லை? அவரைக் கடல் கொண்டு போவதை வேடிக்கை என்று எண்ணிப் பார்த்துக் கொண்டு நின்றார்களா?.....''

பார்த்திபேந்திரனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவனுடைய கைகள் துடித்தன; உதடுகளும் துடித்தன; உடல் ஆடியது.

''ஐயா! இந்த மூடன் என் மீது குற்றம் சுமத்துகிறான் என்று தோன்றுகிறது. இளவரசரை நானே கொன்று விட்டேன் என்று கூடச் சொல்லுவான் போலிருக்கிறது. இதை நான் ஒரு கணமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது!'' என்றான்.

கரிகாலன் அவனை உற்று நோக்கி, ''பார்த்திபா! நான்தான் சொன்னேனே? என் அருமைத்

தோழர்களாகிய நீங்கள் மூன்று பேரும் ஒருவரையொருவர் கடித்துத் தின்று விடும் நிலைக்கு வந்து விட்டீர்கள். இதற்கெல்லாம் நான் உங்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. அந்தப் பழுவூர் ராணியின் சக்தி அப்படிப்பட்டது என்பதை நானே உணர்ந்திருக்கிறேன். நீயும் கந்தமாறனும் குதிரை மீது ஏறிச் சற்று முன்னால் மெதுவாகப் போய்க் கொண்டிருங்கள். இவனுடைய பிரயாண விவரங்களைக் கேட்டுக் கொண்டு நான் சற்றுப் பின்னால் வருகிறேன். உங்கள் குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரித்து உண்மையைக் கண்டு பிடிக்கிறேன். ஆனால் ஒன்று நிச்சயமாய் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மூன்று பேரும் சிநேகமாக இருந்தே தீர வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டீர்களானால், அதைக் காட்டிலும் எனக்கு அதிருப்தி உண்டாக்குவது வேறொன்றுமிராது!''

பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் வேறு வழி இன்றித் தத்தம் குதிரை மீது ஏறி முன்னால் சென்றார்கள்.

அப்போது ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவன் அருகில் வந்து அவன் காதோடு ''அப்பனே! நீ வெகு கெட்டிக்காரனாகி விட்டாய்! பொய்யும் சொல்லாமல் உண்மையையும் வெளியிடாமல் வெகு சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக் கொண்டாய்!'' என்றான்.

அப்போதுதான் ஆதித்த கரிகாலன் பார்வை அங்கு வந்த ஆழ்வார்க்கடியான் மீது விழுந்தது.

''ஓகோ! இவன் யார்? எப்போதோ, எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறதே!'' என்று கேட்டான்.

''ஆம், அரசே! சில ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருக்கிறீர்கள்!''.

''உன் குரல் கூடக் கேட்ட குரலாகத்தானிருக்கிறது.''

''ஆம், ஐயா! மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மிக முக்கியமான ஒரு தருணத்தில் என் குரலைக் கேட்டீர்கள்....''

ஆதித்த கரிகாலரின் முகத்தில் திடீரென்று ஒரு கரிய நிழல் வேகமாகப் படர்வது போலிருந்தது.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்.... முக்கியமான தருணம்... அது என்ன?... வைகை நதித் தீவில் பகைவனைத் தேடி அலைந்த போது நான் கேட்ட குரலா? அப்படியும் இருக்க முடியுமா?''

''அந்தக் குரல் என் குரல்தான். அரசே! பகைவன் ஒளிந்திருந்த இடத்தைத் தங்களுக்கு மரத்தின் மறைவிலிருந்து சொன்னவன் நான்தான்!''

''ஆகா! என்ன பயங்கரமான தினம் அது? அன்றைக்கு எனக்குப்



பிடித்திருந்த வெறியை நினைத்தால் இன்று கூட உடல் நடுங்குகிறது. வைஷ்ணவனே! நீ ஏன் அன்று காட்டில் மறைந்திருந்தாய்? எதற்காக உன்னை அசரீரியாக மாற்றிக் கொண்டாய்?''

''அரசே! சற்று முன் தாங்களே சொன்னீர்களே! தங்களுக்கு அன்று பிடித்திருந்த வெறியைப் பற்றி! எதிரில் கண்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு போனீர்கள். சில காலம் நான் உயிர் வாழ விரும்பினேன்....''

''அது மட்டுந்தானா காரணம்? 'அசரீரி வெளி வந்து எனக்கு வழிகாட்டட்டும்' என்று எவ்வளவோ முறை தொண்டை வலிக்கக் கூவினேனே? அப்போதும் நீ. ஏன் வெளி வரவில்லை?''

''நான் வளர்த்த சகோதரி — இப்பொழுது பழுவூர் இளையராணி — அவளுடைய தீராத கோபத்துக்கு ஆளாக நான் விரும்பவில்லை.....''



"அவளுடைய தீராத கோபத்துக்கு நான் மட்டும் ஆளாகலாம் என்று எண்ணினாயாக்கும்! அட சண்டாளா!" என்று கூறி ஆதித்த கரிகாலர் இடையிலிருந்த கத்தியை உருவினார்.

வந்தியத் தேவன் பயந்து போனான். ஆழ்வார்க்கடியானுடைய வாழ்வு அன்றோடு முடிந்தது என்றே எண்ணினான். மிக்க தயக்கத்துடன் "ஐயா! இந்த வைஷ்ணவன் முதன் மந்திரியிடமிருந்து வந்திருக்கிறான். இவன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டுக் கொண்டு பிறகு இவனைத் தண்டியுங்கள்!" என்றான்.

"ஆகா! இவனைத் தண்டித்து என்ன பிரயோஜனம்? இனி யாரைத் தண்டித்து என்ன பயன்?" என்று கூறிக் கரிகாலன் கத்தியை உறையில் போட்டான்.

கரிகாலரின் கோபத்தைக் கண்டு வந்தியத்தேவன் பயந்தது போல் ஆழ்வார்க்கடியான் பயந்ததாகத் தெரியவில்லை. முகத்தில் விசித்திரமான புன்னகையுடன், "அரசே! தங்கள் கோபத்தை என் பேரில் திருப்புவீர்கள் என்று எண்ணித்தான் இத்தனை நாளும் தங்களை நான் நேரில் சந்திக்காமலிருந்தேன். என் பேரில் என் சகோதரி கொண்ட கோபமும் இன்னும் தீரவில்லை. இன்று வரையில் என்னைப் பார்ப்பதற்குப் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் தங்கள் பேரில் அவளுடைய கோபம் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நந்தினி தேவியின் அன்பான திருமுக ஓலையைப் பார்த்து விட்டுத்தானே தாங்கள் கடம்பூர் அரண்மனைக்கு விருந்துக்குப் புறப்பட்டீர்கள்?" என்றான்.

"ஆகா! துஷ்ட வைஷ்ணவனே! அது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கரிகாலன் கேட்டான்.

"ஐயா! முதன் மந்திரி அநிருத்தரின் பணியாளன் நான். முதன் மந்திரிக்குத் தெரியாமல் இந்தச் சோழ ராஜ்யத்தில் எந்தச் சிறிய காரியமும் நடக்க முடியாது" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்துக் கொண்டே இரு! ஒரு நாள் அந்த அன்பில் அநிருத்தனையும் உன்னையும் சேர்த்துத் தேசப் பிரஷ்டம் செய்து விடுகிறேன்!.... இப்போது இருவரும் குதிரை மீது ஏறிக் கொள்ளுங்கள்! என் இரு பக்கத்திலும் வந்து கொண்டிருங்கள். பேசிக் கொண்டே போகலாம்" என்றான் ஆதித்த கரிகாலன்.

அத்தியாயம் 13

மணிமேகலையின் அந்தரங்கம்

கடம்பூர் மாளிகையின் விருந்தினர் பகுதியில், விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப்புரத்து அறையில், சப்ரமஞ்சக் கட்டிலில் நந்தினி சாய்ந்து கொண்டிருந்தாள். அவளும் அன்றைக்கு மிக நன்றாக அலங்கரித்துக் கொண்டு விளங்கினாள். அவளுடைய முகம் என்றுமில்லாத எழிலுடன் அன்று திகழ்ந்தது. அவள் பகற் கனவு கண்டு கொண்டிருக்கிறாள் என்பது அவளுடைய பாதி மூடிய கண்களிலிருந்து தெரிந்தது. கண்களின் கரிய இமைகள் மூடித் திறக்கும்போதெல்லாம் விழிகளிலிருந்துமின்னலைப்போன்ற காந்த ஒளிக் கிரணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. இதிலிருந்து அவள் பார்ப்பதற்கு அரைத் தூக்கத்தில் இருப்பதாகத் தோன்றினாலும் அவளுடைய உள்ளம் உத்வேகத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தது என்பது நன்றாகப் புலனாயிற்று.

இன்னும் சிறிது கூர்ந்து கவனித்துப் பார்த்தால், அவளுடைய பாதி மூடிய கண்களின் பார்வை அந்த அறையின் ஒரு பக்கத்தில் அகிற் குண்டத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருந்த புகைத் திரளின் மீது சென்றிருந்தது என்பதை அறியலாம். குண்டத்

திலிருந்து புகை திரளாகக் கிளம்பிச் சுழி சுழியாக வட்டமிட்டுக் கொண்டு மேலே போய்ச் சிதறிப் பரவிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய்க் கொண்டிருந்தது. அந்த அகிற் புகைச் சுழிகளிலே நந்தினி என்னென்ன காட்சிகளைக் கண்டாளோ, தெரியாது. திடீரென்று அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். அவளுடைய பவள இதழ்கள் "ஆம், ஆம்! நான் கண்ட கனவுகள் எல்லாம் இந்தப் புகைத் திரளில் தோன்றும் சுழிகளைப் போலவே ஒன்றுமில்லாமல் போயின. இந்தப் புகைத் திரளாவது அருமையான நறுமணத்தைத் தனக்குப் பின்னால் விட்டு விட்டு மறைகிறது. என் கனவுகள் பின்னால் விட்டுப் போனவையெல்லாம் வேதனையும் துன்பமும் அவதூறும் அபகீர்த்தியுந்தான்!" என்று முணுமுணுத்தன.

அச் சமயம் "தேவி! தேவி! உள்ளே வரலாமா?" என்று மணிமேகலையின் மெல்லிய குரல் கேட்டது.

"வா, அம்மா, வா! உன்னுடைய வீட்டில் நீ வருவதற்கு என்னைக் கேட்பானேன்?" என்றாள் நந்தினி.

மணிமேகலை அந்தக் கதவைத் திறந்து கொண்டு மெள்ள நடந்து தான் வந்தாள். ஆனால் அவளுடைய முகத் தோற்றத்திலும் நடக்கும் நடையிலும் கையின் வீச்சிலும் உற்சாகம் ததும்பியபடியால் அவள் துள்ளிக் குதித்து ஆடிப் பாடிக் கொண்டு வருவதாகத் தோன்றியது.

நந்தினி சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தந்த பீடத்தைக் காட்டி, அதில் மணிமேகலையை உட்காரச் சொன்னாள்.

மணிமேகலை உட்கார்ந்து கொண்டு, "தேவி! தங்களிடம் நான் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று என் தமையன் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். தென் தேசத்தாரின் நாகரிகத்தைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறான். கேட்காமல் கொள்ளாமல் திடீரென்று இன்னொருவர் அறைக்குள் நுழையக் கூடாது என்று தெரிவித்திருக்கிறான்!" என்றாள்.

"தென் தேசத்தாரும் அவர்களுடைய நாகரிகமும் நாசமாய்ப் போகட்டும். உன் அண்ணன் உனக்குச் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் உடனே மறந்து விடு! என்னைத் 'தேவி' என்றோ 'மகாராணி' என்றோ ஒரு போதும் கூப்பிடாதே! 'அக்கா!' என்று அழை!"

"அக்கா! அக்கா! அடிக்கடி உங்களிடம் நான் வந்து தொந்தரவு செய்வது உங்களுக்குக் கஷ்டமாயிராதல்லவா?"

"நீ அடிக்கடி வந்து தொந்தரவு செய்வது எனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும்; என்னை விட்டுப் போகாமல் இங்கேயே இருந்து விட்டாயானால் ஒரு தொந்தரவும் இராது!" என்று கூறி நந்தினி புன்னகை புரிந்தாள்.

அந்தப் புன்னகையில் சொக்கிப் போன மணிமேகலை சற்று நேரம் நந்தினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "தங்களைப் போன்ற அழகியை நான் பார்த்ததே இல்லை. சித்திரங்களிலே கூடப் பார்த்ததில்லை" என்று சொன்னாள்.

"பெண்ணே! நீ வேறு என் மீது மோகம் கொண்டு விடாதே! ஏற்கெனவே நான் ஒரு 'மாய மோகினி' என்பதாக ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறது. என் பக்கத்தில் வரும் ஆண் பிள்ளைகளை மயக்கி விடுகிறேன் என்று என்னைப் பற்றி அவதூறு பேசுகிறார்கள்!....."

"அக்கா! அப்படி யாராவது அவதூறு பேசுவது என் காதில் மட்டும் விழுந்தால் அவர்களுடைய நாக்கை ஒட்ட அறுத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்!" என்றாள் மணிமேகலை.

"ஊராரைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை, மணிமேகலை! நான் கிழவரைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறேன் அல்லவா? அதனால் அப்படித்தான் பேசுவார்கள்!"

மணிமேகலையின் முகம் சுருங்கிற்று.

"ஆம், ஆம்! அதை நினைத்தால் எனக்குக் கூட வருத்தமாகத்தானிருக்

கிறது. என் தமையனும் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டான். அதற்காக ஒருவரைப் பற்றிக் கண்டபடி அவதூறு பேசலாமா, என்ன?....."

"பேசினால் பேசிக் கொண்டு போகிறார்கள், மணிமேகலை! அப்பேர்ப்பட்ட சீதா தேவியைப் பற்றிக் கூடத்தான் ஊரில் அவதூறு பேசினார்கள். அதனால் சீதைக்கு என்ன நஷ்டம் வந்து விட்டது? என் விஷயம் இருக்கட்டும்; உன்னைப் பற்றிச் சொல்லு!"

"என்னைப் பற்றிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது, அக்கா!"

"அடி, கள்ளி! இன்று மாலையில் வந்து உன் மனத்தில் உள்ள அந்தரங்கத்தைச் சொல்லுகிறேன் என்று நீ கூறிவிட்டுப் போகவில்லையா? இப்போது என்ன சொல்லுவதற்கு இருக்கிறது என்கிறாயே?" என்று கூறிவிட்டு நந்தினி மணிமேகலையின் அழகிய கன்னத்தை இலேசாகக் கிள்ளினாள்.

"அக்கா! எப்போதும் எனக்கு இப்படியே தங்களுடன் இருந்துவிட வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. எனக்குச் சுயம்வரம் வைத்து, பெண்கள் பெண்களையே கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்படுத்தினால் நான் தங்களுக்குத்தான் மாலையிடுவேன்!" என்றாள் மணிமேகலை.

"என்னை நீ பார்த்து முழுமையாக ஒரு நாள் கூட ஆகவில்லை! அதற்குள் இப்படி மாய்மால வார்த்தைகள் பேசுகிறாயே? அதைப் பற்றி எனக்கு சந்தோஷம்தான். எனக்குப் பிரியமான தோழி உன்னைப் போல் ஒருத்தி இல்லையே என்று எவ்வளவோ தாபப்பட்டுக் கொண்டிருந்தேன். சோழ நாட்டின் சிற்றரசர் வீட்டுப் பெண்கள் எல்லாரும் அந்தப் பழையாறைப் பிசாசைத்தான் தேடிக் கொண்டு போவார்கள். நீ ஒருத்தியாவது எனக்கு மிச்சமிருக்கிறாயே? — ஆனால் நீ சற்று முன் கூறியது நடவாத காரியம். பெண்ணுக்குப் பெண் மாலையிடுவது என்பது உலகில் என்றும் நடந்ததில்லை. யாராவது ஓர் ஆண் பிள்ளையைத்தான் நீ மணந்து கொண்டு தீர வேண்டும்......"



"கன்னிப் பெண்ணாகவே இருந்து விட்டால் என்ன, அக்கா?"

"முடியாது, கண்ணே! முடியாது! கன்னிப்பெண்ணாயிருக்க இந்த உலகம் உன்னை விடவே விடாது. உன் அம்மாவும் அப்பாவும் விடமாட்டார்கள். உன் தமையனும் விடமாட்டான். யாராவது ஓர் ஆண் பிள்ளையின் கழுத்தில் உன்னைக் கட்டி விட்டால் தான் அவர்களது மனம் நிம்மதி அடையும். அப்படி நீ கல்யாணம் செய்து கொள்வது என்று ஏற்பட்டால், யாரை மணந்து கொள்ளப் பிரியப்படுகிறாய், சொல்லு!"

"பெயரைக் குறிப்பிட்டுக் கேளுங்கள் அக்கா! சொல்கிறேன்!"

"சரி, சரி! அப்படியே கேட்கிறேன். சிவ பக்தியில் சிறந்த மதுராந்தகத் தேவரை மணந்து கொள்ள விரும்புகிறாயா? அல்லது வீரதீர பராக்கிரமங்கள் மிகுந்த ஆதித்த கரிகாலருக்கு மாலையிடப் பிரியப்படுகிறாயா?"

கிடீரென்று மணிமேகலை எதையோ நினைத்துக் கொண்டவள் போல் கலகலவென்று வாய் விட்டுச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய், மணிமேகலை? நான் பரிகாசம் செய்கிறேன் என்று எண்ணிக் கொண்டாயா? இந்த விஷ

யத்தை முடிவு செய்வதற்காகவே என்னை உன் தமையன் இங்கே முக்கியமாக வரச் சொன்னான். இன்னும் சற்று நேரத்தில் கரிகாலர் இங்கே வந்துவிடக்கூடும். உன் தமையனும் வந்துவிடுவான். உன் அந்தரங்கத்தை அறிந்து சொல்லுவதாக அவனுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன்'' என்றாள் நந்தினி.

''என் அந்தரங்கம் இன்னதென்று எனக்கே தெரியவில்லையே, அக்கா! நான் என்ன செய்யட்டும்?''

''எதற்காகச் சிரித்தாய், அதையாவது சொல்!'' என்று கேட்டாள் நந்தினி.

''மதுராந்தகர் பெயரைச் சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. நாலு மாதத்துக்கு முன்பு அவர் இந்த வீட்டுக்கு ஒரு தடவை வந்திருந்தார். தாங்கள் வழக்கமாக வரும் மூடு பல்லக்கில் ஏறிக் கொண்டு ஒருவரும் பார்க்காமல் திரை போட்டுக் கொண்டு வந்தார். அந்தப்புரத்தில் எங்களுக்கு அந்த இரகசியம் தெரியாது. தாங்கள்தான் வந்திருக்கிறீர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். 'பழுவூர் ராணி ஏன் அந்தப்புரத்துக்கு வரவில்லை?' என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருந்தோம், அக்கா! பெண்களைப் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சற்று முன் சொன்னீர்கள் அல்லவா? மதுராந்தகரை நான் மணந்து கொள்வது ஒரு பெண்ணை மணம் புரிந்து கொள்ளுவது போலத்தான்!...''

நந்தினி புன்னகை புரிந்து, ''ஆம், ஆம்! மதுராந்தகரை நீ விரும்ப மாட்டாய் என்றுதான் நானும் நினைத்தேன். உன் அண்ணனிடமும் சொன்னேன். மதுராந்தகத் தேவர் முன்னமே என் மைத்துனர் மகளை மணந்து கொண்டிருக்கிறார். அவள் ரொம்ப அகம்பாவக்காரி. அவளுடன் உன்னால் ஒருநாள் கூட வாழ்க்கை நடத்த முடியாது. அப்படியானால், இளவரசர் கரிகாலரிடம் நீ மனத்தைச் செலுத்தி விட்டாய் என்று சொல்லு!'' என்றாள் நந்தினி.

''அப்படியும் சொல்ல மாட்டேன், அக்கா! அவரை நான் பார்த்ததே



இல்லை. எப்படி என் மனம் அவரிடம் சென்றிருக்க முடியும்?''

''அடியே! இராஜகுலத்துப் பெண்கள் பார்த்து விட்டுத் தான் மனத்தைச் செலுத்துவது என்பது உண்டா? கதைகளிலும் காவியங்களிலும், சித்திரங்களைப் பார்த்து விட்டும் கீர்த்தியைக் கேட்டு விட்டும் காதல் கொண்ட பெண்களைப் பற்றி நீ அறிந்ததில்லையா?''


''ஆம், ஆம்! அறிந்திருக்கிறேன். ஆதித்த கரிகாலர் வீராதி வீரர் என்று உலகமெல்லாம் அவர் புகழ் பரவியிருக்கிறதென்றும் அறிந்திருக்கிறேன். அக்கா! வீரபாண்டியனுடைய தலையை ஆதித்த கரிகாலர் ஒரே வெட்டில் வெட்டி விட்டாராமே? அது உண்மையா?''

நந்தினியின் முகம் அச்சமயம் எவ்வளவு பயங்கரமாக மாறியது என்பதை மணிமேகலை கவனிக்கவில்லை.

நந்தினி சில வினாடி நேரம் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினாள். அதற்குள் அவள் முகம் பழையபடி பார்ப்போரை மயக்கும் மோகன வசீகரத்துடன் விளங்கியது.

''மணிமேகலை! ஒருவனுடைய தலையை ஒரே வெட்டில் வெட்டி விடுவது பெரிய வீரம் என்று கருதுகிறாயா? அது பயங்கர அசுரத்தனம் அல்லவா?'' என்றாள்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை, அக்கா! பகைவனின் தலையை வெட்டுவது வீரம் இல்லையா? அது எப்படி அசுரத்தன



ஒருவன்: ''நீ பாஸானால் விநாயகருக்கு நூற்றியெட்டுத் தேங்காய் உடைக்கிறதா வேண்டியிருக்கேன்டா...!

மற்றவன்: நான் பாஸானால் நீ ஏண்டா தேங்காய் உடைக்கணும்...?

ஒருவன்: உன்னைப் பார்த்துத்தானே நான் எழுதியிருக்கேன்...!

— ஆர். சுப்பு.




தேர்தலில் போட்டியிடும் அரசியல்வாதியின் மகன்: அப்பா! எனக்குப் பதினெட்டு வயசு ஆயிடுச்சு! என் வோட்டை எதிர்க்கட்சிக்காரனுக்குப் போட்டு உங்களை ஒரு வோட்டு வித்தியாசத்தில் தோற்கடிக்க வெச்சுடுவேன்...! ஜாக்கிரதை!

— கே. வி. நாதன்.

''இந்த ஆபீஸில் எதுக்கெடுத்தாலும் லஞ்சம் கேட்கிறாங்க... புகார் எழுதி யார் கிட்டே கொடுக்கணும்...?''

''உங்க புகாரோடு ஒரு நூறு ரூபா நோட்டையும் வச்சு, அந்தப் பெட்டிக்குள்ளே போட்டுட்டுப் போங்க... அப்பத்தான் கவனிப்பாங்க...''

— கரடிகுளம் ஜெயா பாரதிப்பிரியா.



மாகும்?''

''இந்த மாதிரி யோசனை செய்து பார்! உனக்கு ரொம்ப வேண்டியவன் ஒருவனை அவனுடைய பகைவன் தலையை வெட்ட வருகிறான் என்று வைத்துக் கொள். உன் தமையனை எண்ணிக் கொள். அல்லது நீ மணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்கும் காதலன் ஒருவன் இருப்பதாக நினைத்துக் கொள். அவன் காயம் பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் போது, இன்னொருவன் — அவனுடைய பகைவன், — கத்தியை ஓங்கிக் கொண்டு தலையை வெட்ட வருகிறான் என்று எண்ணிக் கொள். அப்படி வெட்ட வருகிறவனுடைய வீரத்தை நீ மெச்சிப் பாராட்டுவாயா?'' என்று கேட்டாள் பழுவூர் ராணி.

மணிமேகலை சற்று யோசித்துவிட்டு, ''அக்கா! மிக விசித்திரமான கேள்வி நீங்கள் கேட்கிறீர்கள். ஆயினும் எனக்குத் தோன்றும் மறுமொழியை நான் சொல்லுகிறேன். அத்தகைய நிலைமை எனக்கு ஏற்பட்டால், நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். கொல்ல வருகிறவனுடைய கையிலிருந்து கத்தியைப் பிடுங்கி அவனை நான் குத்திக் கொன்று விடுவேன்!'' என்றாள்.

நந்தினி மணிமேகலையை ஆர்வத்துடன் கட்டித் தழுவிக் கொண்டாள். ''என் கண்ணே! நல்ல மறுமொழி சொன்னாய்! இவ்வளவு புத்திசாலியாகிய உனக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமே என்று எனக்குக் கவலையாயிருக்கிறது. ஆதித்த கரிகாலர்கூட உனக்குத் தக்க மணவாளர் ஆவாரா என்பது சந்தேகந்தான்'' என்றாள் நந்தினி.

''நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். கரிகாலருடைய குணாதிசயங்களைப் பற்றிக் கேட்ட பிறகு அவரை நினைத்தால் எனக்குச் சற்றுப் பயமாகவே இருக்கிறது. என்னுடைய அந்தரங்கத்தை, என் மனத்திலுள்ளதை, உள்ளபடி சொல்லட்டுமா, அக்கா?'' என்று கேட்டாள் மணிமேகலை.

(தொடரும்)

திரைக் கரையாத எண்ணங்கள்

ஜெயா சேகர்

அந்த நாடக அரங்கே அமைதியாயிருந்தது. நாடகத்தின் உச்ச கட்டம். செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, சிந்தனையைத் தூண்டும் வசனங்களை, ஒன்றிப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தாள் காவ்யா.

''காவ்யா! போரடிக்கலே? சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிண்டு ...! கிளம்பலாமா ...?''

மௌனமாய் இருந்த அரங்கில் தியாகுவின் குரல் இடி போல் கேட்பதாகத் தோன்றியது காவ்யாவுக்கு. மனோதத்துவ டாக்டர் ஒருவரின் வித்தியாசமான நாடகம் அது. அற்புதமான கட்டத்தில் 'போரடிக்கிறது' என்று சொல்லித் தன்னைத் தொந்தரவு செய்த தியாகுவின் மேல் எரிச்சலாய் வந்தது. இது முதல் தடவையல்லவே...!

''நீங்க வேணும்னா கார்லே இருங்கோ. நாடகம் முடிஞ்ச உடனே கிளம்பிடலாம்.'' எரிச்சலை அடக்கிக் கொண்டு நாடகத்தில் கவனத்தைச் செலுத்தினாள். தியாகு காருக்குப் போய் விட்டான்.

நாடகம் முடிந்து கூட்டம் கலையத் தொடங்கியது.

''ஹலோ காவ்யா!'' — தோளருகே குரல் கேட்டுத் திரும்பினாள். சுந்தர்!

''எவ்வளவு அற்புதமான நாடகம்! நீங்க 'மிஸ்' பண்ண மாட்டீங்கன்னு தெரியும்... இந்த மாதிரி படைப்புக்களைப் பார்க்கிறப்போ, நாமெல்லாம் சராசரியா, சாப்பாடு, வேலை, தூக்கம்னு ஏதோ வாழ்ந்துக்கிட்டு இருக்கோமேன்னு வேதனையா இருக்கு. மனசே கனத்துப் போயிடுத்து. வாங்களேன் பேசிக்கிட்டே போகலாம்...'' என்றான் சுந்தர்.

''இல்லை, சுந்தர்! என் கணவர் வெயிட் பண்ணிண்டிருக்கார். அப்புறம் சந்திக்கிறேன்.'' சுந்தருடன் பேசிக் கொண்டே நடக்க வேண்டும் என்று மனம் துடித்தாலும், விடைபெற்றுக் கொண்டு தியாகுவுடன் கிளம்பினாள்.

''என்ன பைத்தியக்கார நாடகம்! இதுக்குப் போய் இவ்வளவு கூட்டம் வேறே... நிம்மதியா 'ஒலியும் ஒளியும்' பார்த்துண்டு இருந்திருக்கலாம்...'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிய தியாகு, காவ்யாவின் கண்களைச் சந்தித்தான். ''சரி சாரி... கோவிச்சுக்காதே, எனக்கு இதெல்லாம் புரியலை...''

'உங்களுக்கு இதெல்லாம் எப்படிப் புரியும்? கார், பங்களா, ப்ரமோஷன் என்ற வாழ்க்கை வசதிகளைத் தவிர வேறெதிலும் ஆர்வமில்லாத உங்களுக்கு எப்படிப் புரியும்?' மனத்திற்குள் குமைந்து கொண்டிருந்தாள் காவ்யா.

''காவ்யா! சொல்ல மறந்துட்டேனே! நாளைக்குச் சாயங்காலம் எங்க கம்பெனி சேல்ஸ் மானேஜரையும் இன்னும் சில நண்பர்களையும் சாப்பாட்டுக்கு அழைச்சிருக்கேன். சாப்பாடு வேணும்னா ஹோட்டல்லேர்ந்து வரவழைச்சுடலாமா? எல்லாத்தையும் நீயே செஞ்சா டயர்டா ஆயிடுவே...''

''பரவாயில்லை. வேணி தான் கூட உதவிக்கு இருக்காளே, நானே பண்றேன்...''

'தியாகு எப்பொழுதும் இப்படித்தான். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விடுவான். என்னைப் போன்று ஏக்கங்கள் இல்லை...' — மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள் காவ்யா.

மறுநாள் மாலை சம்பிரதாய விசாரிப்புகளும், கேலியும் கிண்டலுமாக விருந்து ஆரம்பித்தது. பெண்கள் தங்கள் புடைவைகளைப் பற்றியும் நகைகள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். தான் வாங்கிய ஃப்ளாட், கார் என்று மற்றொரு கூட்டம் அலசிக் கொண்டிருந்தது. எதிலும் மனம் ஒட்டாமல் வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள் காவ்யா.

தன் மனைவியின் திறமையைப் பற்றி எல்லோரிடமும் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தான் தியாகு.

''காவ்யா! யூ ஆர் லக்கி! அன்பைப் பொழிகிற கணவன். வசதிகள் நிறைந்த வாழ்க்கை. வேறென்ன வேணும்?'' என்றாள் ஒருத்தி.

'நகையும், காரும், பங்களாவும்தான் சந்தோஷத்தின் அடையாளங்கள் என்று முத்திரை குத்தப்பட்டிருக்கின்றன. இவர்களது, இந்தஎண்ணத்தைமாற்றமுடியாது. இத்தனை சௌகரியங்களிருந்தும், இல்லாத ஒன்றிற்காக ஏங்கும் என் மனத்தை யாரால் புரிந்து கொள்ள முடியும்? தியாகு நல்லவன். என் மேல் உயிரையே வைத்திருப்பவன். இருந்தாலும் என் மனத்தின் வெறுமை...? ரசனையே வாழ்க்கையாகி, அழ்குகளையும், இலக்கியத்தையும், சங்கீதத்தையும், இயற்கையையும் அணு அணுவாக ரசித்து, மகிழ்ந்து, வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் பகிர்ந்து



கழிக்க வேண்டும் என்ற என் எண்ணத்திற்கும், எந்த ரசனையுமில்லாமல், வாழ்க்கைப் படிகளில் உயர வேண்டுமென்ற சிந்தனை மட்டுமே உள்ள தியாகுவிற்குமிடையே உள்ள இடைவெளியை, அது தரும் மன வேதனையை யாரிடம் சொல்வது?'

— காவ்யாவிடமிருந்து மெலிதாய் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

"காவ்யா! என்னடா டயர்டா இருக்கா? அதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். வெளியிலேர்ந்து வரவழைச்சுடலாம்னு. எல்லாத்தையும் இழுத்துப் போட்டுண்டே... நீ போய்ப் படுத்துக்கோ. நான் வீட்டை ஒழுங்குபடுத்திடறேன்." விருந்து முடிந்ததும் கனிவு ததும்பச் சொன்னான் தியாகு.

படுக்கையில் படுத்த காவ்யாவிற்கு உறக்கம் வரவில்லை. மறுநாள் நடக்கவிருக்கும் இலக்கியச் சொற்பொழிவிற்குச் சுந்தரும் வருவான். சுந்தர்...

சுந்தருக்கும் காவ்யாவைப் போலவே ஆர்வம். நிறையக் கவிதைகள் எழுதுவான். இலக்கியத்தைப் பற்றியும், சினிமா பற்றியும், அழகாக, சுவையாகப் பேசுவான். பட்டிமன்றங்களிலும், இலக்கியக் கூட்டங்களிலும் சுந்தரைச் சந்திக்கும் போது, காவ்யா தன் எண்ணங்களை, சிந்தனைகளை, ரசனையை, ஆர்வத்தை அவனுடன் பகிர்ந்து கொள்வாள். மூச்சு முட்டும் இந்த இயந்திர வாழ்க்கையின் திணறலில் அவனுடன் பேசும் சில மணி நேரங்கள் புதுக் காற்றைச் சுவாசிப்பது போலிருக்கும்.

சுந்தர்...! சுந்தரைப் போல் ஓர் ஒத்த துணை இருந்தால்... பாரதியையும், கம்பனையும் மணிக்கணக்கில் சேர்ந்து அலசலாம். பௌர்ணமி நிலவொளியில் சித்ரான்னங்களைப் பற்றிப் பேசும் தியாகுவைப் போலன்றி, இனிய சங்கீதத்தை, மௌனமாக, படுத்துக் கொண்டே ரசிக்கலாம். விடியலின் அழகை... புற்களிலும் மலர்களிலும் படிந்திருக்கும் பனித் துளிகளை, அவை சூரிய ஒளியில் வைரக்கற்களாய் ஜொலிக்கும் அழகை, மாலையின் மயக்கத்தை, இளந்தூறலை, வீடு திரும்பும் பறவைகளை, இருளின் அமைதியை... இப்படி அணு அணுவாக இரசிக்கலாம். நெஞ்சை அடைத்துக் கொண்டது காவ்யாவிற்கு. சுந்தரைப் பற்றிய தனது இந்த சிந்தனை, சரியா, தவறா என்ற ஆ ரா ய் ச் சி க ள் ஓய்ந்து, தனிமையில், ஒன்ற முடியாத சூழ்நிலையில், இந்த எண்ண ஓட்டங்களைத் தவிர்ப்பது அவளுக்கு இயலாததாகிவிட்டது.

எண்ணக் குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தாள். நாளை சுந்தரைப் பார்க்க வேண்டும். அவனுடன் மனம் விட்டுப் பேச வேண்டும்...

உறக்கம் தழுவிற்று.

மறுநாள் மாலை.

சுந்தரின் வீட்டிற்குச் சென்று அவனையழைத்துக் கொண்டு கூட்டத்திற்குப் போகலாம் என்ற எண்ணம் தோன்ற, அவன் வீட்டையடைந்தாள்.

அழைப்பு மணியை அழுத்தியதும், துரு துரு கண்களுடன் அழுக்கு முகத்துடன் பொருத்தமில்லாத கோணல் மாணலான ஓர் ஆடையுடன் ஒரு பையன் எட்டிப் பார்த்தான்.

சுந்தரின் மகனாகத்தான் இருக்க வேண்டும்.

நீட்டிய 'பிஸ்கட்' பொட்டலத்தை வாங்கிக் கொண்டு, 'அம்மா! ஆன்ட்டி!' என்றலறிக் கொண்டே சென்றான் அந்தப் பையன்.

"யாரு...? உள்ளார வாங்க..." — முனகலுடன் குரல் வெளிப்பட்டது. தலைவலி மருந்தின் நெடியும் வீடு இருந்த அலங்கோலமும் சுந்தரின் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று உணர்த்தின.

"என் பேர் காவ்யா" என்று சொல்லிக் கொண்டே கட்டிலருகிலமர்ந்தாள்.

அனலாய்க் கொதிக்கும் உடம்புடன், உதடுகள் வெடித்துப் போய், மிகவும் தளர்ந்து அயர்ச்சியுடன் காணப்பட்டாள் சுந்தரின் மனைவி.


"சுந்தர் இல்லையா...?"

"ஒங்களைப் பற்றி நெறையச் சொல்லியிருக்காரு. அவருக்கு ரொம்ப வேண்டியவங்க நீங்கன்னு புரிஞ்சுக்கிட்டேன்... அதனால் உங்ககிட்டே மனசு விட்டுச் சொல்லலாம்... எனக்கு ஒரு வாரமா காய்ச்சலுங்க. உடம்பெல்லாம் நோவுது. அவரு பாட்டுக்குத் தினமும் மீட்டிங், பேச்சு, நாடகம்னு கிளம்பிப் போயிடறாரு... எந்திரிக்கவே முடியலீங்க. இந்தப் புள்ளைகளை வெச்சுக்கிட்டு எவ்வளவு கஷ்டமா இருக்குது தெரியுமா...? ஹோட்டல்லேர்ந்து வாங்கிக்கன்னு சொல்லிட்டுப் போயிடறாரு... அவரு காரியம் தாங்க அவருக்கு முக்கியம். உடம்பு முடியாதப்ப... பக்கத்துல இருந்து அன்பா, அனுசரணையா இல்லாம... என்னங்க 'மீட்டிங்' வேண்டியிருக்குது? தெரியாமத்தான் கேக்குறேன்...? இப்படி கரிசனம் இல்லாதவங்க, எந்த இலக்கியத்தை உயர்த்தப் போறாங்க? மனுசங்களைப் பத்தி அக்கறை இல்லாதப்போ, இந்த ஆர்வம் என்னாத்துக்குப் பிரயோஜனம்...?"

கண்களில் நீர் வழியப் பேசினாள் சுந்தரின் மனைவி.

'பளாரெ'ன்று தன் கன்னத்திலறைந்தது போல் உணர்ந்தாள் காவ்யா. இலக்கிய ஆர்வமும், இரசனைகளும், அழகுணர்ச்சியும்தான் வாழ்க்கையின் உன்னதங்கள் என்று தான் ஏங்கியதை நினைத்து வெட்கினாள். சுந்தரின் மனைவியின் நிலையில் நானிருந்தால்... நினைக்கவே அச்சமாயிருக்கிறது... அன்பும் அக்கறையுமாகத் தன்னைச் சுற்றி வரும் தியாகுவிடம் தான் காணத் தவறிய வண்ணங்களைச் சுட்டிக் காட்டிய சுந்தரின் மனைவிக்கு மானசீகமாக நன்றி கூறிவிட்டு, ஒரு 'தெளிவுடன்' வீட்டுக்குக் கிளம்பினாள்.

ஜலதோஷத்தாலே தலைவலியா?



விக்ஸ் வேபோரப் ப்ளஸ்.



ஜலதோஷத்தாலே தலைவலி ஏற்பட்டா, தலைவலியை மட்டும் போக்குற பாம்னாலே காரியம் நடக்காது.

உங்கள் ஜலதோஷத்துடன் கூடவே, தலைவலி கஷ்டமும் வருகிறது என்பதை உங்கள் நம்பகமான விக்ஸ் அறியும். அதற்கு விக்ஸ் விசேஷமாக உங்களுக்காக தயாரித்துள்ளது ஒரு அதிக ஆற்றல் மிக்க ஃபார்முலா : புதிய விக்ஸ் வேபோரப் ப்ளஸ்

இதில் தலைவலி மருந்தோடு கூடவே விக்ஸ் வேபோரப்பின் ஜலதோஷ மருந்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இது, தலைவலி பாம்களில் கிடையாது. ஆகவே இது, தலைவலிக்கு மூலகாரணமான ஜலதோஷத்தையும் போக்கு கிறது. தலைவலி மற்றும் ஜலதோஷம் இரண்டிலிருந் உங்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கிறது.

தலைவலி மற்றும் ஜலதோஷம் - இரண்டிலிருந்தும் நிவாரணம்.

23

நீரில் மிதக்கும் நிலா

பிருத்விராஜ் இருட்டை வெறித்தான். நெஞ்சின் மையத்தில் பூதாகாரமாய் யாரோ ஏறி உட்கார்ந்திருந்த மாதிரி ஒரு பாரம். இருட்டின் கருமையில் புனிதா மஞ்சளாக வியாபித்திருந்தது போல் இருந்தது.

'கங்கிராட்ஸ்!'

எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாள்? அந்த வார்த்தையைச் சொல்லும் போது அவளுடைய கைகள் நாற்காலியின் கைப்பிடிகளை இறுக்கியது போல் தோன்றியது. அவ்வளவுதான். முகத்தில் தீக்குச்சி மருந்தளவு வருத்தமோ, ஏமாற்றமோ இருந்திருக்க வேண்டுமே — ஊஹூம். ஹாட்ஸ் ஆஃப் டு யூ புனிதா!

ஸ்ரீநாத்தான் அதிகமாய்ப் பாதிக்கப் பட்டவன் போல் தெரிந்தான். சிகரெட் முடியுமுன்பே அவசரமாக அடுத்ததை அவன் பற்ற வைத்த போது விரல்களில் தெரிந்த மெல்லிய நடுக்கம்; அவனுடைய தொண்டை ஆப்பிள் அழுத்தமாக ஏறி இறங்கிய அவசரம் — 'ஸ்ரீநாத், ஸாரி பிரதர் வெரி ஸாரி!'

இந்த ஸாரியை இன்னும் கொஞ்சம் நெருக்கமாக அவனிடம் சொல்லியிருக்க வேண்டுமோ!

நினைப்பு வந்ததும் பிருத்விராஜ் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து விட்டான். உடம்புக்குள் பல வண்டுகள் புகுந்து குடைந்தன. விளக்கைப் போட்டான். எலக்ட்ரான்கள் போல் தலைக்கு மேல் கொசுக்கள். ஜன்னல் வழியே மெல்லிய புகை உள்ளே ஊடுருவியதும் திடுக்கிட்டுப் பார்த்தான்.

ஜன்னலுக்கு வெளியே காரிடாரில் ஸ்ரீநாத். பிருத்விராஜ் கதவைச் சடாரென்று திறந்தான்.

''தூங்கலியா ஸ்ரீநாத்?'' குரல் தடுமாறி வந்தது.

''யோசிச்சிட்டிருந்தேன் பிருத்வி.''

''புனிதாவையா?'' பிருத்விராஜ் குற்ற உணர்வுடன் கேட்டான்.

''சேச்சே. மதுமதியை யோசிச்சிட்டிருந்தேன்.'' ஸ்ரீநாத் உள்ளே நுழைந்து கட்டிலில் உட்கார்ந்தான். ''தங்கை மீராவுக்குச் சந்துருவைக் கல்யாணம் பண்ணி வச்சிட்டு, தன்னோட பழைய வாழ்க்கையை விட்டுப் போன இடத்துலேர்ந்து மறுபடியும் வாழறதுக்காக மதுமதி பெங்களூர் போறான்னு முடிச்சா நல்லாவா இருக்கு பிருத்வி...?'' ஸ்ரீநாத் ஒற்றை விரலால் கண்ணாடியை மேலேற்றிக் கொண்டான்.

''ஏன் ஸ்ரீநாத், மதுமதி காரெக்டர் ஒரு நாக்கு தூக்கலை?''

''சினிமால க்ளைமாக்ஸ்னு ஒரு சமாசாரம் இருக்கு பிருத்வி. ராமாயணம், மகாபாரதத்துக்குக் கூட ஒரு ஸ்ட்ராங்கான க்ளைமாக்ஸ் இருக்கறதைக் கவனிச்சிருக்கியா? மதுமதி பெங்களூர்ல இருக்கற துவாரகா மாளிகைக்குப் போய்ட்ட...

சுபா



சிவாவோட போட்டோவையெல்லாம் பாத்துக்கிட்டு, ரோஜாப் பூவைத் தலைல வச்சிக்கிட்டு வாழ்ந்தான்னு நீ எழுதுனா அதில கவிதை இருக்கலாம். ஆனா சினிமால கடைசி ஸீன் அப்படி இருந்தா 'சப்'னு இருக்கும்.

''தொந்தரவு இல்லேன்னா நானும் உள்ளே வரலாமா?''

''புனிதா... தூங்கலை நீ? வா... வா! நீ புதுசா ஏதாவது ஒரு குண்டு போடுவே.'' ஶ்ரீநாத் சிகரெட்டை உதடுகளில் பொருத்திக் கொண்டு புனிதாவை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்தான். ''மதுமதி கதைக்கு ஒரு டிரமாடிக் எண்ட் இருந்தா நல்லா இருக்கும்னு சொல்லிட்டிருந்தேன்.''

''கரெக்ட், நான் கூட சொல்லணும்னு நெனைச்சேன். மதுமதி வாழ்க்கையில் தன்னோட கடமைங்களையெல்லாம் முடிச்சிட்டா. இனிமே அவளைச் சிவாகிட்டேர்ந்து ஏன் பிரிச்சு வக்கணும் பிருத்வி?'' புனிதா இமைகளை வேகமாகப் படபடத்துச் சொன்னாள். ''துவாரகா மாளிகைக்குப் போய்ச் சேர்றதுக்கு முன்னாடியே நிறைய தூக்க மாத்திரையைச் சாப்டுட்டு அவ போறா... போய், சிவாவோட ஃபோட்டோவைப் பாத்துக்கிட்டே பொட்டுன்னு உயிரை விட்டுடறா... டச்சிங்கா இருக்காது?''

''சிச்சிச்சி... ரொம்ப சிப்பா இருக்கு.



புனிதா.'' பிருத்விராஜ் அவனை மறுத்தான். ''தற்கொலைங்கறதைக் கீழ்த்தரமா நெனைக்கறவன் நான். என் மது ஒரு நாளும் அந்த முடிவுக்குப் போக மாட்டா. செத்துப் போயிடணுங்கற சபலம் எல்லாருக்கும் இருக்கும்தான். எனக்கில்லையா. உனக்கில்லையா? ஆனா அது முடிவில்ல. மது அந்த முடிவை எடுக்கவே மாட்டா. உயிரோட இருந்து எவ்வளவு சாதிக்க முடியும்! அதை விட்டுட்டுச் செத்துப் போறதால யாருக்கு உபயோகம்... நோ... நோ... நோ....''

''அப்ப யோசி பிருத்வி. 'லாலி'டா ஒரு ஸப்ஜக்டை டீல் பண்ணிட்டு, சப்புன்னு க்ளைமாக்ஸ் வச்சிராதே. சினிமாங்கறது வேற மீடியம். அங்க யதார்த்தத்தை விட டிராமாடிக்கான முடிவுக்குத்தான் என்னிக்குமே மரியாதை. அவசரம் இல்ல. நிதானமா யோசி. நாளைக்கு வேணும்னாலும் இதைப் பத்திப் பேசலாம்.'' ஸ்ரீநாத் எழுந்தான்.

''குட்–நைட் பிருத்வி!'' புனிதாவின் குரலில் எங்கோ பிசிறு தட்டியது.

காலிங்பெல் ஒலித்தது.

ராணி ஓர் எதிர்பார்ப்புடன், ஒரு கவலையுடன், ஒரு கோபத்துடன் கதவைப் பட்டென்று திறந்தாள்.

''குட் நைட் அஸ்வின்'' என்று காருக்குள் திரும்பி, கையசைத்து விட்டுத் திலகா படியேறினாள். ராணியைத் தாண்டும் போது உதட்டைச் சுழித்து விட்டு நகர்ந்தாள்.

''எங்கேடி போய்ட்டு வரே?''

''புரொட்யூசர் வீட்டுக்கு. புதுப்படம் ஒண்ணுல நடிக்கறதுக்கு அஸ்வின் எனக்காகச் சிபாரிசு பண்ணினார். இதெல்லாம் உனக்குப் புரியாது ராணிக்கா. நீ சமையலைப் பாத்துக்க. நானும் ஷில்பாவும் மத்ததைப் பாத்துக்கறோம்.''

ராணியின் பார்வை முதுகைத் துளைப்பதைப் பற்றிச் சற்றும் லட்சியம் செய்யாமல் திலகா நடந்தாள்.

''பாப்பா...!'' ஜூபிடர் ரத்தினம், திலகாவைப் பலவீனமான குரலில் அழைத்தார். ''டாக்டரை...''

''பாத்தாச்சுப்பா. எல்லாம் க்ளீன் பண்ணிட்டாரு. சுத்தமாய்ட்டேன். போறுமா?'' திலகா வேகமாகப் படியேறினாள்.

ஃபோன் ஒலித்தது.

ஜூபிடர் ரத்தினம் ராணியின் பார்வையைத் தவிர்த்து ஃபோனை நெருங்கி ரிசீவரை எடுத்தார். ''ஹலோ'' என்றார்.



''திலகாவா... நீங்க யாருங்க...? சந்திரனா...? ஒரு நிமிஷம்! பாப்பா....''

திலகா கீழே இறங்கி வந்து ரிசீவரைப் பெற்றுக் கொண்டாள்.

''ஹலோ.... திலகா... கங்கிராட்ஸ்... நீ ஸ்க்ரீன்ல வரப் போறதா பேப்பர்ல விளம்பரம் வந்திருக்கு... எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா... நாம ரெண்டு பேரும் இந்த அக்கேஷனைக் கொண்டாடியே ஆகணும் திலகா.''

''ஸாரி.. ராங் நம்பர்!'' என்று ரிசீவரைப் பட்டென்று அறைந்தாள் திலகா.

புனிதா தலையணைக்கு அடியில் இருந்து அந்த பாட்டிலை எடுத்தாள். திறந்தாள். உள்ளங் கையில் கவிழ்த்தாள்.

உருட்டை உருட்டையாக இருபது மாத்திரைகள்.

'பிருத்வி' என்றாள் மெல்லிய குரலில் காலியான பாட்டிலைப் பார்த்து. எதிரில் பிரித்து வைத்திருந்த டைரியில் எழுதியிருந்ததை ஒருமுறை படித்தாள்.

'அலையோர மணலில் எழுதிய எழுத்தை அலை வந்து அழிக்கிறாற் போல, ஆரம்பித்த போதே முடிந்து விட்டது என் வாழ்க்கை என்று நினைத்திருந்தேன். ஸ்ரீநாத் உங்களைக் கூட்டி வந்தான். மறுபடி சபலம். இந்த முறை மணலில் பிருத்விராஜ் என்று எழுதி வைத்தேன். மறுபடியும் அலை வந்து அதை அழித்து விட்டுப் போய் விட்டது. வாழ்க்கையில் இனி எனக்கு எதுவுமே மிச்சமில்லை என்றுதான் நான் இந்த பாட்டிலை எடுத்து வைத்தேன். ஆனால் பிருத்வி, நீங்கள் சொன்னீர்களே... 'உயிரோடு இருந்து எவ்வளவு சாதிக்க முடியும். அதை விட்டு விட்டுச் செத்துப் போவதால் யாருக்கு உபயோகம். என் மதுமதி ஒரு நாளும் அந்த முடிவுக்குப் போக மாட்டாள்' என்று. அந்த வார்த்தைகள் என்னை அறைந்து விட்டன பிருத்வி. நானும் உங்கள் மதுமதி என்று நினைத்துக் கொள்கிறேனே. உங்களிடமிருந்து தள்ளியிருந்தாலும், உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேன் இல்லையா? நீங்கள் என்னுடைய நிலா. நீரில் மிதக்கும் நிலா. உங்களைப் பார்க்கும் சந்தோஷமே எனக்குப் போதும்.'

புனிதா டைரியை மூடினாள். யாரும் பார்க்கக் கூடாது என்ற எண்ணத்துடன் அதை ஒரு பழைய பெட்டியின் அடியில் போட்டுப் புதைத்தாள். பாட்டிலை ஜன்னலுக்கு வெளியே தெரிந்த தோட்டத்தில் வீசினாள். மாத்திரைகளை பாத்ரூம் ஸிங்க்கில்-ஒவ்வொன்றாக 'ப்ளக்' 'ப்ளக்' என நழுவ விட்டாள்.

திடீரென்று ''ஸ்ரீநாத், ஸ்ரீநாத்'' என்று பிருத்விராஜின் குரல் அதிரடித்துக் கொண்டு வந்தது. புனிதா கடைசி மாத்திரையை அவசரமாக நழுவ விட்டு பொத்ரூம் கதவைத் திறந்து வெளியே வந்தாள். அதே நேரம் ஸ்ரீநாத் தன்னுடைய அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்க்க பிருத்விராஜ் ஒரே

பாய்ச்சலில் அவனை அடைந்தான். ''ஸ்ரீநாத், ஸ்ரீநாத்'' என்று மூச்சிரைத்தான். ''க்ளைமாக்ஸ் இப்படி இருக்கலாமா ஸ்ரீநாத்?'' பிருத்விராஜின் குரலில் ஆர்வம். பரபரப்பு.

''எப்படி?'' என்றான் ஸ்ரீநாத். இமைகளைத் தேய்த்துத் தூக்கத்தை விரட்டி.

''மதுமதி பெங்களூர் போறா இல்ல... அங்கே...'' என்று ஆரம்பித்தான் பிருத்விராஜ்.

கார் துவாரகா மாளிகையின் கேட்டருகே நின்றது. அதே பிரும்மாண்டமான தோற்றம். அரை வட்டமாய் சிமெண்ட் பாதை. நெடு நெடு அசோக மரங்கள்.

''ஒரேயடியா வந்துட்டேன்னு சொன்னியே மது, நீ எங்களோடயே இருந்துகிட்டு அப்பப்ப இந்த துவாரகா மாளிகைக்கு வந்துட்டுப் போயேன்.'' நடராஜன் மகளுடன் பேசும் அதே ஆதுரக் குரலில் சொன்னார். ஜகதா மதுமதியின் முகத்தைப் பார்த்தாள். விஜி இருந்தாற் போலிருந்து அவளை முத்தமிட்டாள். ''எங்களோடயே இருந்துடு மது'' என்று கெஞ்சும் குரலில் சொன்னாள்.

''நான் வந்ததே துவாரகா மாளிகைல என்னோட மிச்ச நாள் எல்லாம் கழியணுங்கறதுக்காகத்தான் மாமா. கொஞ்ச நாளாவது இங்க இருந்து பாக்கறேனே...''

''அதான் உன் முடிவா?'' நடராஜன் தான் கேட்டார். மிருதுவாக.

''ம்.''

''அப்ப சரி. துவாரகா மாளிகையில உன்னைத் தனியா விட்டுட மாட்டோம். உனக்குத் துணை இருக்கும்.''

''யாரு மாமா. அத்தை எங்கூட இருக்கப் போறாங்களா?''

''உள்ள போனா தெரிஞ்சிடப் போவுது. போலாமா?''

''ம்.''

டிக்கியைத் திறந்து அவளின் பெட்டிகளை எடுத்துக் கொண்டு வேலையாள் ஒருவன் உள்ளே போனான். என்ன காரணம் என்று தெரியாமலேயே மதுமதியின் கால்கள் சற்று நடுங்கின. வெடவெடத்தன. பின்னிக் கொண்டன. விஜி அவளை அணைத்த மாதிரி ''வா அண்ணி'' என்று புன்னகை புரிந்து நடத்தினாள். மாளிகைக்குள் நுழைந்தவுடன் முன்னறையின் ஊதுவத்தி மணம் நாசியில் நுழைந்தது. ஒரு புனித சந்நிதியில் நுழையும் பதற்றத்தைக் கொடுத்தது.

''மது, மாடிலதான் உனக்கு ரூம் ரெடி பண்ணியிருக்கு. சௌகரியமெல்லாம் போதுமான்னு போய்ப் பார்த்துட்டு வந்திடறியா?''

''நீங்க?''

''நாங்க இங்கயே கொஞ்ச நேரம் உக்காந்து இருக்கோம். இது உன் வீடு மது. உனக்குப் பழகணும். சங்கோஜப்படாமப் போய் வா.''

படிகள் முடியும் இடத்தில் அந்தச் சின்ன வாசலின் ஒற்றைக் கதவு திறந்திருந்தது. உள்ளே சற்றே இருள். மதுமதி அறையில் நுழைந்ததும் பளீர் என வெளிச்சம் விழித்தது. நேர் எதிரே ஆளுயரக் கண்ணாடி. மதுமதியின் பார்வை அதன் மீது நிலை குத்தியது. நெஞ்சில் சட்டென்று உதறியது. என்ன இது? என்ன இது? மதுமதி தள்ளாடினாள். விழாமல் இருப்பதற்காகக் கட்டில் முகப்பைப் பிடித்தாள். மறுபடி அந்தக் கண்ணாடியைப் பார்த்தாள்.

''வா... மது!'' என்றான் சிவா கண்ணாடிக்குள்ளிருந்து.

ஒரு திடுக்கிடலோடு பார்த்தாள். பரபரப்பாய்த் திரும்பினாள்.

''சிவா...'' என்று உதடு துடித்தது. நிஜம்மாகவா? நிஜம்மாகவா? நிஜம்மாகவா?

சிவா — அவளுடைய சிவா — சுவரில் சற்றே தோளைச் சாய்த்து நின்றிருந்தான்.

''உன்னோட சிவாதான் மது. இன்னும் உயிரோடதான் இருக்கேன். உனக்காகக் காத்திருக்கேன்.''

மதுமதி பாய்ந்து சென்று அவன் தோளில் முகம் புதைத்தாள். விம்மினாள். விம்மினாள். விம்மினாள்.

''சிவா... அம்மா, அப்பா, விஜி எல்லாம்...'' என்று அழுகையினூடே கீழே ஹால் பக்கம் கை நீட்டினாள் மதுமதி.

''நான்தான் அந்த மாதிரி சொல்லச் சொன்னேன்.''


''ஏன் சிவா.... ஏன் சிவா?''

''சொல்றேன் மது'' என்றான். அவளை அணைத்தவாறே கட்டிலை நோக்கி நடந்தான். நடந்த போது வலது காலைத் தேய்த்துத் தேய்த்து இழுத்தான். கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். மதுமதியின் கன்னங்களில் உருண்ட கண்ணீரை ஒற்றை விரலால் சுண்டினான்.

''ஆக்ஸிடென்ட்ல என் உயிர் போயிருந்தாக்கூட கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனா மேலேருந்து விழுந்ததில படக்கூடாத எடத்தில பட்டுருச்சு மது. ஆபரேஷன் பண்ணி உயிரைக் காப்பாத்தின டாக்டர் கூடவே, 'இனிமே இன்னொரு உயிரைப் படைக்கிற சக்தியை நீ இழந்துட்டடா'ன்னு சொன்னாரு. அப்புறம் எப்படி மது உன் மூஞ்சில நான் முழிப்பேன்?''

''அதுக்காக... அதுக்காக... என்னை ரொம்ப மட்டமா நெனைச்சிட்டீங்களே சிவா.''

''இல்ல மது. எனக்கு மனசு கேக்கலை. உபயோகமில்லாத ஒருத்தனோட உன்



''தலைவரா இருக்கிறதுல ஒரு வசதி!''

''என்னது?''

''பாதுகாப்பான தொகுதியில நிற்கலாம் பாருங்க!''

— கடுவை கோபால்சாமி.

னோட வாழ்நாளை நீ வீணாக்கிக்கிட்டிருக்கக் கூடாதுன்னுதான் நான் செத்துப் போயிட்டதாச் சொல்லச் சொன்னேன். நான் அப்படி சொல்லலைன்னா நீ வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க யோசனை செய்வேன்னு தோணிச்சு. என்னை லவ் பண்ண பாவத்துக்காக உன் லைஃபை நீ ஸ்பாயில் பண்ணிக்கப் போறியோன்னு பயந்துதான் நான் செத்துப் போனேன்... ஆனா நீ எல்லாத்தையும் உதறிட்டு ஒரேயடியா, 'சிவா', 'சிவா'ன்னு இந்த செங்கல்லும், சுண்ணாம்புமே பெரிசுன்னு நெனைச்சு துவாரகாவுக்குக் கௌம்பி வந்தாலத்தான் நான் உன் கண்ல பட்டேன் எனக்கு நீ. உனக்கு நான்.''

அவள் தலையை ஆதரவாய்த் தன் தோளில் சாய்த்துக் கொண்டு வருடினான் சிவா.

அவனை இறுகக் கட்டிப் பிடித்தாள் மது. சிவா மெல்ல குனிந்து அவள் இதழ்களைத் தேடிக் கவ்விப் பிடித்தான்.

ஷில்பாவின் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின. நெற்றியில் சில துக்கக் கோடுகள் விழுந்தன. வார்த்தைகள் அழுகையோடு கலந்து திமிறிக் கொண்டு வந்தன.

காமிரா அவளுடைய க்ளோஸப் முகத்திலிருந்து மெல்ல ட்ராலியில் பின்வாங்கியது.

''கட்'' என்றான் பிருத்விராஜ். யூனிட்டில் இருந்த அத்தனை பேரும் படபடவெனக் கையைத் தட்டினார்கள். ஜுபிடர் ரத்தினம் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''ஷில்பா'' அஸ்வின் குமார் செட்டில் போடப்பட்டிருந்த கட்டிலில் இருந்து எழுந்து ஷில்பாவை நெருங்கி அப்படியே அவளை அணைத்துக் கொண்டான். ''கொன்னுட்டே ஷில்பா... உன் எக்ஸ்பிரஷனைப் பாத்து ஆடிப் போய்ட்டேன். இந்தியாவையே கலக்கப் போறே நீ... க்ரேட்... க்ரேட்...'' அவனுடைய பாராட்டில் உண்மையான தொனி இருந்தது. ஸ்டில் காமிரா அவசர ஃப்ளாஷ்களை மின்னியது.

ஷில்பா இளிசரின் கண்ணீரை மறந்து, புன்னகை செய்தாள். சுற்றி இருந்தவர்களைப் பார்த்த போது, பார்வையில் ஒரு பெருமிதம் இருந்தது. பிருத்விராஜை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

'அட்டகாசம்' என்பது போல விரல்களைக் கோத்து அவன் அபிநயம் காட்டினான்.

அஸ்வின் குமார் பிருத்விராஜைப் பார்த்தான். ''இங்க வாய்யா!'' என்றான்.

''கையைக் குடுப்பா. என் காரெக்டர் டம்மியா இருக்குதேன்னு நெனைச்சிட்டிருந்தேன். கடைசில ஒரு ஜெர்க் கொடுத்தே பார். 'நம்மால இனி சந்தோஷத்தைக் கொடுக்க முடியாது. நம்ம லவர் வேற ஒருத்தனைக் கட்டிக்கிட்டு சந்தோஷமாயிருக்கணும்'னு செத்துப் போய்ட்டதாவே சொல்லிட்டான்னு — அமர்க்களம்யா. என் காரெக்டர் தூக்கிட்டுப் போயிருச்சு...''

''தாங்க்ஸ்'' பிருத்விராஜ் சற்றே வெட்கத்துடன் கையை மெல்ல விடுவித்துக் கொண்டான்.

''போய் யாராவது இளங்குமரனைத் தூக்கிட்டு வாங்கய்யா.'' என்று குரல் கொடுத்தான் அஸ்வின் குமார்.

''ஷில்பாக்கா''

ஷில்பா மெத்தையிலிருந்து தலையை நிமிர்த்திப் பார்த்தாள். இலகா!

''நான் உன் கூட கொஞ்ச நேரம் பேசலாமாக்கா?''

''ம்'' ஷில்பா நகர்ந்து படுக்கையில் இலகாவிற்கும் இடம் கொடுத்தாள்.

''நீரில் மிதக்கும் நிலா முடிஞ்சவுடனே சினிமாலேர்ந்து விலகிடப் போறேன்னு சொன்னியாமேக்கா. அப்பா சொன்னாரு. தேடிட்டு வந்த புரொட்யூசரைக் கூடத் திருப்பி அனுப்பிட்டியாம்!''

''ஆமா இலகா... என்னோட நேச்சருக்கு அந்த ஃபீல்டு ஒத்து வரும்னு தோணலை. அஸ்வின் குமார்தான் உன்னையும் சினிமா லைன்ல இழுத்து விட்டிருக்காரே. அப்புறம் நான் வேற எதுக்கு?''

''ஐயோ அக்கா!'' இலகா தலையணையைக் குத்தினாள். ''ஊர்ல எத்தனை பேர், காமிராக்கு முன்னால நிக்கற சான்ஸ் கெடைக்காதான்னு ஏங்கிக்கிட்டிருக்காங்க தெரியுமா? ஃபர்ஸ்ட் படமே உன்னைத் தூக்கிட்டுப் போயிரும் பாரு.. எந்தத் தொழில்லக்கா ராத்திரியோட ராத்திரியா லட்சக் கணக்குல ரேட் ஏறுது? வந்த புரொட்யூசர் ரெண்டு லட்சம் தரேன்னிருக்காரு. பணத்தை விடு... ஷில்பா, ஷில்பான்னு எத்தனை பேர் உனக்காக ஏங்கப் போறாங்க! கட்சிங்கள்லாம் கூட யார் சைடு உன்னை இழுத்துக்கலாம்னு போட்டி போடப் போறாங்க.''

''போ இலகா'' என்று ஷில்பா ஆத்திரப் படவில்லை — வெட்கப்பட்டாள்.

(அடுத்த இதழில் முடியும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542 – இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 250/- அல்லது 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- அல்லது 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D – 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் – 612 001.

****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****



நியுபான்
தாயின் அரவணைப்புக்கு ஈடான
சிறந்த ஜீரண டானிக்
கடுக்காய்
அதிமதுரம்
சிற்றரத்தை
ஓமம்
ஏலக்காய்
திப்பிலி
வசம்பு
சிறந்த மூலிகைகளைக் கொண்டு குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட ஜீரண டானிக். பாதுகாப்பானது.
nubon
குழந்தை பசியின்மை, வயிற்று வலி, விக்கல், வயிற்றுப் பொருமல், எதுக்களித்தல், மலபந்தம், பேதி முதலியவைகளால் பாதிக்கப்படலாம். இதனால் தேவையற்ற அழுகை, அமைதியற்ற தன்மை, தூக்கமின்மை ஆகியவையும் மற்றும் ஜலதோஷம், இருமல் ஆகியவையும் ஏற்படக்கூடும். அனுபவமிக்க தாய்மார்கள் பன்னெடுங்காலமாகத் தங்கள் குழந்தைகளின் ஜீரண சக்தியை வலுப்படுத்தவும், உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் உபயோகித்து நல்ல பலன் கண்ட சிறந்த மூலிகைகளான ஓமம், வசம்பு, சிற்றரத்தை, அதிமதுரம், திப்பிலி, கடுக்காய், ஏலக்காய் ஆகியவைகள் தேவையான அளவு நியுபானில் சேர்க்கப்பட்டுள்ளன. குழந்தை முழுமையான ஆரோக்கியத்துடனும், புஷ்டியாகவும் வளர விரும்பிச் சாப்பிடக்கூடிய ஜீரண டானிக்கான நியுபான் அவசியம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது.தொடர்ந்து கொடுத்து நல்ல பலன் காணவும்.
ஆல்கஹால், போதைப் பொருட்கள், சோடியம்- பை-கார்பனேட் கலப்பு இல்லாதது.
PHARM PRODUCTS
'விஜய்', மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 007, தமிழ்நாடு.
தொலைபேசி எண் : 22025/22225 டெலக்ஸ் : 0468-205 PPPL IN
மருந்துக் கடைகளிலும், ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

SOBHAGYA




படித்தவர்கள் பதவிக்கு வந்தால் போதுமா?

—டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

படித்தவர்கள் பதவிக்கு வந்தால் நாடு நலம்பெறும் என்று எண்ணினோம். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். "என்னையும் ராகவானந்தத்தையும் தவிர எல்லாரும் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள்" என்று தமது அமைச்சரவை பற்றிப் பெருமிதத்துடன் ஒரு சமயம் குறிப்பிட்டார். ஆனால் இப்போது நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம், படிப்பு மட்டும் போதாது என்று. படிப்பு பண்பாடுகளை உருவாக்குவதில்லை. உதாரணம்: நமது சட்ட சபையின் மதிப்புக்குரிய பிரதிநிதிகள். பெரும்பாலோர் படித்தவர்களே. சட்டசபையில் நடந்த அமளியில் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது நமக்குத் தெரியும். படித்தவர்கள் என்று எம்.ஜி.ஆரால் பெருமிதத்துடன் குறிப்பிடப்பட்ட அமைச்சர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்; நடந்து கொள்கிறார்கள் என்றும் கண்ணுக்கு மெய்யாகப் பார்க்கிறோம்.

நம்முடைய படிப்பு பண்பாடுகளை, நல்லொழுக்கங்களை வளர்ப்பதில்லை. அதனால் தார்மீக தைரியத்தையும் உருவாக்குவதில்லை. பல படித்தவர்கள் கோழைகளாயிருக்கிறார்கள். மகாத்மா காந்திக்கு மன உறுதியும் தைரியமும் இயல்பிலேயே இருந்தது. இல்லாததை வளர்த்துக் கொண்டார்; தம்மைத் திருத்திக் கொண்டார்; அதன் மூலம் தம்மை உயர்த்திக் கொண்டார். தன்னைத் தானே திருத்திக் கொண்டு உயர்வதற்குக் கல்வி உதவ வேண்டும். தைரியம் ஜீவனின் அடிப்படை இயல்பாக இருக்க வேண்டும். கல்வி அதற்கு முக்கியத்துவம் கொடுத்து — நம்மிடையே அதை வளர்க்கவில்லை என்றால் வாழ்வின் முக்கியத்துவத்தை நாம் உணரவில்லை என்றுதான் அர்த்தம்.

படித்தவர்கள் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றாதவர்களாக, நல்லொழுக்கம் இல்லாதவர்களாக இருந்தார்களானால் நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. ஏனெனில் படித்தவர் — விஷயம் தெரிந்தவர் — நியாயமாய் நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் ஏமாற்றமே ஏற்படுகிறது. இதற்குக் காரணம் நமது கல்வி, நல்லொழுக்கங்களை, சிறந்த பண்பாடுகளை வளர்ப்பதில்லை. அது அறிவை மட்டுமே திணிக்கிறது. வாழ்க்கை நெறிகளுடன் வாழ வேண்டும் என்பது இன்று குடும்பப் பண்பாக வளர்க்கப்படுவதாக உள்ளது. கல்வி அதற்குத் துணை நின்று உதவுவதில்லை.



ஆசிரியர்: ஒரு கிலோவுக்கு, எத்தனை கிராம்...?

மாணவன்: ரேஷன் கடையில் தொள்ளா யிரம் கிராம் சார்...!

— இராம. செந்தில்குமார்.

கல்வி மற்ற எல்லா நாடுகளிலும் சில நல்ல மரபுகளை, நற்குணங்களை, பழக்க வழக்கங்களை, சுகாதார வாழ்க்கை முறை களைக் கற்றுக் கொடுக்கிறது. இதன் மூலம் குடும்பம் திருந்துகிறது. இதன் விளைவாகச் சமுதாய முழுவதிலும் ஒரே, ஒத்த மரபுகள் கொண்ட உயர் மனிதர்கள் உருவாகிறார் கள்.

''தெருவில் குப்பையைப் போடக் கூடாது'' என்று பள்ளியில் போதிக்கப் பட்ட ஒரு சிறு பெண், சாக்லேட்டைத் தின்று விட்டு அதன் தாளை ஒரு பொது இடத்தில் ஒரு வெளிநாட்டுக்காரர் தூக்கி எறிந்த போது அவரை ஒரு முறைப்பு முறைத்து விட்டு அந்தக் குப்பையை எடுத்து அதற்காக வைக்கப்பட்ட குப்பைத் தொட்டி யில் போட்டாள். மாறுபட்டு நடப்பவரை எப்படி ஒரு சிறு பெண் கண்ணியத்துடன் கண்டிக்கிறாள் என்பதைக் கவனியுங்கள். அந்தப் பெண்ணுக்குக் கல்வி, நாகரிகத்தை யும் பண்பாட்டையும் போதித்திருக்கிறது; அதே சமயம் தார்மீக தைரியத்தையும் வளர்த்திருக்கிறது என்பதை இந்தச் சிறு நிகழ்ச்சியில் காண்கிறோம். அது மட்டு மல்ல, அறிவு, போதனையாக மட்டுமே நின்று விடாமல் சமுதாய மரபாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் உணர்கிறோம்.

நமது நாட்டில் அறிவு வேறு, வாழ்க்கை வேறு என்ற எண்ணம் நிலவு கிறது. வைரஸ் நோயினால் அம்மை வரு கிறது என்று தெரிந்து கொண்டிருக்கிற விஞ்ஞானம் படித்தவர்கள் கூட, அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முயல்வதில்லை. வீட்டில் மலஜலங்கழிக்க 'பிளஷ் அவுட்'டை வைத்திருப்பவர்கள் கூட, குழந்தைகளைத் தெருவில் மலஜலம் கழிக்க அனுமதிக்கின்றனர். பண்பாடு பற்றிப் படித்தவர்கள் கூட, தன் காரியம் என்று வரும் போது கியூவை எல்லாம் மதிக் காமல் அடித்து மோதி ரயிலேறுவதையும், பஸ் ஏறுவதையும் பார்க்கிறோம். ஓர் அக்கிரமம் நடந்து விட்டதென்றால், அதற்கு எதிராகக் குரல் கொடுக்கக் கூடத் தயங்கும் படித்தவர்கள் ''நமக்கேன் வம்பு'' என்று நடப்பதைப் பார்க்கிறோம்.

நம் நாட்டில் படிப்புக்கும் — நடைமுறைக் கும் உள்ள இடைவெளி பெரிதாக இருக் கிறது. 'படிப்பது விஷயங்களைத் தெரிந்து கொள்ள' என்ற நினைப்புடன் பட்டம் பெறுகிறோம். நம்முடைய அறிவைப் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வாதிட முனைகிறோம். படிப் பைக் காட்டி — பட்டத்தைக் காட்டி — பிழைப்பு நடத்துகிறோமே ஒழிய படிப்பை வாழ்வதற்குப் பயன்படுத்துவதில்லை.

''கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' — அதாவது, ''படித்ததை வாழ்வில் பயன்படுத்து'' என்று தெளிவாகக் கூறி யிருக்கிறார் வள்ளுவர்.

'ஆறுவது சினம்' என்பதை மாணவனை நெட்டுரு போட்டுப் பரீட்சையில் விளக்க மெழுதச் செய்வதுடன், கோபத்தை எப்படி சமாளிக்கலாம் என்றும் கற்றுத் தந்து பயிற்சி அளித்தோமானால் காலப்போக் கில் சாந்தமாக இருப்பதே இயல்பாக மாறி விடும். ரசாயன உண்மைகளை விளக்க ஆய்வுக் கூடத்தில் சோதனை செய்து புரிந்து கொள்வது போல, நல்ல குணங் களை ஏன் மாணவனது பழக்கமாக மாற்றக் கூடாது? நல்லொழுக்கம், தைரியம், தன்னம் பிக்கை, உழைப்பு, சளைக்காத மனம், கட்டுப்பாடு, லட்சியம், அன்பு, அமைதி, கலை உணர்வு போன்ற உயர் பண்புகள் மாணவனது இயல்பாக மாறுகிற அளவில் ஏன் பயிற்சி அளிக்கக் கூடாது? இதற்கெல் லாம் ஆன்மீகம் அடிப்படை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இவை யெல்லாம் இணைந்ததாக நமது பண்பாடு விளங்க வேண்டும்.

ஒரு சமுதாயம் சீர்பெற, முதலாவதாகக் குடும்பத்திலே இத்தகைய பண்பாடு வாழ் கின்ற உண்மையாக நிலவ வேண்டும். இரண்டாவதாக, பள்ளிக்கூடங்களிலே பயிற்சிகள் மூலம் அது மாணவனது வாழ் வின் பகுதியாக அமைய வேண்டும். மூன்றா வதாக, சமுதாயம் மதிக்கும் பண்புகளாக அவை சமுதாயத்தில் போற்றப்பட வேண் டும். அப்படி உயர் குணநலன்களை, பண்புகளைக் கடைப்பிடிக்காதவர்கள் சமுதாயத்தால் இழிவாகக் கருதப்பட்டுத் தேவை எனில் தண்டிக்கப்படும் ஒரு நிலை யும் உருவாக வேண்டும். ஒரு நல்ல சமுதா யம் உருவாக இந்த மூன்று கோணங்களி லிருந்தும் நாம் அணுக வேண்டும்.

எங்கே துவங்குவது என்று கேட்கிறீர் களா? முதலில் பள்ளிக்கூடம்; பின் குடும் பம்; பிறகு சமுதாயம் என்று ஏன் நாம் வரிசைப்படுத்தக் கூடாது?

ஆன்மீக — தார்மீக நெறிகள் கலந்த படிப் பும் பொது வாழ்க்கையும்தான் நாட்டின் நிரந்தரத் தேவைகள். அவற்றில் நம் பிக்கை இல்லாதவர்களை நாம் கழற்றி விட்டு விடுவது நல்லது. இதுதான் தருணம்.

ராமபாணம்

ஆபீஸ் விட்டுக் கிளம்பியதும் நெடு நாட்களாகவே சினிமா பார்க்காதது நினைவுக்கு வரவே, இன்று ஏதேனும் சினிமா பார்க்கலாம் என்ற முடிவோடு சைக்கிளை வேகமாக மிதித்தேன்.

என் மனைவி எப்போதுமே மாலைச் சமையலை ஐந்து மணிக்கெல்லாம் முடித்து விடுவாள். அதனால் எப்போது போய்ச் சொன்னாலும் நொடியில் புறப்பட்டு விடுவாள். பிள்ளை குட்டி இல்லாதது இந்த வகையிலும் பள்ளியில் — கல்லூரியில் இடம் பிடிக்க வேண்டிய தொல்லை இடையாது என்பதிலும்தான் லாபகரமானது.

நான் சைக்கிளை ரோட்டிலேயே நிறுத்தி விட்டுச் சறுக்கு மேட்டில் ஏறி நின்று எங்கள் போர்ஷன் கதவைத் தட்டினேன்.

கதவைத் திறந்த அவளின் முகம் சூம்பிக் கிடந்தது. அவள் கண்கள் கலங்கினாற் போல் இருந்தன. அழுதிருக்க வேண்டும்!

ஹாலில் மூலையிலிருந்த பிளாஸ்டிக் பக்கெட்டிலிருந்து தண்ணீர் எடுத்து அங்கேயே கை, கால்களைக் கழுவிக் கொண்டேன்.

விதி! வேறென்ன செய்வது?

பழைய ஊரில் அட்டாச்ட் பாத்ரூம். அங்கங்கே குழாய். திருகினால் தித்திக்கும் தண்ணீர். இங்கே ஒரு குடம் நல்ல தண்ணீருக்கு ஒட்டகமாய் அலையும் நிலை. வெளியே போய் விட்டு வந்து கைகால்களைக் கழுவ வேண்டுமானால் நூறடி தூரத்தில் இருக்கும் கிணற்றடிக்குச் சென்று மறுபடியும் மண் தரையில் சாக்கடை நீர்ச் சிதறலை மிதித்துக் கொண்டுதான் திரும்ப வேண்டும். அதனால் நாங்கள் ஹாலின் மூலையிலேயே கை கால்களைக் கழுவிக் கொண்டோம் விதியேயென்று.

இந்த ஊரில் குதிரைக் கொம்பு கூடக் கிடைத்து விடலாம்; ஆனால் வாடகைக்கு நல்ல வீடு கிடைப்பது அபூர்வத்திலும் அபூர்வம்.

பக்கத்துப் போர்ஷன்காரனும், எங்கள் துறை ஆள்தான். அவன் வேறு ஆபீஸ். வீட்டுச் சொந்தக்காரரும் எங்கள் துறையே. அவர்கள் சென்னையில். அவனும் பக்கத்துப் போர்ஷன்காரனும் பால்ய சிநேகிதர்கள்.

நாங்கள் 'வி'; பக்கத்துப் போர்ஷன்காரன் 'என்.வி.' வீட்டுச் சொந்தக்காரர் வீட்டை தோஸ்தின் மேற்பார்வையில்தான் விட்டுச் சென்றிருந்தான். குடியமர்த்துவது, வாடகை வாங்கி அனுப்புவது எல்லாமே இவன்தான்.

அந்தக் கிரீடம் இவர்களைத் துள்ளலாட்டம் போட வைத்தது.

பக்கத்துப் போர்ஷன்காரனின் மனைவி அசகாய சூரி! பத்து வயதில் ஆரம்பித்து மூன்று குழந்தைகள். இன்னமும் சின்னப் பெண் போலவே ஓடியாடிச் சிட்டாய்ப் பறப்பாள். சிக்கனத் திலகம். ஊரான் விரலால் பல்தேய்ப்பவர்கள். ஆனால் சுத்த பத்தம் கொஞ்சம் கூடக் கிடையாது.

நாள் கிழமையில்தான் — அமாவாசை, கிருத்திகை — எக்கச்சக்கமாய் மீன் வாங்கி வந்து கிணற்றடியில் போட்டுச் சுத்தம் செய்வாள் — முக்கால் மணி நேரத்திற்கு மேலாக.

இதற்கு பயந்து என் மனைவி தெருவிலிருக்கும் அடிக்குழாயில்தான் நீரெடுத்துக் காரியம் பார்த்துக் கொள்கிறாள், தன் வரையில். பின்பக்கம் பார்வை கூட ஓட்டுவதில்லை. காலைக்கடன் இரவுக் கடனாகி விட்டது. வேறு வீடு பார்க்கச் சொல்லி நித்தம் நித்தம் புலம்பல்.

நான் பக்கத்துப் போர்ஷன்காரனை அழைத்து, "அப்பா, நாங்கள் 'வி' கொஞ்சம் பார்த்து நடந்து கொள்ளுங்கள்!" என்று தாங்க முடியாமல் ஒருநாள் சொல்லி விட்டேன்.

வந்ததே, பயங்கர எதிர்வினை!

பிள்ளைகளை நடக்கும் பாதையிலும் கிணற்றடியிலும் சிறுநீர் கழிக்கச் செய்தாள். கிணற்றில் தண்ணீர் சேந்தும் இடத்தில் சுற்றிவரக் கொஞ்சம் பள்ளம் செய்து, விடிவதற்கு முன் கரிப் பாத்திரங்களைப் போட்டு வைத்தாள். காலையில் எழுந்தால் அதன் முகத்தில்தான் விழிக்க வேண்டும்.

நான் இந்த உபசாரங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு தண்ணீர் எடுக்கக் கிணற்றடிக்குச் சென்றால் வீட்டிலிருந்து அம்பு மாதிரி வேகத்தில் ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து போட்டியாய்ப் பக்கத்திலேயே நிற்பாள்.

ஒரு பக்கமே வாசல் உள்ள வீடு. அதனால் எத்தனை நேரம் வெளிக்காற்றைச் சுவாசிக்காமல் வீட்டினுள்ளேயே அடைந்து கிடப்பது என்று கொஞ்சம் கதவைத் திறந்து வைத்து, என் மனைவி வாசல் நிலைக் கட்டையிலும், நான் அருகே ஈஸிசேரிலுமாகக் கிடந்து சிறிதுநேரம் வாராந்திரிகளைப்

புரட்டுவோம்.

அது அவளுக்குப் பொறுக்காது. நாங்கள் ஜோடி போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கோமாம். பிள்ளைகளை அனுப்பி இப்படியும் அப்படியுமாக நடைபோட்டு, "தூ... தூ..."வெனக் காரித் துப்ப வைத்தாள்.

நாங்கள் இதையெல்லாம் கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டேதான் காலம் கடத்தி வருகிறோம்.



இந்த ஊர் ஒன்றும் எங்களுக்குப் புதிதல்ல. ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் வசித்த ஊர்தான். முன்பு நாங்கள் குடியிருந்த வீட்டின் ஒரு போர்ஷனில் ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஒருவர் குடியிருந்தார். அவருக்குச் சொந்த ஊர் இதுதான். ரொம்ப நல்ல மாதிரி. தன்மையாகப் பேசுவார். அவர் ஊர் முழுக்கச் சுற்றுவதால் டவுனில் எங்கே வீடு காலியிருக்கும் என்று அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அவரைப் பார்த்தால் கண்டிப்பாக நல்ல வீடு கிடைக்கும் என்று என் மனைவி யோசனை சொன்னாள்.

எனக்கும் அது அற்புத யோசனையாகப் பட்டது.

நேற்று மாலை அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு இரண்டு பேருமாய்ப் போய் நின்றோம்.

குடித்தனங்கள் எல்லாம் இந்த ஏழாண்டில் மாறிவிட்டிருந்தன. எல்லாம் புதிய முகங்கள். அவர்களுடைய போர்ஷனைக் கண்டுபிடித்துப் போய்ச் சேர்ந்த எங்களுக்குப் பயங்கர அதிர்ச்சி!

மேஜை மீது ஹெல்த் இன்ஸ்பெக்டர் போட்டோவை வைத்து மாலையிட்டு விளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

உள்ளிருந்து வந்த அவர் மனைவி எங்களைப் பார்த்ததும் நினைவு கூர்ந்து, உடைந்து, என் மனைவியைக் கட்டிப் பிடித்துக்



–கோபுஸ்ரீ

கொண்டு அழுதார். அவர்கள் குழந்தைகளும் சேர்ந்து கொண்டனர்.

எங்களுக்கு மனசு பாரமாகி விட்டது.

நாங்கள் விசாரிக்க, கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த அம்மாள் நார்மலுக்கு வந்தார். நாங்கள் வந்த விஷயத்தை மெதுவாக அவிழ்த்து விட்டோம்.

''ஒரு வாரம் முன்னேதான் நீங்கள் குடியிருந்த அந்தப் போர்ஷன் காலியாச்சு. இப்போ வாடகையெல்லாம் ஏத்திப்புட்டாங்க! 350/–. சாவி என்னிடம்தான் இருக்கும். என்னைப் பார்த்துத்தான் நல்ல ஆளா வைக்கச் சொல்லியிருக்காங்க'' என்றாள் அந்த அம்மா.

150/– கொடுத்தது இன்றைக்கு 350/–.

அம்மாடி. அந்த அளவுக்கு அந்தப் போர்ஷன் தாளாது.

''இரண்டு நாள் டைம் கொடுங்கள். நாங்கள் யோசித்துச் சொல்லுகிறோம்!'' என்று சொல்லி விட்டுத் திரும்பியிருந்தோம்.

இதுவரை ஒன்றும் முடிவெடுக்கவில்லை.

''**எ**ன்ன, ஒரு மாதிரியா இருக்கே? வழக்கமான வயிற்று வலியா?'' என்றேன் என் மனைவியிடம்.

அவள் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் பெருகியது.

''வெளியே போய் நின்னா போதும்! பசங்கள், ஆத்தாள், கிழவி எல்லாருமாய்ச் சேர்ந்து தூ... தூ...ன்னு காறித் துப்புறதுகள். இனிமே மானங்கெட்டு ஒரு நிமிஷங் கூட நிக்கக் கூடாதுங்க!'' என்றாள் கண்ணீர் விட்டுக் கொண்டே.

எனக்குப் பகீர் என்றது.

''உண்மையில் துப்ப வேண்டியவங்க நாம! நாம் பொறுத்துண்டு போறோம். இதுகள் துப்பறதா?'' நான் அவர்களைச் சாபமிட வாயெடுத்தேன். அதற்குள் அவள் விரைந்து என் வாயைப் பொத்தினாள்.

''வேண்டாம். நீங்க ஒன்னும் சொல்லிடாதீங்க. எல்லாத்தையும் ராமபாணமா மனசுக்குள்ளேயே போட்டு வெச்சுக்குவோம். ராமபாணத்துக்கு இணை ஏதுமில்லே. வீட்டுக்காரன்கிட்டே சொன்னா ஒரும் எடுபடாது. அவன் நண்பனை விட்டுக் கொடுக்க மாட்டான். கவர்னர் இப்போ 85/—+ ஒரு டி.ஏ. தந்திருக்கார். அதை வெச்சுப் பழைய போர்ஷனுக்கே போயிடுவோம். ஏழை பாழைல்லாம் கூட அந்தந்த சீசன் பழங்களை வாங்கித் தின்கிறாங்க. நம்மாலே முடியலே. மாச மொதல்லே மொத்தமா பணம் பார்க்கிறோமேயொழிய அந்தந்தக் கடனுக்குப் பிரிச்சுக் குடுத்துட்டா அந்த தேதிக்கு மேலே கையிலே ஒண்ணுமில்லே. வெட்டிச் சோத்தைத்தான் தின்னுண்டிருக்கோம். இந்த நூறு ரூபாய் ஏறிச்சே பழம், பிஸ்கட், எல்லாம் வாங்கிச் சாப்பிடலாம்னு நினைச்சேன். நம்ம வயித்துக்கு விதி அவ்வளவுதானோ என்னமோ! என்ன சொல்றீங்க?''

''சரி. நாளைக்கே வளையலை அடகு வைச்சு அட்வான்ஸ் தந்து விடுவோம். இங்கேயிருந்து அட்வான்ஸ் அவ்வளவு சீக்கிரம் வராது... போன ஜென்மத்துக் கடன்னு நினைச்சுக்குவோம்... சரி... இப்ப நாம சினிமாவுக்குப் போறோம்!'' என்றேன்.

அவள் தலையாட்டி விட்டுத் தயாராக அறைக்குள் நுழைந்தாள்.

படம் விட்டுத் திரும்பி வந்தால் பக்கத்துப் போர்ஷனில் ஒரு பெண்ணின் உரத்த குரல்.

அசகாய சூரியின் குரலல்ல அது.

கொஞ்ச நேரம் கழித்து அந்தக் குரலுக்குரியவள் எங்கள் போர்ஷன் கதவைத் தட்டினாள்.

நான் சாப்பாட்டிலிருந்து எழுந்து எச்சில் கையோடு சென்று கதவைத் திறந்தேன்.

''நான் வீட்டுச் சொந்தக்காரரின் மனைவி'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

நான் தெளிந்து, ''வாங்க... வாங்க...'' என்றேன். அவள் உள்ளே வந்து நின்றாள்.


''நீங்க ஏன் உங்களுக்குள்ள கஷ்டங்களைச் சொல்ல மாட்டேங்கறீங்க? இங்கே என்ன நடக்குதுங்கறத நான் தகுதியான ஆள் மூலமாய்த் தெரிஞ்சுக்கிட்டேன். நட்புக்கும் ஒரு எல்லை உண்டு... அதுக்காக வாடகையிலே அவங்களுக்கு நல்ல சலுகை காட்டியிருக்கோம்... என்னமோ சொல்வாங்களே... இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிக்கிறான்னு... அப்படி இவங்க நடந்துக்கிட்டா நாங்க பொறுத்துக்க மாட்டோம். வீடு கட்டி ஒரு வருஷம் கூட ஆகலே... நீங்க மூணாவது குடித்தனக்காரர்! இவங்க வர்றவங்களையெல்லாம் ஓட்டிப்பிட்டுத் தாங்களே ஆளலாம்னு நினைக்கிறாங்க.... ஒரு வாரத்துக்குள்ளே காலி பண்ணியாகணும்னு அவங்ககிட்டச் சொல்லியிருக்கேன்...'' என்றவள் என் பதிலை எதிர்பாராமல் சறுக்கு மேட்டில் இறங்கி மறைந்து போனாள்.


எச்சில் கை உலர்வது கூடத் தெரியாமல் சிலையாகிப் போயிருந்தேன்.

ராம பாணத்திற்கு இவ்வளவு, சக்தியா?

அரசியல்வாதி: ஆளும் கட்சியைச் சேர்ந்தவருக்கு அம்பாஸிடர் பதவி கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் என்ன பாவம் செய்தோம்? எங்களுக்கு ஒரு மாருதி பதவியோ, கான்டெஸா பதவியோ தரக் கூடாதா?

— எஸ். முகம்மது யூசுப்.





சிலை உருவாகிறது

ஆறு கோடி செலவில் ஒரு சிலை

எம். ஜி. ஆரை அரசியல் அண்ணனாகக் கருதுவதுதான் காரணமோ என்னமோ, திராவிடக் கட்சிகளுக்கு இருப்பது போன்ற சிலை வைக்கும் ஆர்வம் என். டி. ஆரையும் பற்றிக் கொண்டது. ஹைதராபாத்தில் பிரும்மாண்டமான ஹுசேன் சாகர் ஏரியைச் சுற்றி முப்பத்து மூன்று சிலைகளைச் சென்ற வருடம் நிறுவினார். சென்னைக் கடற்கரையில் அண்ணாதுரை நிறுவிய சிலைகளை விட அதிகம்!

ஆனால் என். டி. ஆர். இத்துடன் திருப்தி அடையவில்லை. இரட்டை நகரான ஹைதராபாத் – செகந்திராபாத்தைப் பிரிக்கும் ஹுசேன் சாகரின் இடையே ஒரு பெரிய பாறை இருக்கிறது. அதற்கு ஜிப்ரால்டர் பாறை என்று பெயர். அந்தப் பாறை மீது மிகப் பெரிய புத்தர் சிலையை நிறுவப் போகிறார், என். டி. ஆர். சிலையின் கன பரிமாணங்கள் 73 X 17 X 11 அடி! 450 டன் எடை! இதை நிறுவ ஆகப் போகும் செலவு... ஆறு கோடியே சொச்சம்!

எழுபத்துமூன்று அடி புத்தர் சிலையை உருவாக்கி வருகிறவர் தமிழர். – கணபதி ஸ்தபதி. அவர் தலைமையில் நூறுக்கு மேற்பட்ட தமிழகச் சிற்பிகள் பணியாற்றிச் சிலையைக் கிட்டத்தட்ட செதுக்கி முடித்து விட்டார்கள். நகாசு வேலைகள்தாம் பாக்கி.

கணபதி ஸ்தபதி, அமெரிக்காவில் ஹிந்துக் கோயில்கள் முதல், தில்லி காமாட்சி அம்மன் கோயில் வரை பல ஆலயங்களை வடிவமைத்து உருவாக்கித் தந்திருப்பவர். புத்தர் சிலைக்குப் பொறுப்பேற்றதும் தகுந்த பாறையைத் தேடிச் சுற்றோ சுற்று என்று சுற்றினார். கடைசியில் செகந்திராபாத்திலிருந்து 70 கி. மீ. தூரத்தில் சிலைக்கேற்ற மலை கிடைத்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன் முதல் உளிச் சத்தம் கேட்டது. 75' X 20' X 15' கன பரிமாணத்தில் ஒரே பாறையை மலையிலிருந்து விள்ளாமல் விரியாமல் வெட்டிப் பிரித்து எடுப்பதே ஓர் அபார சாதனை! முழுசாகப் பாறையைப் பெயர்த்து எடுத்தபின், தமிழகச் சிற்பிகள் அந்த அத்துவானக் காட்டிலேயே சிலை செதுக்கும் பணியைத் தொடர்ந்தார்கள். மூன்று ஆண்டுகள் உளிச்சத்தம் அங்கு கேட்டு வந்தது. கூர் மங்கிய உளிகளைத் தட்டிக் கொட்டித் தீட்டித் தருவதற்காகவே பிரத்தியேகமாக ஓர் உலைக்களம் அமைக்கப்பட்டது.

கர்நாடகாவில் உள்ள கோமதீஸ்வரர் சிலை நமக்குத் தெரியும். அது, இன்று இருக்கிற இடத்திலேயே வடிக்கப்பட்டது. ஆனால் இந்தப் புத்தர் சிலையையோ ஹைதராபாத்துக்கு 70 கி. மீ. எடுத்துச் செல்ல வேண்டும். உலகம் தழுவிய அளவில் இதற்கு அரசு 'டெண்டர்' கோரியது. கடைசியில் மேற்கு ஜெர்மானிய 'மான்' நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன், 'ஏ. பி. ஸி. – இந்தியா' என்ற நிறுவனம் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இதற்கு அந்நிறுவனம் பெறும் தொகை ரூ. ஒன்றேமுக்கால் கோடி! 192 டயர் சக்கரங்களுடன் கூடிய 'டிராலி'யை 440 குதிரை சக்தி கொண்ட ''டிராக்டர்'' இழுத்துப் போனது.

அதற்கு முன் சிலையை டிராக்டரில் ஏற்றுவதே ஒரு பெரிய சாதனையாக விளங்கியது. வழியெங்கும் சாலைகள் பலப்படுத்தப்பட்டன; பாலங்கள் பழுது பார்க்கப்பட்டன. இதற்கு நாற்பது லட்சம் செலவு!

நவம்பர் 14 – ஆம் தேதி சயன நிலையில் புறப்பட்ட புத்தர் சிலை, வழியெங்கும் மக்களின் வழிபாடு, தரிசனத்தை ஏற்று, ஆசி வழங்கிக் கொண்டு ஹைதராபாத் வந்து சேர்ந்தபோது என். டி. ஆர். எதிர்கொண்டு வரவேற்றார். இன்னும் ஒன்பது மாதங்கள் வேலை செய்து சிற்பிகள் நகாசு வேலைகளை முடிப்பார்கள். பின்னர் நூறு அடி ஆழம் தண்ணீரில் மூழ்கி இருக்கும் ஜிப்ரால்டர் பாறையில் சிலை, நிற்கும் நிலையில் நிறுவப்பட வேண்டும். இது மேலும் ஓர் அசுர சாதனையாக விளங்கும். கரையிலிருந்து ஏரியின் நடுவே உள்ள பாறைக்குச் சிலையை எடுத்துப் போக ஸ்பெஷல் பாலம் நிறுவப்படவிருக்கிறது. இதற்கு இன்னொரு 45 லட்சம் ஒதுக்கியுள்ளார்கள்! ஜிப்ரால்டர் பாறை சிலையைத் தாங்கும் உறுதி படைத்ததுதான் என்று நிபுணர் குழு சான்றிதழ் வழங்கியுள்ளது. எதற்கும் இருக்கட்டும் என்று முன்னெச்சரிக்கையாகச் சிலையை ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு இன்ஷியூர் செய்துள்ளனர்!

வரிப்பணம் வீணாவதாக முணுமுணுப்பவர் ஒருபுறமிருக்க, கருணாநிதிக்கு வள்ளுவர் கோட்டம் போல், தமக்கு இந்தச் சிலை புகழ் பெற்றுத் தரும் என்று கருதுகிறார் என். டி. ஆர். கின்னஸ் புத்தகத்தில் இந்தச் சிலையும் அதற்குக் காரணமானவர்கள் பெயர்களும் இடம் பெறும் என்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள்.

— சுபஸ்ரீ

ஜெயலலிதா அணியில் பாராட்டும்படியான அம்சம் என்ன ?

நீங்கள்
கேட்டவை
— தராசு

* வி. செல்வராசு, வலங்கைமான்.

? 'காங்கிரஸை ஒழித்தே தீருவோம்' என்கிறாரே ராமதாஸ்?

! தாராளமாகச் செய்யட்டும்; 'அதை ஜனநாயக முறைப்படி செய்யுங்கள்' என்பது தான் நம் கோரிக்கை.

* எம். ஏ. பாஷா, கடலூர்.

? ஸ்டாலின் விவகாரத்தில் கலைஞரின் ராஜதந்திரம் எப்படி?

! ஜானகி அணி கே. ஏ. கே. வை ஆயிரம் விளக்குத் தொகுதியில் போட்டியிடச் செய்யாமல் நைஸாக வேறிடத்துக்கு அனுப்பி வைத்து விட்டாரே, அதைத்தானே கேட்கிறீர்கள்? ஸ்டாலின் தோற்றால் அது வெறும் தந்திரம்; ஜெயித்தால் ராஜதந்திரம்!

* பாளை அசோக், திருச்சி.

? கே. பாக்யராஜ்; டி. ராஜேந்தர் — ஒப்பிடுக.

! முன்னவர் பிய்த்துக் கொண்டு கிளம்பியவர்; பின்னவர் கிடுக்கிப் பிடியில் சிக்கியவர்.

* பி. கே. சங்கர், சென்னை.*

? எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின் அவரது வாழ்க்கைத் துணைவியாருக்குக் கட்சிப் பிரமுகர்கள் காட்டிய பாசம், பரிவு, மரியாதை போன்று அண்ணா மறைவுக்குப் பின் அவரது மனைவியிடம் காட்டவில்லையே, ஏன்?

! யார் சொன்னது அப்படியென்று? நிறையவே அன்பு காட்டினார்கள். ஆனால் அது சுயநல நோக்கில் என்பதை ராணி அண்ணாதுரை வெகு சீக்கிரம் புரிந்து கொண்டு விட்டார். ஜானகி எம். ஜி. ஆருக்குக் கொஞ்சம் நாளாகும் போலும்!

* கே. வி. நாதன், நெய்வேலி.

? சேவல் கூவிப் பொழுது விடியுமா? அல்லது சூரியன் உதித்துப் பொழுது விடியுமா?

! உமது வோட்டு யாருக்கு என்று புரிந்து போயிற்று. மகிழ்ச்சிதானே? கூடவே கீழே உள்ள கேள்வி பதிலையும் படித்துக் கொள்ளுங்கள்!

* என். கந்தசாமி, இராமேசுவரம்.

? ''வேட்பாளர் பட்டியலைக் கூட தில்லியின் அனுமதி இன்றி வெளியிடத் துணிவில்லை. இந்த லட்சணத்தில் காமராஜர் ஆட்சி அமைக்கப் போவதாக மார்தட்ட மூப்பனாருக்கு வெட்கமாயில்லையா?'' என்று கருணாநிதி கேட்கிறாரே?

! 'நானாவது என் தலைவரிடம் வேட்பாளர் பட்டியலைக் காட்டி, சில மாற்றங்களுடன் வெளியிட்டேன். நீங்கள் வி. பி. சிங்கைத் திருப்திப்படுத்த அல்லவா வேட்பாளர் பட்டி

* ''ஒழித்தே தீருவேன்!''



* ராஜ தந்திரம்!



* சிக்கினார்!



* பயங்கரக் குற்றம்!



யலை மாற்றினீர்கள்?' என்று மூப்பனார் திருப்பிக் கேட்க முடியும். இதுபோன்ற வார்த்தை ஜாலங்கள், வாக்குச் சாதுர்யங்களில் மயங்கி விடாமல் வாக்காளர்கள் ஒவ்வொரு கட்சியின் கொள்கைகள் என்ன, செயல் திட்டங்கள் என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

* மேலை பழ. நாகப்பன், சென்னை — 41.

? ராஜீவின் சீன விஜயம் குறித்து?

! 'பழையதை மறப்போம்; புதிய அத்தியாயம் படைப்போம்' என்று சீனத் தலைவர்கள் கேட்டுக் கொள்ள, நமது பிரதமரும் அதைப் பெருந்தன்மையுடன் ஏற்க, பதினாலாயிரம் சதுர மைல் இந்தியப் பிரதேசத்தை நாம் அடியோடு மறந்துவிட வேண்டியதுதான் என்பது உறுதியாகி விட்டது! சீனாவுக்கு மிகப் பெரிய வெற்றிதான்!

* க. தியாகராசன், நெய்வேலி.

? 'காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க ராஜீவ் காந்தி ஒருவரே போதும்' என்கிறாரே வி. பி. சிங்?

! எதிர்க்கட்சிகள் விஷயத்தில் தங்களைத் தாங்களே தோற்கடித்துக் கொள்ளக் கூடப் பலமான போட்டி நிலவுகிறதே!

* வி. அருண், கீரமங்கலம்.

? ஜெயலலிதா அணியில் உள்ள பாராட்டும்படியான அம்சம் என்ன?

! சிலர், 'அவருடைய அழகு' என்கிறார்கள். எனக்கு அதிலும் ஒப்புதல் இல்லை!

* ஏ. ஜி. கல்யாணசுந்தரம், மணியக்காரம்பாளையம்.

? தங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுள் மறக்க முடியாதவர் யாராவது உண்டா?

! அவரைப் போல் பாடம் போதிப்பதில் முழு ஈடுபாடு காட்டியவர்களும் கண்டிப்புடன் அன்பைக் கலந்து காட்டியவர்களும் பலர் இருந்திருக்கலாம். ஆனால் எஸ். கே. ராமச்சந்திரன் அவர்களை நான் நினைவு கூர்வது ரசாயனம், பௌதிகம் முதலிய விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை எளிய தமிழில் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படி எழுதி முன்னோடியாகத் திகழ்ந்ததற்காக.

* புரிந்து கொண்டார்! * தமிழில் விஞ்ஞானம்





* ரூ. 20 பரிசு பெறுபவர்:
பி. கே. சங்கர்,
15/8, 3-வது மெயின் ரோடு,
காந்திநகர், சென்னை — 20.

ஆங்கிலக் கலைச் சொற்களை அவர் மொழி பெயர்க்காமல் ஒலி மாற்றம் செய்து அளித்தார். இது பிராந்திய மொழிகளை வளம் பெறச் செய்யச் சுலபமான வழி என்பதையும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் உலக ஒருமைப்பாட்டுக்கும் வேகமான விஞ்ஞான வளர்ச்சிக்கும் பேருதவி என்பதையும் இன்று ஆட்சியில் இருப்பவர்கள் புரிந்து கொண்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.

* டி. சீனிவாசன், சென்னை.

? 'மூப்பனார் எங்கு போட்டியிட்டாலும் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்' என்று கூறிய சிவாஜி கணேசன், வேறு ஒரு தொகுதியில் போட்டியிடுகிறாரே? இதன் பின்னணி என்ன?

! 'கலைஞர் எங்கே போட்டியிட்டாலும் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்' என்று அப்துல் சமது கூடத்தான் சவால் விட்டார். இதையெல்லாம் நீங்கள் சீரியஸாய் எடுத்துக் கொள்வீர்கள் என்று அவர்கள் எதிர்பார்க்காததுதான் பின்னணி.

* கே. பி. ஷர்மா, குடியாத்தம்.

? பம்பாயில் நடந்த கிரிக்கெட் மாட்ச் ஒன்றில் வெங்சர்க்கார் — நடுவர்களுக்கிடையே நடந்த மோதல் குறித்து?

! அதைவிடப் பெரிய பயங்கரக் குற்றத்தைச் சித்து புரிந்து விட்டாரே? கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் கிரிக்கெட் பண்பை வளர்த்துக் கொள்ளாதது மகத்தான ஏமாற்றம்.

* எம். வி. வேங்கடேஸ்வரன், மேல்பட்டி.

? தேர்தல் விஷயமாக ஏதாவது விந்தையான செய்தி...?

! 'எந்தக் கட்சிக்கு வேணுமானாலும் பேரணியில் கலந்து கொள்ள எத்தனை ஆட்கள் வேணுமானாலும் அனுப்பி வைக்கத் தயார்!' என்று கட்டண விகிதங்களுடன், 'வேலை இல்லா இளைஞர் சங்கம்' அறிக்கை விட்டிருப்பது பற்றி ஒரு செய்தி வெளியாகியிருந்ததே, நீங்கள் கவனிக்கவில்லையா?

* ராகவன், சென்னை.

? பிராமணர் சங்கம் ஜெயலலிதா அணியை ஆதரிக்கிறதே?

! பிராமணர் சங்கத்தையா, ஜெயலலிதாவையா, யாரைக் கண்டு பரிதாபப்படுவது என்றே புரியவில்லை, போங்கள்!

இன்று இரவே விடை

10

நீச்சல் வீராங்கனை நிகிலாவின் மரணச் செய்தியை மாலைப் பத்திரிகைகள் பத்தி பத்தியாய் வெளியிட்டுக் கொண்டிருக்க, குளிர்ச் சாதனம் பொருத்தப்பட்ட பிரத்தியேக அறையில் அமைச்சர் காமோத் பிரசாத் போலீஸ் அதிகாரிகளுக்கு நடுவே வியர்த்துப் போயிருந்தார். திரும்பத் திரும்பக் கீழ்க்கண்ட வாக்கியத்தையே சொன்னார். வழுக்கையைக் கீறிக் கொண்டார்.

''நான் இதை எதிர்பார்க்கவில்லை....''

கமிஷனர் ஹில்லும் மற்ற போலீஸ் அதிகாரிகளும் அமைச்சரையே சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டொருவர் உதடுகளை அசைத்தார்கள்.

''மிக.... மிக... மோசமான சம்பவம்.''

''எல்லாமே... ப்ரீ—பிளான்ட்.. துல்லியமான ... திட்டம்...''

''எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் பத்திரிகை நிருபர்களுக்கும் நல்ல தீனி...! இஷ்டத்திற்குப் பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள்...'' அமைச்சர் சொல்லிப் பெருமூச்சு விட்ட வினாடி, அவரது உதவியாளர் நீளமான ஒயரோடு ஒரு டெலிபோனைத் தூக்கிக் கொண்டு பக்கத்து அறையினின்றும் வெளிப்பட்டார். அமைச்சரருகே குனிந்து சொன்னார்.

''ஸார்... டெல்லியிலிருந்து போன்...''

''பிரதமர் அலுவலகமா?''

''ஆமாம் ஸார்!''

காமோத் கை நடுங்க ரிஸீவரை எடுத்து, காதுக்குக் கொடுத்தார். தொண்டையினின்று குரல் இடறிக் கொண்டு வந்தது.

''ஹ...லோ...''

''மிஸ்டர் காமோத்...?''

''ஸ்.... ஸ்பீக்கிங்...''

''நான் நரேஷ் பண்டாரி... பேசுகிறேன். பிரதமர் சந்தோஷமாக இல்லை. பம்பாயில் என்னதான் நடக்கிறது என்பதை அறிய விரும்புகிறார். நீச்சல் வீராங்கனை நிகிலா இந்திய விளையாட்டுத் துறையில் ஒரு கோஹினூர் வைரம். அந்த வைரத்தை நாம் இழந்திருக்கிறோம்.''

காமோத் முகம் மாறிக் குரலை இழுத்தார். ''எவ்வளவோ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தும்....''

''பிரதமர் இந்த சமாதானத்தை ஏற்க மாட்டார். மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?''

காமோத் அவசரக் குரலில் சொன்னார். ''ஒலிம்பிக் வீரர்களுக்குக் கூடுதலான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அறையை விட்டு வெளியே வர யாருக்கும் அனுமதியில்லை. சென்னையில் இருக்கும் இந்தியாவின் தலைசிறந்த க்ரைம் பிராஞ்ச் அதிகாரி விவேக்கிற்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இன்னமும் ஒரு மணி நேரத்தில் அவர் பம்பாயில் இருப்பார்.''

''இன்று இரவுக்குள் இந்தியக் கழுகுகளை முடக்கி விடுவீர்களா?''

''அந்த நம்பிக்கை எங்களுக்கும் இருக்கிறது.''

''இரவு பத்து மணிக்குப் பிரதமர் உங்களோடு பேசுவார்.'' இந்த வாக்கியத்தை ஒரு கட்டளை மாதிரி சொல்லி விட்டு, மறுமுனையிலிருந்த நரேஷ் பண்டாரி ரிஸீவரை வைத்தார். காமோத்தும் ரிஸீவரை வைத்து விட்டு, வியர்த்துப் போன முகத்திற்குக் கர்ச்சீப்பைக் கொடுத்தார். உதவியாளரிடம் ஐஸ் வாட்டர் கேட்டார்.

ஸாண்டாக்ரூஸ் ஏர்போர்ட். இரவு மணி எட்டு.

ஏர் பஸ் **AK 427** ரன்வேயைத் தொட்டு, வேகம் குறைத்து, சகல இயக்கங்களையும் நிறுத்திக் கொண்டு, 'லாண்ட்' ஆனதும் அதன் இடுப்போடு ஒட்டிக் கொண்ட 'ஸ்டேர்ஸின்' உச்சியில், முதல் இரு பயணிகளாக விவேக்கும் ரூபலாவும் உற்பத்தியானார்கள்.

விவேக்கின் கண்களில் அந்த ராத்திரி நேரத்திலும் குளிர் கண்ணாடி தொற்றியிருந்தது. **'HAPPY MAN'** என்று ஊதா நிறத்தில் எம்பிராய்டரி செய்யப்பட்ட வாசகத்தோடு வெள்ளை பேகி சர்ட்டைச் சிவப்பு பேண்ட்டுக்குள் இன் பண்ணி, ஏர்போர்ட் காற்றில் அலையும் கேசத்தோடு ஸ்டேர்ஸில் உயரமிழந்து கீழே வந்தான்.

''என்னங்க...?'' அவன் தோளை உரசியபடியே நடந்த ரூபலா கூப்பிட்டாள்.


''ம்...''

''எனக்கு ஒரே டென்ஷனா இருக்குங்க....''

''எதுக்காக டென்ஷன்?''

''பம்பாய் போலீஸ் கமிஷனர் உங்களை எதுக்காகக் கூப்பிட்டிருப்பார்?''

''மெட்ராஸ் ஏர்—போர்ட்டிலிருந்து இங்கே வந்து சேர்கிற வரைக்கும் நீயும் இதே கேள்வியை நாலைஞ்சு தரம் கேட்



டுட்டே? பதிலைச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்க....''

''அவர் விளையாடற ரம்மி சீட்டாட்டத்துல ஒரு கை குறையுதாம். அதுக்காகத்தான் வரச் சொல்லியிருக்கார்...''

லௌஞ்சை நோக்கி நடந்து கொண்டிருந்த ரூபலா பிரேக் பிடித்த மாதிரி நின்று தன் பெரிய கண்களினால் அவனை முறைத்தாள்.

விவேக் புன்னகை புரிந்தான்!

''ஏன் நின்னுட்டே....?''

''நான் எவ்வளவு சீரியஸா கேட்டுட்டிருக்கேன்? உங்களுக்குக் கேலியா இருக்கா?''

''இதோ பார் ரூபலா... பாம்பே க்ரைம் பிராஞ்சிலிருந்து எனக்குக் கிடைச்சது, ஒரே யொரு கட்டளை வாக்கியம். 'விஷயம் அவசரம். உடனே வரவும்.' அந்த அவசரமான விஷயத்தைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. கமிஷனரைப் போய் மீட் பண்ணினாத்தான் விஷயம் வெளிச்சத்துக்கு வரும்.''

''யாராவது ஒரு பெரிய புள்ளி மர்டர் ஆகியிருப்பாங்களா?''

''இருக்கலாம்...''

''பேங்க் கொள்ளை...?''

''அதுவும் சாத்தியமே...''

''எனக்குப் படபடன்னு இருக்கு...''

இருவரும் மெல்ல நடந்து, ஏர்போர்ட் லௌஞ்சைத் தொட்ட போது, போலீஸ் அதிகாரி ஒருவர் விவேக்கை சல்யூட்டோடு எதிர். கொண்டார். அடையாள அட்டையைக் காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டார். சொன்னார்:

''கார் காத்திருக்கிறது ஸார்...''

நடந்தார்கள்.

விவேக் கேட்டான்.



"நேரே இப்போது எங்கே போகிறோம்...?"

"உங்களுக்கு... ஹோட்டல் காபிடலில் அறை ஏற்பாடாகியிருக்கிறது. சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு நீங்கள் கமிஷனரைச் சந்திக்கலாம்."

லௌஞ்சின் மையத்திற்கு அவர்கள் வந்திருந்த போது, ஸ்பீக்கரில் அந்த அறிவிப்பு கேட்டுக் கொண்டிருந்தது.

"மிஸ்டர் விவேக்... க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர்... ஃப்ரம் மெட்ராஸ். ஏ....போன் கால் ஈஸ்... அவெய்ட்டிங் யூ....".

நடந்து கொண்டிருந்த விவேக் நின்றான்.

"எனக்கு ஏதோ டெலிபோன் கால் வந்திருப்பதாக அறிவிப்பு...."

"வாருங்கள்" — அதிகாரி ரிசப்ஷன் கௌண்டரை நோக்கி அழைத்துப் போனார். நெயில் பாலீஷ் பூச்சு விரல்களில் ரிஸீவரை ஏந்திக் கொண்டு, அழகாக உடுத்திக் கொண்டு நின்றிருந்த ரிசப்ஷனிஸ்ட்டை நெருங்கினார்கள். அவள் புருவத்தை உயர்த்த,

"ஐ யாம் விவேக்..."

சொல்லி, கை நீட்டி ரிஸீவரை வாங்கிக் கொண்டான்.

"ஹலோ..."

"மிஸ்டர் விவேக்...." ஒரு குரல் கரகரப்பாய்க் கேட்டது.

"எஸ்...."

"மனைவி ரூபலாவோடு இந்த ராத்திரி நேரத்தில் பம்பாய் வந்திருக்கும் உனக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்..."

"யா... யார்... நீ...?"

"போய் கமிஷனரைக் கேள். சொல்வார்...! தம்பி விவேக்...! பம்பாய் நிலைமை இப்போது சரியில்லை. போலீஸ் அதிகாரிகள் அநேகம் பேருக்கு டிஸெண்ட்ரி. லீவில் இருக்கிறார்கள். பம்பாய் கமிஷனர் உனக்கு ஒரு வேலையைக் கொடுப்பதற்காகத்தான் மெட்ராஸிலிருந்து உன்னை வரவழைத்திருக்கிறார். அந்த வேலையை நீ ஒப்புக் கொள்ளக் கூடாது..."

"சரி... பாஸ்...." விவேக் சிரித்தான்.

"என்ன கிண்டலா....?"

"எஸ்... பாஸ்..."

"இதோ பார்! இது விளையாட்டு விஷயமில்லை. இந்த இந்தியாவையே உலுக்கப் போகிற சில விபரீதங்கள் இந்த பம்பாய் மண்ணில் நடக்கப் போகின்றன."

"பரவாயில்லையே! நல்ல நேரத்திற்குத்தான் வந்திருக்கிறேன். அந்த விபரீதங்களைப் பார்க்க வேண்டுமென்று எனக்கும் ஆசை."

"முட்டாள்....!"

"உன்னுடைய பெயரை இவ்வளவு நேரம் கழித்தாவது சொன்னாயே? நன்றி. இன்ஷியல் என்ன...?"

"ராஸ்கல்....!"

"இன்ஷியல் ரொம்பவும் நீளம்தான்!"

"யூ... யூ..." அவன் கத்த — விவேக் சிரித்துக் கொண்டே "ரிசீவரை வைத்துவிட்டு எதிரில் ஏதாவது சுவர் இருந்தால் போய் முட்டிக் கொள்... போ..." என்றான்.

"டொக்!"

மறுமுனையில் ரிஸீவர் ஆத்திரத்தோடு சாத்தப்பட்டது. விவேக் ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பினான். போலீஸ் அதிகாரி கேட்டார்.

"டெலிபோனில் யார் ஸார்?"

"ஒரு வேண்டாத விருந்தாளி... நாம் புறப்படலாமா...?" ரிசப்ஷனிஸ்ட்டுக்கு ஒரு நன்றியை உதிர்த்து விட்டு எக்ஸிட் கேட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் விவேக்.

இரவு மணி பதினொன்று பத்து.

கமிஷனர் அலுவலகத்தின் அந்தரங்க அறை. சூரிய அஸ்தமனப் பின்னணியில் கழுகுகள் பறக்கும் அந்த வீடியோ காஸெட்டைப் போட்டுப் பார்த்த விவேக் ட்யூப் லைட்டை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த பின் கமிஷனர் ஹில்லிடம் திரும்பினான். கேட்டான்.

"இந்தியக் கழுகுகள் எழுதின லெட்டர்ஸ்?"

ஹில் காட்டினார்.

கடிதங்களை நிதானமாய்ப் படித்து

-அருள்வாக்கு



ஒரு வியாதிக்காரனை நன்றாகத் தேற்றிவிட்டு அப்புறம்தான் அவனிடம் வீட்டுப் பொறுப்பைத் தரலாம். ஒரு குழந்தையை அறிவு, மனஸ், தேஹ பலம் எல்

லாவற்றிலும் நன்றாக வளர்த்து அப்புறந்தான் அதனிடம் பொறுப்புத் தரலாம். ப்ரியம் இருக்கிறது என்பதற்காக ஒரு நோயாளியிடமோ, குழந்தையிடமோ வீட்டுப் பொறுப்புக்களைக் கொடுப்பார்களா? சாப்பாட்டு விஷயங்கூட இப்படித்தான். நோயாளியிடம் ப்ரியம், குழந்தையிடம் ப்ரியம் என்பதற்காக அடை, தோசை, பக்ஷணம் என்று திணிப்பார்களா? நம்முடைய பொது ஜனங்களில் பெருவாரியானவர்கள் அரசியல் ஞானத்தில் குழந்தைகளின் ஸ்தானத்திலிருப்பவர்கள். வெள்ளைக்கார ஆட்சி அறிவு ரீதியில் அவர்களைப் பலஹீனர்களாக, நோயாளிகள் மாதிரி ஆக்கி வைத்திருக்கிறது. இந்த ஸ்திதியில் அவர்களுக்கு தேச நிர்வாஹத்தில் பொறுப்புத் தருவோம், ஜனநாயக விருந்தை வாயாலும் மூக்காலும் திணிப்போம் என்றால் என்ன பண்ணுவது? முதலில் அவர்களை அறிவு ரீதியில் ஆரோக்யசாலிகளாகவும், குழந்தைத்தனம் விலகி பக்குவ ஸ்திதி பெற்றவர்களாகவும் உருவாக்க வேண்டியதே ஸ்வதந்திர இந்தியாவின் தலைவர்களுடைய பணி, கடமை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

முடித்தவிவேக்ஹில்லைஏறிட்டான். ''ஒலிம்பிக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்களுக்கு இந்த இந்தியக் கழுகுகளைப் பற்றித் தெரியுமா?

''தெரியாது...''

''ஏன் தெரியப்படுத்தவில்லை?''

''மினிஸ்டர்தான் சொல்ல வேண்டாம் என்று இன்ஸ்ட்ரக்ட் பண்ணினார்.''

''யூ... ஆர் ராங் ஸார். இந்த இந்தியக் கழுகுகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியப் படுத்த வேண்டியது அவசியமான ஒன்று.''

''விஷயம் தெரிந்தால் அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிக்கத் தயங்க மாட்டார்கள். புகழ், பணத்தைக் காட்டிலும் உயிர் பெரிய விஷயமாயிற்றே...?''

''ஸார்... நீங்கள் இந்தியக் கழுகுகளைப் பற்றி அவர்களிடம் சொல்லாமல் மறைப்பது பின்னால் சில மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இப்போதே குழுவில் இருக்கும் பெரும்பாலானவர்களுக்கு நிகிலாவின் மரணத்தைப் பற்றிச் சந்தேகம் வந்திருக்கலாம். ஹாக்கி காப்டன் உத்தம், கோச் குருதேவ் சிங், நிகிலா மூன்று பேருமே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது எதனால்.... யாரால் என்று அவர்கள் குழப்பமடைந்திருக்கக் கூடும். அந்தக் குழப்பத்தைத் தெளிவித்து, அவர்களைத் தயார்ப்படுத்துவது வரும் நிமிஷங்களில் நாம் மேற்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான வேலை...''

''அமைச்சரிடம் இதைப் பற்றிக் கேட்க வேண்டும்...''

''இப்போதே கேட்டுச் சொல்லுங்கள்.''

ஒரு நிமிஷம் யோசித்த ஹில், டெலிபோனை நாடினார். இரண்டாவது நிமிஷம் காமோத் தூக்கக் கலக்கத்தோடு லைனில் கிடைத்தார். ஹில் பேசி விட்டு ரிஸீவரை வைத்தார்.

''மினிஸ்டர் என்ன சொன்னார் ஸார்?''

''உங்க விருப்பப்படி செய்யச் சொன்னார்.''

''தாங்க்ஸ்... ஹோட்டல் காபிடலுக்குப் போய் விளையாட்டு வீரர்களை இப்போதே பார்க்கிறோம்... ஸார்.''

விவேக் எழுந்து கொண்டான்.

நேரம், சரியாய்ப் பன்னிரண்டு மணி.

ஹோட்டல் காபிடலின் சிறிய கம்யூனிடி ஹாலில் விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் அரை வட்டமாய்ச் சூழ்ந்திருக்க, எதிரே நின்ற விவேக் சொல்லிக் கொண்டிருந்தான்.

''பாராளுமன்றம் உடனடியாய்க் கலைக்கப்பட வேண்டுமென்பதும் அந்த கோரிக்கைக்கு ஆதரவாக ஒலிம்பிக் போட்டியை நீங்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதும் இந்தியக் கழுகுகளின் அடாவடித்தனமான வேண்டுகோள். இந்த அபத்தமான கோரிக்கையைத் தேசிய உணர்வுள்ள யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உயிருக்குப் பயந்து நீங்கள் ஒலிம்பிக் போட்டியைப் பகிஷ்காரம் செய்தால் உலக அரங்கில் அது இந்தியாவுக்கு ஒரு பெரிய தலைகுனிவை ஏற்படுத்தும். அந்த தலைகுனிவை உண்டாக்க நீங்கள் விரும்புகிறீர்களா...?''

கும்பலில் மௌனம்.

விளையாட்டு வீரர்கள் பயப் பார்வைகளோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். விவேக் தொடர்ந்தான்.

''ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக உங்களை லண்டன் கொண்டு போய்ப் பத்திரமாய்ச் சேர்ப்பிப்பது எங்களுடைய பொறுப்பு.''

'டெக்காத்தலேன்' அர்ஜுன் கிருஷ்ணா முன்னால் வந்தான். ''நடந்திருக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால், அந்த இந்தியக் கழுகுகள் எவ்வளவு துல்லியமாய்த் திட்டமிட்டுக் காரியத்தை ஆற்றியிருக்கிறார்கள் என்பது புரியும். அவர்களுக்கு ஆயிரம் கண்கள். அந்த கண்களையெல்லாம் கட்டி விட்டு, எங்களைப் பத்திரமாய் லண்டன் கொண்டு போய்ச் சேர்க்கும் நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா....?''

விவேக் சிரித்தான். ''நம்பிக்கையும் இருக்கிறது. காதும் காதும் வைத்த மாதிரி நீங்கள் எல்லோரும் லண்டன் போய்ச் சேர வழியும் இருக்கிறது.''

(தொடரும்)

ஜனநாயக மரபுகளைக் காத்த

மன்னர்

மகாராஜா சுவாதித் திருநாளை ஓர் இசை மேதை என்ற அளவிலேதான் அதிகமாக அறிந்திருக்கிறோம். ஆனால் அவர் ஆட்சி நடத்திய விதம் இந்நாட்டு மன்னர்கள் கவனிக்கத்தக்கது. இன்றைய அரசியல்வாதிகளுடன் ஒப்புநோக்கிப் பாருங்களேன்!



பத்மநாபதாசன் என்று கேரள நாட்டு மன்னர்கள் அனைவரும் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டார்கள். ஏன்? அரசன் ஆண்டவனின் பிரதிநிதியாகத்தான் அரசு புரிகிறான். பூமி அனைத்தும் ஆண்டவனுடையது என்ற தத்துவத்தை உணர்ந்த மன்னன், தன்னை இறைவனின் அடிமையாகக் கருதினான். அரசுரிமை பெற்றவனாகத் தன்னை எண்ணிக் கொள்ளவில்லை. மக்களின் நலனைக் கருதி ஆட்சி செய்பவனே தெய்வத் தன்மை பொருந்தியவனாகக் கருதப்படுகிறான்...

மந்திரிகள் மட்டுமின்றி அதிகாரிகளும் தம்மை அடிக்கடி சந்தித்துப் பேசினால்தான் நிர்வாகம் ஒழுங்காக இருக்கும் என்று அரசர் சுவாதித் திருநாள் எண்ணினார். இதற்காகவே ஹுஜூர்க் கச்சேரியைக் கொல்லத்திலிருந்து திருவனந்தபுரத்துக்கு இடம் மாற்றினார்...

தாசில்தார் மீது குற்றங்களை விசாரிக்கப் போன திவான் வேங்கடராயருக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. மேலும் பல முறை கேடான விஷயங்களை வேங்கடராயர் புரிந்திருக்கிறார் என்ற விஷயங்கள் மகாராஜா காதுக்கு எட்டின. காட்டில் தீ பிடித்தது போல் அரசன் மனம் நொந்தது. வேங்கடராயர் திரும்பியதும் அரசர் அவரை சந்திக்க மறுத்தார். திவான் பதவியை அவர் துறக்க வேண்டும் இல்லையெனில் அவர் மீது விசாரணை நடத்தப்படும் என்றார். வேறு வழியின்றி வேங்கடராயர் ராஜினாமா செய்தார்.

பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் துரையும் ஆங்கிலேய கவர்னரும் மகாராஜா சுவாதித் திருநாளுக்குப் பல தொல்லைகள் தந்து வந்தனர். ஆயினும் ஆங்கிலேயரிடம் உள்ள பல சிறப்பு இயல்புகளை மகாராஜா உணரத் தவறவில்லை. எதிரிகளாக எண்ண வேண்டிய அவர்களிடம் இருந்த திறமைகளைத் தமது மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தினார். பிரிட்டிஷ் ராணுவம் போலத் தமது ராணுவத்தை மகாராஜா சீரமைத்தார். ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து ஆங்கிலப் பள்ளிகள் திறந்தார். ஆங்கில வைத்திய முறைகளின் சிறப்பை அறிந்து மருத்துவமனைகளை உருவாக்கி, தடுப்பு ஊசி போடுவது போன்ற பல காரியங்கள் நடக்க வழிவகுத்தார்.

தமக்கு சகலத்தையும் கற்றுத் தந்த தமது குருவான சுப்பராயரை மிகவும் விரும்பி ஆசைப்பட்டு திவானாக்கியிருந்தார், மகாராஜா. ஆனால் அவரைப் பற்றி ஒரு 'கசமுசா' மக்களிடையே எழுந்தது. தமது குரு என்றும் பாராமல் உடனே விசாரணைக் கமிஷன் அமைத்தார் மகாராஜா. விசாரணைக் கமிஷன் சுப்பராயர் குற்றவாளியில்லை என்றே தீர்ப்பளித்தது. ஆனால் ராஜாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. பொது வாழ்வில் உள்ள ஒருவர் மீது மக்களுக்குச் சந்தேகம் வந்து விட்டால் கூடப் போதும், அவர் பதவியில் நீடிப்பது சரியில்லை என்று கருதி தம் குருவேயானாலும் அவரைத் திவான் பதவியிலிருந்து விலகுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆதாரம்: சுவாதித் திருநாள். எழுதியவர் மதிவொளி. பிரசுரம்: இலக்குமி நிலையம், 10, காசிம் சாகிப் தெரு, சென்னை — 14. விலை ரூ. 7.75

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3 1 5 4 3, 4 3 4 1 5 7: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 3 4 1 4 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



மத்திய அரசு ஊழியர்களுக்குக் கடன் வசதி உண்டு.